www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
ஏப்.26–மே 02,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 254

## மாகாணசபை பலப் பரீட்சை



## வன்னியில் மந்திரக்கோல்



## கூட்டத்தில் குழப்பம்

## அமீனின் சதி

## ரசிகைகள் துரத்தல்

## ரம்யா எங்கே போனார்?



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## வரவேற்பது சுலபம்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

பிரிட்டனில்
அயர்லாந்து உடன்படிக்கையை
ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார்
அக மகிழ்ந்து வரவேற்றுள்ளார்!

'ஊருக்குத்தான் உபதேசம்
உனக்கில்லைக் கண்ணே'
என்பதுபோல இருக்கிறது
அம்மையாரின் வரவேற்பு!

அயர்லாந்து உடன்படிக்கையை
பாராட்டி மகிழ்வதைவிட
அந்த உடன்படிக்கை
உருவான விதத்தை
ஆய்ந்து அறிவதே மேல்!

நீண்டகாலமாக
புரையோடியிருந்த பிரச்சனையை
தீர்க்கும் துணிச்சலுடன்
பிரிட்டிஷ் பிரதமர் பிளேயர்
எடுத்துவைத்த அடிகளை
உற்று நோக்குதல் நன்று!

தனக்கு முன்பிருந்த
ஆட்சியாளரால்
சாதிக்க முடியாத காரியத்தை
பிரதமர் பிளேயர் சாதித்தார்.

முன்பிருந்த ஆட்சியாளரில்
குற்றம் காண்பதைவிட
தனக்கு முன்பிருந்த
பிரச்சனையின் தாற்பரியத்தை
உணர்ந்ததுதான்
அவரது சாதனைக்கு அடிப்படை!

எதிர்க்கட்சியை நோக்கி
கையைக் காட்டிக் கொண்டிருந்தால்
அயர்லாந்து உடன்படிக்கை
அடுத்த நூற்றாண்டில்கூட
உருப்பெற்றிருக்க முடியாது!

நாடெங்கும் விவாதம்
நாள்தோறும் ஆராய்ச்சி
என்று அனுமார் வாலாக
நீட்டிக் கொண்டிருந்தால்
அங்கும் காரியம் ஆகியிருக்காது!

எதிர்ப்புக்கள் இல்லாமல்
வெற்றி இல்லை!
எதிர் நீச்சல் போட்டுக்
கரையை சென்றடைய
மனத் துணிச்சல் வேண்டும்!

பிரிட்டினிலும்
பிரதமர் பிளேயரின் முயற்சிக்கு
ஏகப்பட்ட எதிர்ப்புக்கள்
இல்லாமல் இல்லை!

முன்னாள் ஆளும் கட்சியான
இந்நாள் எதிர்க்கட்சியும்
ஒரு அரசியல் கட்சிதான்!
அரசியல் கட்சிகள்
சகல நாடுகளிலும்
அநேகமாக ஒரு ரகம்தான்!

அங்கும் எதிர்க்கட்சி
இன்றைய ஆட்சியை
தட்டிக் கொடுக்கவில்லை.
அயர்லாந்து உடன்படிக்கைக்கு
மனம் உவந்து ஒத்துழைக்கவில்லை!

அவ்வாறு இருந்தும்
சற்றும் தயங்காமல்
துரித கதியில் முன்னேறி
அரசியல் தீர்வொன்றுக்கு
அடித்தளம் போட்டுவிட்டார்
பிரதமர் பிளேயர்!

பிரதமர் பிளேயர்
பதவி ஏற்கும்போது
சமாதானப் புறா என்று
அவரை யாரும் வர்ணிக்கவில்லை!

பிரதமர் பிளேயரும்
ஆரவாரமான வாக்குறுதிகளை
அள்ளி வாரி வீசவில்லை!

அயர்லாந்து பிரச்சனையை தீர்க்க
யானைதாருங்கள் என்றும்
பிரிட்டிஷ் மக்களிடம்
பிளேயர் கேட்கவில்லை!

ஆனால், ஆரவாரம் இன்றி
காலவரையறை குறித்தலின்றி
கச்சிதமாக காரியம் பார்த்திருக்கிறார்.

ஆனால் இங்கோ
இனப்பிரச்சனை தீர்வுக்கு
ஆணை கேட்டுத்தான்
யானைக் கட்சியை
பதவியில் இருந்து இறக்கினார்
ஜனாதிபதி அம்மையார்.

ஆனால், இப்போதோ
யானைக் கட்சியின்
ஆசிர்வாதம் இருந்தால்தான்,
பானையில் உள்ளதை
பரிமாறலாம் என்கிறார்!

பானையிலும் ஏதுமில்லை
ஆனையும் ஒருநாளும்
ஒத்துழைக்கப்போவதில்லை!

உலகின் முன்பாக
முற்போக்கு முகம் காட்ட
நம் அரசியல் தலைவர்கள்
காண்பிக்கும் அக்கறையை
உலக முற்போக்கு மாற்றங்களை
கற்றுக் கொள்வதில்
காண்பித்தால் நாடு பிழைக்கும்!

அயர்லாந்து உடன்படிக்கையை
வரவேற்பது சுலபம்!
அந்த உடன்பாட்டை
உருவாக்கிய துணிச்சலை
அடியொற்றி நடப்பதே கடினம்!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## மானுட துன்பங்கள் ஏன்?

மனிதன் அறவாழ்வு வாழ்ந்தாக வேண்டும். அறவாழ்வு வாழ்ந்தால் மானுடம் காப்பாற்றப் படும். ஆகவே இறைவனும் அடிக்கடி அவதரித்தாகவே வேண்டும்.

இந்த அறவாழ்வுக்கு இடையூறாக இருப்பவர்கள் யார்? இவர்களும் மக்களே! இவர்கள் கட்டாயம் அகற்றப்படத்தானே வேண்டும்!

'பரித்ராணாய ஸா தூனாம் விநாசாய ச துஷ்க்ருதாம்!

தர்மஸம் ஸ்தாப னார்த்தாய ஸம்ரவாமி யு கே யு கே!!' என்று பகவத்கீதையில் சொல்லப்படுகின்றது.

இறைவன் எப்படி அவதரிக்கின்றான்? அவன் யுத்தம்; கொள்ளை நோய்; பஞ்சம்; விபத்து முதலியவைகள் வாயிலாகத்தான் அவதரித்து மக்களுக்கு துன்பத்தைக் கொடுக்கின்றான்.

இந்த துன்பம் மக்களை சீர்திருத்தவும்; தர்மம் தலையெடுக்கவும்; மரணத்தின் வாயிலாகக் கெட்டவர்களை மறைத்து வைக்கவும் உதவுகின்றது.

மானுடன் துன்பங்களை கண்டு கலங்கத் தேவையில்லை. அவை இறைவனின் அவதரிப்பே என்று பூரிப்படைய வேண்டும்.

மனிதனின் அறவாழ்வுக்கு தர்ம வாழ்க்கைக்கு இந்த துன்பங்கள் ஏற்படத்தானே வேண்டும்!

சி. சுந்தரலிங்கம், திருகோணமலை.

## பெற்றோரைத் திட்டுதல் கூடாது

பத்து மாதம் இன்னலுக்கு மேல் இன்னலைச் சுமந்து பெற்றெடுத்த தாயைக்கூட திட்டுபவர்களைக் காண்கிறோம். தனக்காக தன் தாய் ஏற்ற துன்பங்களை மனதில் கொண்டு புகழ் வார்த்தைகளால் குளிப்பாட்டப்பட வேண்டிய தாய், இன்று சாக்கடை வார்த்தைகளால் அதுவும் தன் பிள்ளைகளால் அபிசேகம் செய்யப்படும் மிக மோசமான நிலையைக் காண்கிறோம்.

"ஒரு மனிதர் தன் பெற்றோரைத் திட்டுவது பெரும் பாவங்களில் உள்ளதாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியபோது (ஸஹாபாக்கள்) "அல்லாஹ்வின் தூதரே! எந்த மனிதராவது தனது பெற்றோரைத் திட்டுவாரா?" என்று கேட்டார்கள் அதற்கு நபி (ஸல்) அவர்கள் "ஆம் ஒருவர் இன்னொருவரின் தந்தையைத் திட்டுகிறார் அப்போது அவர் இவருடைய தந்தையைத் திட்டுகிறார். ஒருவர் இன்னொருவரின் தாயைத் திட்டுகிறார் அப்போது அவர் இவருடைய தாயைத் திட்டுகிறார்." என்று விளக்கமளித்தார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு ஆஸ் (ரலி)

எனவே, பெற்றோர்களின் தியாகத்தை நினைவில் நிறுத்தி அவர்களிடம் மிகக் கண்ணியமாக தூய்மையான நல்ல சொல்லை பயன்படுத்தவும். ஏனெனில் தாயின் பாதத்தின் அடியில்தான் சுவர்க்கமுண்டு.

தொகுப்பு: எம்.எம். முகம்மது ஸாகிர், சாய்ந்தமருது-10.

## கவிதைப் போட்டி இல. 251

### பரிசுக்குரிய கவிதை

### அவசரகாலம்

ஜாக்கிரதை
அவசரகால சட்டம்
அமுலில் உள்ளது!
முகவரியை புலிவரியாய்
அவசரமாய் முடிவு செய்து
கைதும் நடக்கலாம்
காணாமலும் போகலாம்!
ஜாக்கிரதை
அவசரகால சட்டம்
அமுலில் உள்ளது!

ரி. மதிவாணன்,
வைரவப் புளியங்குளம், வவுனியா.



இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### இலவசம்

வடக்கு-கிழக்கை
பிரிக்க...
இங்கே கோடுகள்
இலவசம்!
பொதி உரிமையாளர்
பெற்றுக் கொள்ளலாம்!

எம். முஸம்மில்- அக்கரைப்பற்று.

### தேசியக்கொடி

அட...
வயோதிபத்தின்
தேசியக் கொடியில்
எத்தனை கோடுகள்?!

கே. ஜெகதீஸ்வரன்- மட்டக்களப்பு.

### பொதி

முகவரி இருந்தும்
கடிதம் வரவில்லை!
தபால் இலாகா
வேலை நிறுத்தம்!
தீர்வுப்பொதிதான்
திறப்பதே இல்லை!
தபால் பொதியுமா?

எஸ். பிரதீபா- நுவரெலியா.

### முகவரி

நீயிருந்த முகவரிகளைத்
தேடித் தேடி
உன் முகத்தில் வரிகள்
விழுந்தனவோ?

வீ. நித்தியானந்தன், ஹாலி-எல.

### இலங்கை

இருண்ட தீவின்
நடுவில்
உன் முகம்!

சுபா வரன்- கண்டி.

### நாளை

நம்பு தாயே
மானுடம் வெல்லும்!
நம் முகவரிகள்
நாளை உலகறியும்

எஸ். நிருபமா- கைதடி, யாழ்ப்பாணம்.

### இனி..

அம்மா!
ஐம்பது ஆண்டுகளாய்
ஏமாந்து போனாயே!
அம்மா!
இனத்தின் முகவரியை
இனிக் காப்போம்!

ஜே. சந்தியா- வத்தளை.

### அறிக்கை

ஃபக்ஸ் மெஷின்
இருந்தால்
நானும் ஒரு
அறிக்கை அனுப்பலாம்!
முழு நாட்டுக்கும்
முக விலாசம் காட்டலாம்!

என். கலைவாணி- கல்கிசை.

### பூமிரேகை

பூமியின் அழிந்த ரேகைகள்
உனது முகத்திலோ!
இருளிலாவது
இருப்பார்களா
உனது சந்ததிகள்?

எம்.ஏ. நிசாமுதீன்- பேராதனை.

### சாதனை

அழிவுத் தீவில்
உன் நீண்ட ஆயுள்!
இது ஒரு
தேசிய சாதனை!
முகவரி எண்ணி
'கின்னஸில்' குறிக்கலாம்!

எம்.ஐ. ஹபீலா- புத்தளம்.

## கவிதைப் போட்டி இல.254



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 02.05.1998

(படப்பிடிப்பு:- கொட்டாரமுல்லை ஃபாருக்)

**முகவரி:** கவிதைப் போட்டி இல.254, தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.



முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

* எஸ். கிருஷ்ணமூர்த்தி, கலஹா.
* எட்வேட் நிசாந்தன், பெரியநீலாவணை-01.
* பா.நவரத்னம், பொரலாங்கட.
* எஸ். சகாதேவன், கண்டி.
* செல்வன் சி.ரி. தினேஸ் காந்த், வத்தளை.
* என்.கே. ராஜா, திருகோணமலை.
* ஏ. சிரம்பரப்பிள்ளை, சுன்னாகம்.
* ம. கேதீஸ்வரன், வாழைச்சேனை.
* எம். இஸ்ரத், கொட்டாரமுல்லை.
* அன்வாருல் ஹக், பேருவலை.
* திருமதி, நா. தங்கமேனி, வவுனியா.
* ஜெயந்தி சுப்பிரமணியம், டிக்கோயா.
* சுதன், வவுனியா.
* எம்.எச்.எம். அவப், மாத்தளை.
* கே.எஸ். சுப்பிரமணியம், நெல்லிமலை.
* பொ. புவிதா, கோட்டைக்கல்லாறு-02.
* என். ஜெனோசியா, திருகோணமலை.
* எஸ். பத்மநாதன், அக்கரைப்பற்று-07.
* செல்வி பானுதியாகராஜா, டிக்கோயா.
* எம். ஹுஸ்நா, கல்முனை
* ச. சங்கர், திருமலை.
* ஆ. ஜெகதீஸ்வரன், புசல்லாவ
* தமிழ்மலர், வவுனியா.
* திருமதி பி.பவளராணி, வவுனியா.
* எஸ்.ஏ.எச்.ஏ. மஜீத், ஏறாவூர்.
* ஏ. வசந்திமலர், கிரேகட்.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:- 1772, கொழும்பு.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

# வாசக(ர்)சாலை

## எதைத்தான் எடுத்துரைத்தனரோ?

அன்புள்ள முரசுக்கு;

கூட்டணித் தலைவர்கள் மனித உரிமை ஆணைக் குழுவுக்கு கொழும்புக் கைதுகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்களாம். ஆனால் அந்த ஆணைக்குழு ஆணையாளரது பேட்டியை 'வாரம் ஒரு வலம்' வானொலி நிகழ்ச்சியில் செவிமடுத்தேன். 'ஜனாதிபதிக்கு ஒழுங்காக முறையிட்டால் சகல குறைகளும் தீரும். சூலும் பிணியகலும்' என்ற ரீதியில் கருத்துரைத்தார். என் கேள்வி யாதெனில், திருவாளர்கள் சிவசிதம்பரமும், நீலனும் அரசிடமும் அம்மையாரிடமும் தாம் முறையிட்டதைக்கூட கூறவில்லையோ? பின்னர் எதை விரிவாக எடுத்துரைத்தனர்? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். தமிழ்க் கட்சிகள் தங்கள் பேச்சுக்கள் தொடர்பாக வெளியிடும் செய்திகள் அனைத்தும் இதே ரகமே.

ஆ. வெற்றிவேல், கொழும்பு-11.

## தாமத நாடுகள்

முரசே!

கைதுகள் தொடர்பாக ஆராயும் மாநாடுகள் கண் துடைப்பு என்று நீ கூறியது உண்மையிலும் உண்மை. ஒருவாரமாக கொழும்பு வாழ் தமிழர்களை உலுப்பும்வரை வேடிக்கை பார்த்துவிட்டு, உலுப்பி முடிந்ததும் மாநாடு நடத்தும் நோக்கம் இன்னுமா புரியவில்லை? வேலிக்கு ஓணான் சாட்சிபோல இத் தமிழ்க் கட்சிகள் இணைந்து நாடகம் ஆடுகின்றன.

இ. குமார், கொழும்பு-05.

## நன்றியுணர்ச்சி

இராஜதந்திரி மிகச் சரியான தருணத்தில் சட்டமா அதிபர் கூட்டிய மாநாட்டின் பின்னணியை சுட்டிக் காட்டியிருந்தார். நடந்த அநியாயத்திற்காக வருந்தாத அரசாங்கம் பற்றி மூச்சுக்காட்டாத தமிழ்க் கட்சிகளது நன்றியுணர்ச்சி சிலிர்க்க வைக்கிறதய்யா.

எஸ். பிலோமினா, நீர்கொழும்பு.

## எதிர்க்கத் துணியவில்லை!

அவசரகால சட்டம் எத்தகைய கொடியது என்று நிருபணமானபின்னரும் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு எதிர்க்க முன்வரவில்லை. தமிழ் மக்களுக்கு இக் கட்சிகளால் பயன் இல்லவே இல்லை. இக் கட்சிகள்தான் தமிழ் மக்களின் பெயரால் நலன் பல பெற்று வருகின்றன. அவசரகால சட்டத்தின்கீழ் கொழும்பில் மட்டுமல்ல, வடக்கு-கிழக்கிலும், மலையகத்திலும் தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் நசுக்கப்படுகின்றன. தட்டிக்கேட்க முடியாத கட்சிகள், அவசியப்பட்டால் எதிர்ப்போம் என்று அறிக்கை விடுவது யாரை ஏமாற்ற?

கே. முத்துச்சாமி, பண்டாரவளை.

## குரல்கொடுப்பதுபோல நடிப்பர்

அன்பு முரசுக்கு;

கொழும்பில் மட்டுமன்றி நாடெங்கும் தமிழ் மக்களின் அன்றாட அவலங்கள் தொடருகின்றன. குண்டுவீச்சுக்கள், ஷெல்லடிகள், பாலியல் வல்லுறவுகள் என்று பலவாறாக கொடுமைகள் தொடருகின்றன.

ஆனாலும் கொழும்பில் நடந்த கைதுகள் மட்டும்தான் இந்த அரசினால் நடைபெற்ற மிகப் பாரிய அத்துமீறல்போல சகல தமிழ்க் கட்சிகளும் குரல் கொடுத்தன. அது ஏன்? இந்து மாமன்றம் போன்ற அமைப்புக்கள் துணிச்சலாக இறங்கிக்குரல் கொடுத்தமையால் கொழும்பு அத்துமீறல் அம்பலம் ஆனது. உரிய முறையில் வெளிக்கொண்டுவரப் பட்டது. அதனால் தாமும் குரல்கொடுப்பதுபோல நடிக்க தமிழ்க் கட்சிகள் நிர்ப்பந்திக்கப்பட்டன.

கொழும்பில் தமிழ் மக்கள் அவமானப்படுத்தப் பட்டமை என்பது நாடு முழுவதும் விசுவரூபமெடுத்துவரும் தமிழினம் மீதான ஒடுக்குதலின் ஒரு பகுதிதான். இதனை மட்டும் கண்டிப்பதோடு தமிழ்க் கட்சிகள் நிறுத்திக் கொள்ள முடியாது.

ஒட்டுமொத்தமாக ஒடுக்கு முறைகளுக்கு எதிராக, அரசுக்கு எதிராக, அவசரகால சட்டம் போன்ற கறுப்புச் சட்டங்களுக்கு எதிராக போராட இக் கட்சிகள் தயாரா?

க. தங்கேஸ்வரன், மட்டக்களப்பு.

## தமிழ்க் கட்சிகள் வாழ்க வளர்க!

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் கொடி கட்டிப் பறக்கிறது. உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் போட்டியிட்டதால் கிடைத்த பலாபலன்களை விபரிக்க வார்த்தையின்றி தவிக்கிறோம். இங்கே பாலும் தேனும் ஓடாததுதான் பாக்கி. இப்படியெல்லாம் எழுதத்தான் ஆசை. ஆனால் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பு இருந்ததை விட இப்போதுதான் இராணுவ நிர்வாகம் பலமடைந்து வருகிறது. முரசே! தேர்தலுக்கு முன்னர் நீ முன்னறிந்து கூறிய அனைத்தும் உண்மையாகி வருகிறது. எங்கள் அடிமைச் சாசனத்தில் எங்களை புள்ளடியிடவைத்து பதவிகளை அலங்கரிக்கும் தமிழ்க் கட்சிகள் வாழ்க. வளர்க.

ஜி. கௌரிசங்கர், யாழ்ப்பாணம்.

## அபார அமீன்

'இடி அமீன்' அபாரம். கார்லோஸ், பூலான் வரிசையில் மற்றொரு கலக்கல் தொடர் தரும் ரசிகனுக்கு பாராட்டுக்கள். 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' தொடர் நிறைவுற்றதும் நூல் உருப்பெறுமா? சிறந்த தொடர்கள் நிறைவுற்ற பின்னர் முரசு அவற்றை நூல் உருவில் தரலாம் அல்லவா? பரிசீலியுங்களேன்.

செல்வி எம். திலகராணி, வவுனியா.



படிப்பகம்

www.padippakam.com

# சித்திரைக்குப்பின் முதற் தாக்குதல்!

# ஒலுமடு மோதல் பற்றி புலிகள் விபரிப்பு

## காலமாற்றம் பற்றியும் பிரஸ்தாபிப்பு

ஒலுமடுப் பகுதியில் 20.04.98 அன்று அதிகாலை மூன்று மணிமுதல் ஐந்து பதினைந்துவரை படையினரும் புலிகளும் உக்கிரமாய் மோதினர்.

மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியில் படையினர் ஏற்கனவே நிலைகொண்டிருந்த கரிப்பட்டமுறிப்பு- ஒலுமடுப்பகுதியில் இருந்து ஓர் அணியும், கற்கிடங்கு, கரப்புக்குத்தி சார்ந்த பகுதியூடாக கனகராயன் ஆற்றின் கிழக்கு கரையோரமாக இன்னொரு அணியுமாக இருமுனைகளில் ஒலுமடுச் சந்தி நோக்கி முன்னேறின.

இந்த இருமுனைகளையும் படையினர் பயன்படுத்துவர் என்பதை முன்கூட்டியே கணிப்பிட்டு அதற்கான தாக்குதல் தயாரிப்புக்களை புலிகள் செய்திருந்தனர்.

கனகராயன் ஆற்றின் கிழக்குக் கரையாக முன்னேறிய படையணியை நோக்கி முன்னரே அரண் செய்யப்பட்ட காப்பரண்களில் இருந்து ஷெல்களை ஏவினர் புலிகள். கரிப்பட்டமுறிப்பில் இருந்து முன்னேறிய படையினரை நோக்கி முதலில் ஷெல் தாக்குதல் நடத்திவிட்டு, பின்னர் காட்டுப் பகுதி மறைவிடங்களில் இருந்து படையினரை நெருங்கிச் சென்று தாக்கினார்கள்.

அதனால் அப்படையணி பாரிய சேதத்துக்கு உள்ளானது. அதேசமயம் கனகராயன் ஆற்றின் மறுபுறம் இருந்து புலிகள் ஏவிய ஷெல்களால் ஆற்றின் கிழக்குக் கரைப்பக்கமாக நகர்ந்த படையணியும் பாரிய சேதத்தைச் சந்தித்தது.

பாரிய இழப்புக்கள் ஏற்பட்ட நிலையில் அதிகாலை 5.15 அளவில் 'ஜயசிக்குறுய்' படையினர் தமது முன்னைய நிலைகளுக்கு திரும்பினர்..

### ஆறும் கடப்பும்

இதேவேளை கனகராயன் ஆற்றைக் கடந்து ஒலுமடுச் சந்தியை படையினர் சென்றடைந்ததாக கொழும்பில் தகவல்கள் கூறப்பட்டன. இது பூகோள நிலவரத்தையே தலைகீழாக்கும் தகவலாகும். ஒலுமடுச் சந்திக்குச் செல்ல கனகராயன் ஆற்றைக் கடக்க வேண்டியதில்லை. ஒலுமடுச் சந்தியில் இருந்து சில கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது கனகராயன் ஆறு. (ஐந்தாம் பக்கம் வெளியாகியுள்ள வரைபடத்தைப் பார்க்கவும்)

கனகராயன் ஆற்றின் கிழக்குக் கரைப் பக்கம் இருந்து படையினர் முன்னேற முயன்றதையே, கனகராயன் ஆற்றைக் கடந்து முன்னேறியதாக தவறாக கருதிக்கொண்டு தகவல்கள் வெளியாகின. கனகராயன் ஆற்றைக் கடந்தால் அடுத்து வருவது மாங்குளம் நகர்.

கனகராயன் ஆற்றின் கிழக்குக் கரை ஓரமாக முன்னேறிய படையினரை, மறுபுறக் கரைப் பக்கம் இருந்து புலிகள் மோட்டார் ஷெல்களை ஏவி தாக்குவது சுலபமாக இருந்திருக்கிறது.

### அதிகாரிகள் எங்கே?

சண்டையில் இரண்டு டாங்கிகள் முற்றாக அழிக்கப்பட்டன என படைத்தரப்பு கூறியதாக கொழும்புக்கு கிடைக்கும் சில செய்திகள் கூறுகின்றன.

படையினரின் ஒன்பது சடலங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. ஒரு லெப்ரினன்ட், ஒரு கேணல் உட்பட 20 படையினர் வரை காணாமல் போயுள்ளதாகவும், அவர்கள் புலிகளால் பிடிக்கப்பட்டிருக்கலாம் என்றும் சில செய்திகள் கூறுகின்றன.

60 படையினர் வரை பலியாகி உள்ளனர். 300 படையினர்வரை காயம் அடைந்தனர். அதில் 110 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும் சுயாதீன தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆர்.பி.ஜி. ரக லோஞ்சர்கள், எல்.எம்.ஜி. துப்பாக்கிகள்-02, ரி 56-2 ரக துப்பாக்கிகள் 09, ரவைகள்-460, எல்.எம்.ஜிக்குரிய ரவைகள் லிங்குடன் 700, ஏ.கே. ரவைக் கூடுகள் 70 ஆகியன உட்பட, ரவைத் தடுப்பு கவச உடைகள் 02 உம் கைப்பற்றப்பட்டுள்ளதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

'ஜயசிக்குறுய்' படையினரில் அநேகமானோருக்கு ரவைத் தடுப்பு கவச ஆடைகள் வழங்கப்பட்டுள்ளன. படையினரது உடல்களை புலிகள் கைப்பற்றும்போது ரவைத் தடுப்பு கவச ஆடைகளும் பெருமளவாக புலிகளுக்குக் கிடைக்கின்றன. மார்பில் விழும் துப்பாக்கிச் சூட்டில் இருந்து மட்டுமே ரவைத் தடுப்பு ஆடைகள் பாதுகாப்பளிக்கும். எனினும் தரமற்ற ரவைத் தடுப்பு கவசங்கள் என்றால் அதுகூட சந்தேகம்தான்.

### புலிகள் விபரிப்பு

"சித்திரைப் புத்தாண்டுக்கு பின்னர் ஜயசிக்குறுய் படையினருக்கு நாம் வழங்கிய பாரிய தோல்வி இது," என்று புலிகள் ஒலுமடு மோதல் தொடர்பாக விபரித்துள்ளனர்.

பிறந்துள்ள சித்திரைப் புதிய ஆண்டு அரசினருக்கு மட்டுமன்றி, அவர்தம் படையினருக்கும் கெட்ட காலத்தையே குறித்துக் காட்டியிருக்கிறது என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

### படையினர் ஆயத்தம்

ஒலுமடு மோதலில் பின்னடைவு ஏற்பட்டபோதிலும், மற்றொரு படை நகர்வுக்கு 'ஜயசிக்குறுய்' படையினர் ஆயத்தம் செய்து வருவதாகவே தெரிகிறது.

எந்தப் பின்னடைவு வந்தாலும், எத்தகைய இழப்பு ஏற்பட்டாலும் 'ஜயசிக்குறுய்' தொடரும் என்பதே அரசின் முடிவாக இருக்கிறது. மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் அந்த முடிவில் மாற்றமே இருக்காது என்று திட்டவட்டமாகத் தெரிகிறது. ■

# யாழ்ப்பாணத்தில் தலைவிரித்தாடும் சீரழிவுகள்

## 'தட்டிக் கேட்க யாரும் இல்லை!'

## வேதனையுடன் மக்கள் தெரிவிப்பு

யாழ் குடாநாட்டில் சமீபகாலமாக மிக மோசமான ஒழுக்கக்கேடுகளும், சமூகத்தை அரிக்கக்கூடியதுமான சீரழிவுகளும் தலைதூக்கி வருகின்றன.

இராணுவக் கட்டுப்பாடுகள், தடையரண்கள், சோதனைகளால் மக்கள் அனுபவிக்கும் துயரங்கள் பற்றி யாழில் உள்ள தமிழ்க் கட்சிகள் கண்டிக்க முன்வருவதில்லை. ஒருபுறம் இராணுவத்தினருடன் சுமுகமான உறவை வைத்திருந்தபடி, மக்கள் நலனில் அக்கறை உள்ளதுபோல அடிக்கடி அறிக்கைகளை மட்டும் விடுவதே தமிழ்க் கட்சிகளின் அரசியலாக இருக்கிறது. இத் தந்திரம் புளித்துப் போய்விட்டதால் இப்போது தமிழ்க் கட்சிகளின் அறிக்கைகளை மக்கள் பொருட்டாக எடுப்பதில்லை.

அதேசமயம் இக் கட்சிகளை இராணுவத்தினரும் மதிப்பதில்லை. இக் கட்சிகள் பற்றி மக்கள் புகார் செய்தால் உடனடியாக பொறுப்பாளர்களை அழைத்து எச்சரிக்கை விடுக்கின்றனர் படை அதிகாரிகள்.

ஈ.பி.டி.பி., புளொட் போன்ற தமிழ்க் கட்சிகளது முக்கிய பொறுப்பாளர்கள் பிஸ்டல் எடுத்துச் செல்லக்கூட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அலுவலகத்தில் மட்டும் வைத்திருக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் தமிழ்க் கட்சி ஒன்றின் யாழ் மாவட்ட பொறுப்பாளரிடம் பிஸ்டல் இருந்ததால் வல்லை சோதனை முகாமில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டார்.

இதேவேளை யாழில் நீலப்படங்கள் மினி சினிமாக்களில் திரையிடப்படுவதையோ, சீரழிவுகள் தலைதூக்கி வருவதையோ படையினரோ, பொலிசாரோ கவனிப்பதாகத் தெரியவில்லை.

பாடசாலை மாணவ- மாணவிகளும் நீலப்பட மினி சினிமா அரங்கங்களில் காணப்படுகின்றனர். பாடசாலை மாணவர்கள் வீதிகளில் நின்று எவ்வித சஞ்சலமும் இன்றி புகைபிடித்துக்கொண்டு நிற்கின்றனர்.

### பெண்களிடம் வம்பு

ஆலயத் திருவிழாக்களில் கூட்ட நெரிசலைப் பயன்படுத்தி பெண்களிடம் தகாத முறையில் நடந்துகொள்வதும் அதிகரித்துள்ளது. இதுபற்றி அங்கு கடமையில் நிற்கும் சீருடையினரிடம் முறையிட்டால் அவர்களும் கேலி செய்கின்றனராம்.

அண்மையில் மருதடிப் பிள்ளையார் கோவில் திருவிழாவில் பெண் ஒருவருடன் ஒரு ஆசாமி மோசமாக நடந்துள்ளான். அப் பெண் கூக்குரலிட்டுள்ளார். பின்னர் முறையிடச் சென்ற இடத்திலும் அவமானம் நேர்ந்ததாம்.

கஞ்சா, வடி சாராயம், போதைப் பவுடர் போன்ற உயிர்கொல்லிகளும் தாராளமாக புழங்க ஆரம்பித்துள்ளன.

இவையெல்லாம்- எட்டுவருடங்களாக யாழ் குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது கட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

"அன்று பெண்கள் எந்த நேரம் வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் தாராளமாக நடமாட முடிந்தது. அன்று சமூகச் சீர்கேட்டை சுட்டிக்காட்டினால் தட்டிக் கேட்க ஆளிருந்தது. இன்று யார் இருக்கிறீர்கள்?" என்று யாழ் பாடசாலை மாணவ- மாணவிகள் சிலர் தமிழ்க் கட்சி ஒன்றின் பிரமுகர்களிடம் நேரடியாகவே கேள்வி எழுப்பினார்களாம்.

"ஊமைப் பெண்ணைக்கூட பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கினரே! என்ன நடவடிக்கை எடுக்கச் செய்தீர்கள்?" என்று ஒரு மாணவி ஆவேசமாக கேள்வி எழுப்ப, குறிப்பிட்ட கட்சிப் பிரமுகர் தலை குனிந்து கொண்டாராம்.

### வயதுக் கட்டுப்பாடு

"புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ் இருந்த போது யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற வயதுக் கட்டுப்பாடு இருந்தது. அப்போது நீங்கள் எல்லாம் அது அநியாயம் என்று எப்படியெல்லாம் கத்தினீர்கள். இன்று படையினரும் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேற வயதுக் கட்டுப்பாடு விதிக்கிறார்கள். நீங்கள் ஏன் வாய் திறக்கவில்லை? இன்று முன்பை விட போக்குவரத்து கட்டுப்பாடுகள் அதிகமாகியுள்ளன. ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்?" என்றும் கேள்வி தொடுக்கப்பட்டதாம். ■

# பஸ்ஸில் சென்ற தமிழர்கள் கைது-காற்றில் பறக்கும் வாக்குறுதிகள்!

கொழும்பில் தமிழர்கள் தொகையாக கைதுசெய்யப்படுவதை நிறுத்துவதற்கு உத்தரவாதங்கள் அளிக்கப்படுவதாக செய்திகள் வெளியாகிக் கொண்டிருப்பது தெரிந்ததே.

"தொடர்ந்து கைது நடக்காது, சில காலம் விட்டுத்தான் மறுபடி கைதுகள் நடக்கும், என்ற நம்பிக்கையில் தமிழ் பா.உக்கள் சிலர் வீரமாக கருத்து வெளியிட்டிருந்தனர். "கைதுகள் தணியாவிட்டால் அவசரகால சட்டத்தை எதிர்க்கவும் தயங்கோம்!" என்று கூறியிருந்தனர்.

21.04.98 அன்று கொழும்பு கொம்பனித் தெருவில் பஸ் பயணிகளை படையினர் சோதனையிட்டனர். அதன்போது பஸ்ஸில் வந்த 25 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர். சகல ஆவணங்களும் இருந்தும்கூட அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சோதனை அரண்களில் பொலிஸ் பதிவு பத்திரம் கேட்பது சட்ட விரோதம் என்று சட்டமா அதிபர் கூறியதாகச் செய்திகள் வெளியாகின. அதன்பின்னர்தான் மிகத் தீவிரமாக சோதனை அரண்களில் பொலிஸ் பதிவுப் பத்திரம் கேட்கப்பட்டு வருகிறது என்று புகார்கள் எழுந்துள்ளன. ■

# அரச ஊழியர் அச்சம்

யாழ் மாவட்ட அரச ஊழியர்களுக்கு விடுதலைப் புலிகள் கடிதம் அனுப்பிவைத்திருந்தனர்."அனாவசியமான முறையில் படையினருடனோ, அரச தரப்போடோ தொடர்புகள் கொள்ள வேண்டாம்," எனக் கோரியிருந்தனர்.

அதனையடுத்து யாழ்ப்பாண படை அதிகாரி பிரிகேடியர் மெண்டிஸ் அரச ஊழியர்களை அழைத்து மாநாடு ஒன்றை நடத்தியிருந்தார்! "புலிகளுடன் ஒத்துழைக்கும் அரச ஊழியர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!" என்று எச்சரித்திருந்தார்.

இப்போது மீண்டும் விடுதலைப் புலிகளிடம் இருந்து அரச ஊழியர்களுக்கு அறிவுறுத்தல் கடிதங்கள் சென்றுள்ளன. இரு பக்கமும் சிக்கிக்கொண்டு அச்சத்தில் உள்ளனர் யாழ் அரச ஊழியர்கள். ■

# பொலிசார் மீது தாக்குதல்–தமிழ்ப் பகுதி நோக்கி ஷெல்

(காரைதீவு நிருபர்)

கல்முனை எலிஃபண்ட் ஹவுஸ் சந்தியில் புலிகள் நடத்திய தாக்குதலில் ஏழு பொலிசார் பலியாகினர்.இத் தாக்குதல் குறித்து அறியப்படுவதாவது: கல்முனை பொலிஸ் நிலையத்தில் பொலிசார் ஒருவருக்கு 21.04.98 அன்று காய்ச்சல் ஏற்பட்டது.

அவருக்கு சிகிச்சையளிக்க கல்முனைக்குடி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அப்போது நேரம் இரவு பத்துமணி.

பொலிஸார் ஜீப்பில் சென்று இறங்கியதை அச்சமயம் அங்கு நின்ற புலி ஒருவர் கண்டுவிட்டார்.உடனடியாக அவர்மூலம் புலிகளின் தாக்குதல் அணிக்கு தகவல் எட்டியது.

எப்படியும் பொலிசார் திரும்பி வந்தேயாகவேண்டும், என்று எலிஃபண்ட் ஹவுஸ் சந்தியில் புலிகள் பதுங்கி இருந்தனர். கல்முனை பொலிஸ் நிலையத்தில் இருந்து ஒருகிலோமீட்டர் தூரத்தில் இருப்பதுதான் எலிஃபண்ட் ஹவுஸ்.

இரவு 11 மணியளவில் கல்முனைக்குடியில் இருந்து திரும்பி வந்துகொண்டிருந்த ஜீப்மீது எலிஃபண்ட் ஹவுஸ் சந்தியில் வைத்து இருபுறமிருந்தும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. அதனால் பொலிசார் ஜீப்பில் இருந்து குதித்து தப்பவும் முடியவில்லை.

ஸ்தலத்திலேயே ஐந்து பொலிஸார் மாண்டனர். இருவர் பின்னர் அம்பாறை வைத்தியசாலையில் மரணமாகினர்.

சந்திரா, விமலசிறி, பியந்த, சுனில், பத்மநாதன் ஆகிய பொலிசாரே ஸ்தலத்தில் மாண்டவர்களாவர். ஆயுதங்கள் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன. ஜீப் சின்னாபின்னமாகிக் கிடந்தது.

அதன்பின்னர் கல்முனையில் இருந்து சென்ற பொலிசார் ஒரு மணிநேரமாக சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். கல்முனையில் தமிழ் மக்கள் வாழும் இரண்டாம் குறிச்சி பகுதி நோக்கி எங்கிருந்தோ ஏவப்பட்ட இரண்டு ஷெல்கள் விழுந்து வெடித்தன. அதிஷ்டவசமாக உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. ■

# பாதாள உலகுடன் தொடர்பு!

## பொலீஸார் பலர் இடமாற்றம்

கொழும்பு நகரின் தென்பிராந்தியத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் இதுவரை கடமையாற்றிய பெரும்பாலான பொலிஸ்காரர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இவர்களுள் பொலிஸ் அதிகாரிகள் பலரும் அடங்குகின்றனர்.

பயங்கரமான சட்ட விரோதச் செயல்களில் தலைமறைவாக, ஈடுபடும் 'பாதாள உலகக் குழுக்கள்' பலவற்றுடன் மிக நெருக்கமான உறவு இவர்களுக்கு இருப்பதனாலேயே இவர்களை உடனடியாக இடமாற்றம் செய்வதற்கு பொலிஸ் தலைமை நடவடிக்கை எடுத்திருக்கிறது.

கொழும்பு நகரில் 'பாதாள உலகக்' குழுக்கள் 18 இயங்கி வருவதாகக் கூறப்படுகிறது.

போதைப் பொருள் கடத்தல், கசிப்புத் தயாரிப்பு போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளில் இக் குழுக்கள் ஈடுபட்டுவருவதாகவும் இக்குழுக்களுடன் எல்.ரி.ரி.ஈ.யினரும் ஊடுருவி, அவர்களுடைய வன்முறை நடவடிக்கைகளுக்குப் புகலிடம் தேடிக்கொள்வதாகவும் கிடைத்த செய்திகளை அடுத்தே, உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிக்கா, பாதுகாப்பு செயலாளர் சந்திரானந்த டி சில்வாவுக்கு கட்டளையிட்டிருந்தார்.

# ஆயுதப்படைகளின் மனித உரிமை மீறல்!

## இலங்கை அரசுமீது குற்றச்சாட்டு

## காணாமல் போனோர் பலி! கொடூர சித்திரவதைகள்!

இலங்கையின் வட-கிழக்கிலுள்ள அப்பாவிப் பொதுமக்களுக்கு இழைக்கப்படும் மனிதாபிமானமற்ற கொடுமைகளை, அமெரிக்க அரசாங்கம் வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

சிறிலங்கா பாதுகாப்புப் படையும் அவர்களுடன் இணைந்து செயற்படும் ஆயுதம் தாங்கிய தமிழ்க் குழுக்களும் மனித உரிமைகளுக்கு மாறாகப் புரிந்துவரும் வதைகளை 21 பக்கங்கள் கொண்ட தனது அறிக்கையில் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

"மனித உரிமைகளை மீறிச் செயற்பட்டுவரும் ஆயுதப் படையினரையோ அவர்களுடன் சேர்ந்து செயற்படுவோரையோ சிறிலங்கா அரசு கண்டறிந்து தண்டிப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தில் 1996ம் ஆண்டு புலிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 300க்கும் அதிகமானோருக்கு என்ன நடந்தது என்று, இதுவரை தெரியவில்லை. பெரும்பாலும் இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம்.

இக் கைதுகளுக்குப் பொறுப்பானவர்கள் பற்றி அரசாங்கம் அறிந்துகொள்ள எதுவித அக்கறையும் காட்டியதாகத் தெரியவில்லை. "உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன," என்று அடிக்கடி கூறப்பட்டு வருவதைத் தவிர வேறு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை," என்று அவ்வறிக்கை குற்றஞ்சாட்டியுள்ளது.

### சித்திரவதை

இவ்வறிக்கையில் 'சித்திரவதை' என்ற தலைப்பின்கீழ், குறிப்பிடப்பட்டுள்ளதாவது: "கைது செய்யப்படும் ஆண்களும், பெண்களும் படுமோசமாகச் சித்திரவதைகளுக்குட்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு துன்புறுத்தப்படுவோர் பெரும்பாலும் தமிழர்களே. மின்சாரம் பாய்ச்சப்படுதல், உடலில் காயம் ஏற்படாத வகையில் அடித்தல், தலைகீழாகக் கட்டித் தொங்கவிடுதல், கிருமிநாசினி, மிளகாய் மற்றும் நாற்றமும் காரமும் நிறைந்த பொதிகளை கைதானவரின் தலையில் வைத்து வெகுநேரம் வரை நிற்க வைத்தல், தீக்காயங்களை ஏற்படுத்துதல், நீரினுள் அமிழ்த்தி மூச்சுத் திணறவைத்தல் போன்ற கொடூரமான சித்திரவதைகளுக்குள்ளாக்கப்படுகின்றனர்.

### ஆணைக்குழு

அரசாங்கம் மனித உரிமைகள் ஆணைக்குழு ஒன்றினை அமைத்திருந்தபோதிலும் அக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட எத்தகைய கோட்பாடுகளுக்கும் ஆயுதப்படையினர் எவ்வித மதிப்பும் அளிப்பதில்லை.

ஒருவர் கைது செய்யப்பட்டு 48 மணித்தியாலங்களுக்குள் அக் கைது பற்றிய தகவல் சம்பந்தப்பட்டவருக்கு நெருக்கமானவர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு எத்தகைய தகவலும் தரப்படுவதில்லை.

இவ்வாறு அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இதேவேளை இலங்கை வந்த அமெரிக்க பிரதிநிதி பில் ரிச்சாட்சன் இலங்கை அரசை புகழ்ந்ததுடன் காணாமல் போனோர் விவகாரம் போன்றவற்றில் தகுந்த நடவடிக்கை (?!) எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியை புகழ்ந்திருந்தார்.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் கண்டிக்கிறது: அமெரிக்கப் பிரதிநிதி புகழுகிறார். மனித உரிமைகள் விடயத்தில் அமெரிக்காவின் இரட்டை வேடத்திற்கு இதுவும் ஒரு உதாரணம்! ■

# இரு புலிகள் பலி

மூதூர் மாத்தையா தோட்டப்பகுதியில் படையினரின் சுற்றிவளைப்பில் இரண்டு புலிகள் பலியாகினர்.

20.04.98 அன்று நடைபெற்ற சுற்றிவளைப்பில் முரளிதரன் (துவக்குமார் சூரியமூர்த்தி, யாழ்ப்பாணம்) பரந்தாமன் (வீரசிங்கம் அருள், திருமலை) ஆகியோர் பலியாகினர். ■

# யாழில் மர்மத் தொலைக்காட்சி

## அது வெறும் புரளி!

யாழ்ப்பாணத்தில் தொலைக்காட்சி ஒளிபரப்பை நடத்த புலிகள் திட்டமிட்டு உள்ளதாகவும், தமிழ்த் திரைப்படம் ஒன்றை ஒளிபரப்பி வெள்ளோட்டம் விட்டுப் பார்த்ததாகவும் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

யாழ்ப்பாண படை வட்டாரங்களை மேற்கோள்காட்டியே அச் செய்தி பரபரப்பாக வெளியிடப்பட்டிருந்தது. புலிகள் பிரபலமான தமிழ்ப் படம் ஒன்றை பூநகரியில் இருந்து ஒளிபரப்பியதாகவும், தமிழ்ப் படம் ஒளிபரப்பி அதனூடாக பிரசாரம் செய்ய முயல்வதாகவும் ஊகமும் வெளியிடப்பட்டது.

இதுபற்றி முரசுக்கு கிடைத்த தகவல்: யாழ்ப்பாணத்தில் தனியார் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்று ஆரம்பிக்கும் முயற்சி நடைபெறுகிறது.

சற்றலைற்றிலிருந்து றிசீவர் ஒன்றின் மூலம் சன் ரீ.வி. நிகழ்ச்சிகளை இழுத்து யாழில் காண்பிக்க முடியுமா? என்று பரிசீலித்துப் பார்த்தனராம். யாழ்ப்பாணத்தில் இருந்தே இந்தப் பரிசீலிப்பு நடந்ததாம். ஏற்கனவே வவுனியா நகரில் தமிழ் இயக்கங்கள் இவ்வாறு சன் ரீ.வி. நிகழ்ச்சிகளை காண்பித்து வருவது தெரிந்ததே.

அதேவிதமாக யாழில் செய்யவே பரிசீலிப்பு நடந்தது..அப் பரிசீலிப்பின்போதே சன்.ரீ.வி.யில் ஒளிபரப்பான தமிழ்ப்படம் ஒன்று யாழில் உள்ள தொலைக்காட்சி அலைவரிசைகளில் தெரிந்திருக்கிறது.

இதனை அறியாத படைத்தரப்பு புலிகள் தான் தொலைக்காட்சி ஒளிபரப்பு நடத்த முயற்சிக்கின்றனர் என்று பரபரப்பு அடைந்துவிட்டனர்.

# மாணவிகள் கிண்டல்

(நமது நிருபர்)

யாழ்ப்பாண நகரில் தமிழ்க் கட்சி ஒன்றின் அலுவலகம் முன்பாக பாடசாலை மாணவிகள் கடந்து சென்றுள்ளனர். அப்போது இயக்க உறுப்பினர் ஒருவர் 'ஸ்ரைலாக' துப்பாக்கியைத் தூக்கி காட்டினாராம்.

மாணவிகள் சற்றும் பயப்படாமல், "ஜேம்ஸ் பொன்ட் என்று நினைப்பு, ஒழுங்காக சுடத்தெரியுமோ தெரியாது," என்று கிண்டலடித்தனராம். இதனையடுத்து குறிப்பிட்ட கட்சி உறுப்பினர்களுக்கும் மாணவிகளுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

"ஆமிக்காரர்களுடன் பல்லைக் காட்டுவீர்கள்.உங்களுக்கு அவைதான் சரி," என்று உறுப்பினர் ஒருவர் கூறினாராம். உடனே மாணவி ஒருத்தி,"அவை என்றாலும் சண்டை பிடிச்சுக் கொண்டு உள்ளே வந்தார்கள். நீங்கள் அவையின் வாலைப் பிடித்துக் கொண்டு உள்ளே வந்து நின்று கொண்டு வீரம் காட்டவேண்டாம்!" என்று காட்டமாக கூறிவிட்டுப் போய்விட்டார்களாம். ■



படிப்பகம்

www.padippakam.com

# பொருத்தமில்லாத விளக்கம் கோரல்!

## அதிகாரிகளின் இழுத்தடிப்பு அம்பலம்

(மட்டக்களப்பு நிருபர்)

கடந்த 1990ம் ஆண்டிலும் அதன் பின்னரும் நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போதும் தமது உடமைகளை இழந்து பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான சுற்று நிருபத்தின்படி பாதிக்கப்பட்ட பெரும்பாலானோர் விண்ணப்பித்தார்கள். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சூட்டோடு சூடாக பாதிக்கப்படாதவர்களும் விண்ணப்பித்து சுழியோட்டங்கள் மூலம் நிவாரணம் பெற்றுவிட்டார்கள். உண்மையில் முற்றாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதில் தற்சமயம் பல இழுத்தடிப்புகளுக்கும் மாவட்ட ரீதியில் மட்டக்களப்பு புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவும் பரவலான கண்டனங்கள் எழுந்துள்ளன.

புனர்வாழ்வு அமைச்சரின் பகுதியில் உள்ள அவரது சார்பாளர்களுமே தொடர்ந்து முன்னுரிமையில் கவனிக்கப்படுவதாகவும், ஏனைய பிரதேசங்கள் ஓரக் கண்ணால் பார்க்கப்படுவதாகவும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

இதனிடையே புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையான 'றேபியா' நிறுவனத்தில் கடந்த பல வருடங்களுக்கு முன்னர் தமது இழப்பீட்டுக் கோவைகளைச் சமர்ப்பித்து அங்கு சகல விவரங்களும் சரியென ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இது நடந்து கடந்த ஏழு (07) வருடங்களின் பின்னர் அந்த இழப்பீட்டுக் கோவைகள் அந்தந்த மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

தற்சமயம் மட்டக்களப்பு மாவட்டப் பணிமனையில் அதிகாரிகள் பழைய கோவைகளைப் புரட்டிப் பார்த்து மேலும் பல்வேறு குறைபாடுகள் இருப்பதால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாதிருப்பதாக அறிவித்து வருகிறார்கள். "நீங்கள் பாதிப்படைந்த உடனேயே ஏன் பொலிஸில் முறையிடவில்லை என்பதற்கு விளக்கம் தரவும்" என்பன போன்ற பல்வேறு விளக்கங்களைக் கோருகிறார்கள்.

கடந்த 1990ம் ஆண்டு கிழக்கில் உள்ள பொலிஸ் நிலையங்களைக் கைப்பற்றிய புலிகள் அங்கிருந்த பொலிஸாருடைய சகல ஆயுதங்களையும் அள்ளிச் சென்றார்கள். அதனால் நீண்ட காலமாக பொலிஸ் நிலையங்கள் இயங்கவில்லை. இது நாடறிந்த உண்மை. இது இவ்வாறிருக்க 'ஏன் அதிகாரிகள் இப்படித் தேவையில்லாத விடயங்களுக்கு விளக்கம் கேட்டுத் தங்களது அறிவுப் புலமையை வெளிப்படுத்திப் பாதிக்கப்பட்டவர்களை மேலும் நோகடிக்கிறார்கள்' என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இரவு பகலாக மதுபோதையில் மூழ்கியிருக்கும் மட்டக்களப்பிலுள்ள சில அதிகாரிகளுக்கு சிந்தனை தலைகீழாக செயற்படுகிறதோ? என்றும் எண்ணத் தோன்றுகிறது. "பாதிக்கப்பட்ட காரணம் என்ன?" என்றும் விளக்கம் கோரப்பட்டுள்ளது. இதற்கான காரணம் இந்த இழப்பீடு சம்பந்தமான சுற்று நிருபத்தில் 'வன்முறை' என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுகூட அந்த அதிகாரிகளுக்குத் தெரியாதோ?

# கைமாறும் பிரதேசங்கள்



கிளிநொச்சி நகரை கைப்பற்றுவதற்கான 'சத்ஜய' இராணுவ நடவடிக்கையால் நகர் தரைமட்டமானது. புலிகளின் நீதிமன்ற பெயர் பலகை காயங்களோடு தப்பிவிட்டது. படையினரும் அப்படியே விட்டுவைத்திருந்தனர். தற்போது அப்பகுதியில் மறுபடி புலிகள் நிலைகொண்டுள்ளதை படத்தில் காண்கிறீர்கள். போரில் பிரதேசங்கள் கைமாறிக்கொண்டிருப்பது சகஜம்தான். ஆனால் பிரதேசங்களின் தோற்றம்தான் போரின் கொடூரத்தால் உருக்குலைந்து போகின்றன.

# பஸ் பரிசோதகர்களின் பொறுப்பற்ற நடவடிக்கை

## பயணிகள் இடைவழியில் அவஸ்தை!

(மட்டக்களப்பு நிருபர்)

கதுறுவெலவில் இருந்து மட்டக்களப்பு நோக்கி 62-5502 இலக்க பஸ் நிறைந்த பயணிகளுடன் வந்து கொண்டிருக்கும் போது ஓட்டமாவடியில் தேநீர், சிற்றுண்டிக்காக நிறுத்தப்பட்டது. சற்று நேரத்தின் பின்னர் தேநீர் குடித்து முடித்த சாரதி பஸ்ஸைச் செலுத்த ஆயத்தமாகியிருந்தார். அப்பொழுது பஸ்ஸிலிருந்த குறும்புக்காரர்கள் சிலர் பஸ் நடத்துநர் மணி அடிப்பது போன்று செயற்பட பஸ் நடத்துநர் இல்லாமலேயே சாரதி பஸ்ஸைச் செலுத்தி வந்திருக்கிறார். அவ்வேளையில் கிரானில் வைத்து பஸ் சீட்டுப் பரிசோதகர்கள் பஸ்ஸில் ஏறிக் கொண்டு பஸ் நடத்துநரைத் தேடிய பொழுது அவர் இல்லாதிருப்பது தெரியவந்திருக்கிறது.

இவ்வேளையில் பயணிகளைப் பற்றிச் சிந்திக்காத பரிசோதகர்கள் பஸ்ஸை உடனடியாகவே ஏறாவூர் பொலிஸில் ஒப்படைத்து விட்டனர். மட்டக்களப்புக்கும் மற்றும் பல இடங்களுக்கும் செல்லவேண்டி நீண்ட தூரப் பயணத்தில் களைப்படைந்திருந்த பயணிகள் மேலும் பல மணி நேரம் இடைவழியில் தவிக்கநேரிட்டது.

மட்டக்களப்புக்கும், அங்கிருந்து வேறு பகுதிகளுக்கும் செல்ல வேண்டிய பயணிகளை மட்டக்களப்பு வரை கொண்டுசென்று விட்டுவிட்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு செய்திருக்கலாம். ஆனால் பயணிகளை இடைவழியில் தவிக்க வைத்து விட்டு, பஸ்கள் தட்டுப்பாடான இவ் வேளையில் பஸ்ஸைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்து விட்டுத் திரியும் பொறுப்பற்றவிதமான செயற்பாடுகளினால் பயணிகளுக்கே தொந்தரவு ஏற்படுகின்றது.

காணாமல் போன பஸ் நடத்துநர் வேறு பஸ் ஏறி பின்னால் வந்து சேர்ந்த பொழுது அவருக்குரிய பஸ் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்தது. தான் ஹொட்டலில் உள்ள மலசல கூடத்தில் இருந்த பொழுது பஸ் புறப்பட்டு விட்டதாக அவர் தனது முறைப்பாட்டைப் பொலிஸில் தெரிவித்துள்ளார். இச்சம்பவம் 07.04.98 அன்று இடம்பெற்றது.

# மின்னும் மின்சாரம்

(காரைதீவு நிருபர்)

தம்பிலுவிலில் இருந்த இரு மின்மாற்றிகளும் தகர்க்கப்பட்டபின் தலைக்கு 200/- வீதம் சேர்த்து ஓடி ஆடி மின்மாற்றி ஒன்றைப் பூட்டினர் அந்த ஊர் மக்கள்.

அம்பாறை மின்சார சபையினர்வந்து அந்தப் பணியைச் செய்தனர். ஆனால் மின்சாரம் இரவானதும் மின்னுகிறது. கோல்டரில் பல்ப் ஒன்று உள்ளது என்பதை மட்டும் இனங்காணக் கூடிய வகையில் பல்ப்பின் இழை சற்று ஒளிரும்.

இதனால் இரவில் மாணவர்கள் கல்வி கற்க முடியாமல் திண்டாடுகின்றனர். ஏனைய தரப்பினரும் திண்டாடுகின்றனர்.

சுமார் ஆயிரம் குடும்பங்கள் இம்மின்னும் மின்சாரத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

# ஆமைவேக சேவை

பொலன்னறுவை மாவட்டக் கல்விக் காரியாலயத்தின் சேவை மிகவும் மந்தகதியிலே நடைபெறுவதால் இம்மாவட்டத்திலுள்ள ஆசிரியர்கள் தங்களுடைய தேவைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய முடியாமல் தவிக்கின்றனர்.

'மக்கள் தினமாக' ஒதுக்கப்பட்டுள்ள புதன் கிழமைகளில் கூட கல்விக் காரியாலயத்திலிருப்பவர்கள் லீவு எடுப்பதால் ஆசிரியர்கள் மேலும் சிரமத்திற்குள்ளாவதுடன் விரக்தியும் அடைந்துள்ளனர்.

இதனை யாரிடம் சென்று முறையிடுவது? அவ்வாறு முறையிட்டால் அவ்வாசிரியர்களின் தேவைகள் மேலும் இழுத்தடிக்கப்படும் எனவும் அஞ்சி முறையிடாமல் உள்ளக் குமுறலுடன் இருக்கின்றனர்.

அ. இக்பால், பொலன்னறுவ.


ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான
BRIGHT வெளியீடுகள்
வெற்றிக்கனிக் களஞ்சியம் - 02

பொதுவிவேகம் பாடநூல்
பொதுவிவேகம் செயல் நூல்

வெற்றிக்கனி (ஏற்கனவே வெளிவந்தவை)

வெற்றிக்கனி - 98
இதழ் 1 முதல் 6 வரை

P. அம்பிகைபாகனின் அனைத்து வெளியீடுகளும்

மேலதிக விபரங்களுக்கு:
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S - 27, First Floor, P.o. Box : 162
Central Super Market Complex
Colombo-11. T.P. 434770, 074 - 718592



தெய்வீக மருத்துவம்
சர்வதேச சமூக தெய்வீக சேவை
GOVT REGED NO. HA\04\BT\219

வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள், காதல், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, என்பவற்றிற்கும், வேண்டியவர்களைச் சேர்க்கவும், வேண்டாதவர்களைஅகற்றவும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்ட வடிவமைப்பில் எதிர்கால வாழ்க்கைப் பலனையும் அறிந்து கொள்ளலாம்.

'ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர்' நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பலன்தரும் தெய்வீக மருந்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்.

பாலுசோதிடர்-S.A.M.P.
தெய்வீக சக்தி நிலையம்
கல்லடி-அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு. (P.O).

BALUSOTHIDAR-S.A.M.P.
THEYVIGASAKTHY CENTRE,
BATTICALOA (P.O.)
SRI LANKA.

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்." - "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"



ரிஷி அஜமாமிச
லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 250/=,150/=
தங்க பஸ்பம் கலந்தது 1125/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 1025=

ஞான சுந்தர
வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398



விளம்பரப் பகுதி

மகிழ்ச்சியான
மணவாழ்விற்குப்
பொருத்தமான துணையைத்
தேடுகிறீர்களா?

உங்களுக்கு உகந்த மணமகனை அல்லது மணமகளை விரும்பிய நாட்டில் தெரிவு செய்யலாம். நேரடியாக நீங்களே தொடர்பு கொள்ள வசதிசெய்து தரப்படும். திருமணம் நிச்சமிக்கப் படுமிடத்து தேவையெனில் விசா தொடர்பான சேவையும் வழங்கப்படும்.
விபரங்களுக்கு தொடர்பு கொள்க.

RAJAH INTERNATIONAL
MARRIAGE PROPOSALS
P.O.BOX-1050
EPPING MDC. VIC. 3076
AUSTRALIA.



மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

விசேட கவனத்திற்கு
கொழும்பு விலாசம் மட்டும் மாற்றப்பட்டுள்ளது.
வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை. இனம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

SEXUAL DISORDERS

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண்மகனாகிவிட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்கு

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான விளக்கத்துடன் கடிதத் தொடர்பு மூலம் அறிவித்தால் மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாதுபெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்) மட்டக்களப்பு விலாசத்துக்கு மட்டும் கடித தொடர்பு கொள்ளவும்.

மட்டக்களப்பு விலாசத்துக்கு மட்டும் கடித தொடர்பு கொள்ளவும்.

மனநிலை பாதிப்புக்கள்; மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும், தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.
கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072-609388

கொழும்பில் ஏப்ரல் 19 முதல் 26 வரை
DR.P.ARUMUGAM
BEAUTY LODGE, 65/3, Wolfendhal Street, Colombo-13.
T.P.-338165, 338166 (உம்புச்சி பிளேஸ் பள்ளிவாசலுக்கு முன்னால்)
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

ஓட்டமாவடியில் மே 2. 3ம் தினங்களில்
Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி. T.P.065-57345

கல்முனையில் மே 9.10.11ம் தினங்களில்
T.M.M. பாமசியிலும் T.P.065-29329

வவுனியாவில் மே 16.17.18ம் தினங்களில்
வவுனியாவில் (2ம் குறுக்குத்தெரு) ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, VANNI INN இல் சந்திக்கலாம். T.P.024-22074ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
மற்றைய நாட்களில் Dr.P.Arumugam
No.33. Tissa Weerasingam Sq.,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.



BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
கல்வி நெறிகள்
★ 30 Days Spoken English
★ 90 Days Spoken Sinhala
★ Method of Book-Keeping
★ Method fo Computerised Book-Keeping & Accountancy (MCBA)

மேற்படி பாடநெறிகள் நேரிலும்/தபால் மூலமும் நடைபெறுகின்றன. வகுப்பு நேர விபரங்களை நேரிலோ, தொலைபேசியிலோ, தபால் மூலமே அறிந்து கொளளலாம.
மேலதிக விபரங்களுக்கு கீழ்க் காணும் விண்ணபப படிவத்துடன் தொடர்பு கொள்க.

விரும்பும் பாடநெறி:......................
பெயர்:......................
முகவரி:......................

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27, First Floor, P.O. Box-162,
Colombo Central Super Market Complex.
Colombo -11. Tel: 434770, 074-718592



காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218





மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய மந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 25ந் திகதி வரை
SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE,
WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067.

25ந் திகதி முதல் 30ந் திகதி வரை
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347
வியாழன் விடுமுறை




படிப்பகம்

www.padippakam.com

**ஏ**ப்ரல் 19,1995இல் திருமலை துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 'சூரயா','ரணசுரு' ஆகிய கப்பல்கள் இரண்டும் கடற்கரும்புலிகளால் தகர்க்கப்பட்டன.

'மூன்றாம் கட்ட ஈழப்போர்' திருமலை துறைமுகத்தில் கேட்ட அந்த வெடி அதிர்வுடன்தான் ஆரம்பமானது. மூன்று ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

**மூன்றாம் கட்ட ஈழப்போரின் மூன்றாம் ஆண்டை திருமலை துறைமுகத்தில் பாரிய வெடி அதிர்வுடன் பூர்த்தி செய்ய கடற்புலிகள் திட்டமிட்டனர்.**

ஏப்ரல் 18ம் திகதி இரவு கடற்கரும்புலிப் படகுகளும், கடற்புலிப் படகுகளும் முல்லைத்தீவில் உள்ள கடற்புலிகளது தளத்தில் இருந்து புறப்பட்டன.

**திருமலை துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பல்களை தாக்குவது, கடற்படையினர் குறுக்கிட்டால் சண்டை ஒன்றை நடத்தியபடி துறைமுகப்பகுதிக்குள் ஊடறுத்து தாக்குவதே கடற்புலிகளின் திட்டம்.**

கிட்டத்தட்ட பத்து, பதினைந்து கடற்புலிப்படகுகள் கடற்சண்டைக்கு தயாராக அணி வகுத்துச் செல்ல, ஊடுருவித் தாக்கி அழிக்கும் கடற்கரும்புலிப் படகுகளும் சென்றன.

கடற் சமரும் கடற்படையின் வலயத்திற்குள்ளேயே ஆரம்பமானது.

**துணிச்சல்விரைவான இலாவகமான படகு நகர்த்தும் திறன், கரும்புலிகள் ஆகியனவற்றை நம்பியே கடற்புலிகள் தமது சமர்களை திட்டமிடுகின்றனர்.**

ஆனாலும், மிகப் பாரிய கடற்படை தளமான திருமலை துறைமுகத்தை அண்டிய கடற்பகுதி என்பதால், கடற்படையினர் விரைவான தாக்குதல்களை தொடுத்தனர்.

**டோரா சண்டைப் படகுகளின் அணியை ஊடறுத்து தாக்க விரைந்த கடற்கரும்புலிப் படகு ஒன்றும், வெடித்துச் சிதறியது. கடற்புலிப் படகு ஒன்றும் தாக்குதலில் கடலில் அமிழ்ந்தது.**

அதனையடுத்து கடற்படையினரின் வியூகத்திற்குள் சிக்காத வகையில் தமது முல்லைத்தீவு கடற்தளம் நோக்கி கடற்புலிப் படகுகள் சண்டையிட்டபடியே பின்வாங்கின.

அவற்றை தொடர்ந்து சென்று தாக்கியழிக்க கடற்படையினர் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை.

**தமக்கு சாதகமான கடல் வலயத்திற்குள் வைத்து அத்தனை கடற்புலிப் படகுகளையும் அழித்துவிட கடற்படையினர் முயன்றனர்.**

அதுதவிர, தமது கடற் தளப்பகுதியைவிட்டு நீண்டதூரம் சென்று ஆழ்கடல் சமர்களிலும் கடற்புலிகள் ஈடுபடத்தொடங்கியுள்ளமை கடற்சண்டைப் பரிமாணத்தையும் ஆழமாக்கியுள்ளது.

**தமது தரப்பு இழப்பு தொடர்பாக கடற்படையினர் எதனையும் கூறவில்லை.ஏழு மணி நேரச் சமரில் கடற்படைப் படகுகளுக்கோ, கடற்படையினருக்கோ எவ்வித சேதமும் ஏற்படாமல் இருந்திருக்க முடியாது. அவ்வாறு சண்டை சுலபமாக இருந்திருப்பின் கடற்புலிகளின் படகுகள் தளம் திரும்ப கடற்படையினர் விட்டிருக்க மாட்டார்கள்.**

இன்னொன்று, கடற்சண்டைகளில் தமக்கு ஏற்படும் இழப்புக்களுக்கு பழிதீர்க்கும் விதமான தாக்குதல்களை நடத்துவது கடற்புலிகளது வழக்கம். எனவே கடற்படையினர்மீதான மற்றொரு தாக்குதலும் எதிர்பார்க்க வேண்டியதே.

❑ ❑

'ஜயசிக்குறுய்' ஓய்ந்துவிட்டதுபோல கருதப்பட்டது. சித்திரை வருடப் பிறப்பின் பின்னர் மறுபடி 'ஜயசிக்குறுய்' தொடரும், மூர்க்கமாக முடுக்கிவிடப்படும் என்று நாம் கூறியிருந்தோம்.

ஏனெனில் மாகாணசபைத் தேர்தல்களில் வெற்றிபெறுவதற்கு அரசாங்கம் முஷ்டியை உயர்த்திக் காட்ட விழுந்தடித்து ஆசைப்படுகிறது.

புதுவருடக் கொண்டாட்டங்கள் மற்றும் படைகளுக்கு ஓய்வு பெறச் சந்தர்ப்பம் வழங்குதல் ஆகிய காரணங்களுக்காக படை நடவடிக்கைகளை நிறுத்தி வைத்திருந்தனர்.

**படையினர் ஓய்வு பெறுவதை அனுமதிப்பது புலிகளுக்கு பாதகம்தான். எந்தப் போர் முனையிலும் எதிரிகளை ஓய்வு கொள்ளவோ, ஒழுங்காக நிம்மதியாகத் தூங்க விடுவதோ போர்த்தந்திரரீதியில் பாதகமான அம்சங்கள்தான்.**

அதேபோல படையினரும் தமது எதிரிகளான புலிகளை ஓய்வு பெற அனுமதிப்பதும், தயாராக சந்தர்ப்பம் தருவதும் படைத்தரப்புக்கு பாதகமானதே.

படையினர் ஓய்வு பெறுவதை தடுக்க வேண்டுமானால் ஜயசிக்குறுய் படையணிகள் மீது பாரிய தாக்குதல் யுத்தம் ஒன்றை தொடுக்க வேண்டும்.

ஆனால் புலிகளது தாக்குதலை எதிர்பார்த்து ஜயசிக்குறுய் படைகள் தயார் நிலையில் இருப்பதால், பாரிய இழப்புக்களை சந்தித்தே புலிகள் தாக்குதலை நடத்த வேண்டி இருக்கும்.

**போர்த்தந்திர அவசியம் கருதி சில சமயங்களில் எதிரி எதிர்பார்த்திருக்கும் முனையிலும் தாக்கவேண்டி இருக்கும். ஆனால்** எதிர்பாராத முனைகளில் தாக்குவதுதான் பொதுவான உத்தி.

பட்டன. டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களான ஆர்.பி.ஜி. மற்றும் 'லோ' போன்ற ஆயுதங்களுடன் பாய்ந்து செல்லும் படையணியும் சண்டையில் ஈடுபட்டது.

டாங்கிகள் சேதமடைந்தன. உடனடியாக டாங்கிகள் பின்வாங்கத் தொடங்க, டாங்கிகளை கவசமாக வைத்து முன்னேறிய படையினர் தமக்கு முன்பாக விழுந்து வெடித்த ஷெல்களால் பாரிய உயிரழிவைச் சந்தித்தனர்.

குறும்தூர மோட்டார்களாலேயே புலிகள் தாக்கியதாக தெரிகிறது. நீண்டதூர மோட்டார்களால் எட்ட இருந்து ஷெல்களை ஏவினால் மரங்களில் பட்டு குறிதவறி வெடித்துவிடும்.

**கைகளில் தூக்கிக் கொண்டு நகரக்கூடிய குறும் தூர மோட்டார்களை படையினர் நகரும் பாதையருகே வைத்திருந்தே புலிகள் ஏவியிருக்க வேண்டும். அடர் காட்டுப் பகுதியில் வசதியான பதுங்குமிடத்தில் இருந்து படையினரது நகர்வை கவனித்து ஷெல்கள் ஏவப்பட்டதால்தான் பாரிய சேதம் ஏற்பட்டது.**

படையினருக்கு உதவியாக விரைந்த ஹெலியும் சுடப்பட்டுள்ளது. விமான எதிர்ப்பு ஏவுகணையால் சுடப்பட்டிருந்தால் ஹெலி கீழே விழுந்திருக்கும். ஆனால் துப்பாக்கியால்தான் சுடப்பட்டிருக்கிறது. எனவே காயத்தோடு தப்பிவிட்டது.

**சுதந்திரமான தகவல்களின்படி படையினர் தரப்பில் 60 பேர்வரை பலியாகி உள்ளனர். முன்னூருக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். டாங்கிகள் சேதமடைந்தன. உடனடியாக முன்னேற்ற முயற்சி நிறுத்தப்பட்டது. புலிகள் முன்கூட்டியே திட்டமிட்டு தயார் நிலையில் இருந்தமையால் அவர்கள் தரப்பில் 11பேர் மட்டுமே பலியாகினர்.**

இத் தகவல்கள் படையினர் கூறமுன்னரே வெளியாகிவிட்டதால், தமது இழப்புக்களை குறைத்துக்காட்ட, போர்க்களச் செய்தி ஒன்றை படையினர் சமைத்துத் தந்துள்ளனர் என்று தோன்றுகிறது.

ஒலுமடுவில் புலிகளது பாரிய முகாம் ஒன்று தாக்கப்பட்டதாகவும் 60 புலிகள் பலியானதாகவும் அரச செய்தி ஊடகங்கள் அறிவித்தன.

**அதற்கு முதல்நாள் அதே செய்தி ஊட கங்கள்தான் சண்டை மாங்குளம் நகரில் நடப்பதாக கூறின. மாங்குளம் நகரில் சண்டை நடப்பதானால் ஒலுமடுவைத் தாண்டித்தான் செல்ல வேண்டும்.**

தகர்க்கப்பட்டுள்ளன. மோட்டார் அடியால் டாங்கிகள் முற்றாக நகரமாட்டா. கிட்டத்தே நெருங்கி ஆர்.பி.ஜி. லோஞ்சராலோ, அல்லது டாங்கி எதிர்ப்பு ஆயுதமான 'லோ' போன்றவற்றாலோ டாங்கியை குறிவைத்து அடித்தாக வேண்டும். அப்படித்தான் அடித்துள்ளனர்.

**ஆயுதங்களை கைவிட்டும், தகர்க்கப்பட்ட டாங்கிகளை கைவிட்டும் படையினர் பின்வாங்க நேர்ந்திருக்கிறது. புலிகளின் தாக்குதல் அணிகள் தங்களை நெருங்கி வந்தமையால்தான், முற்றுகையில் சிக்காமல் படையினர் அவ்வாறு செல்ல வேண்டி இருந்தது.**

எனவே எங்கிருந்தோ ஏவப்படும் மோட்டார் ஷெல்களால்தான் பாதிப்பும், பின்னடைவும் ஏற்பட்டதாக மட்டும் கூறுவது சண்டையின் பரிணாமத்தையும், மரபுப் போரில் புலிகள் பெற்றுவரும் அனுபவம், திறன் ஆகியவற்றையும் மறைக்கும் முயற்சிதான்.

மோட்டார் தாக்குதல் மட்டுமே நடத்தப்படுமானால் துருப்புக்காவி கவசவாகனங்களில் படையினரை ஏற்றிக்கொண்டு முன்னேறலாம். ஷெல் வந்து விழுந்தாலும் பொறுத்த இடத்தில் படாவிட்டால் பாதகம் பெரியளவில் இருக்காது.

புலிகளின் தாக்குதல் அணிகளும் உக்கிரமாக களத்தில் நிற்பதாலும், டாங்கிகள் மற்றும் கவசவாகனங்களை தகர்க்கக்கூடிய எதிர்ப்பு ஆயுதங்கள் அவர்களால் பயன்படுத்தப் படுவதாலும்தான் கனரக வாகன பலமும் படையினருக்கு கைகொடுக்கவில்லை.

மாங்குளத்தை கைப்பற்றுவது கடினம் என்பதால்,

மூன்றாம் கட்ட
ஈழப்போர் பூர்த்தி.
திருமலை துறைமுகத்தில்
கடற்புலிகள் வைத்த குறி!
கடற்படை வலயத்திற்குள்
நீண்டநேர ஆழ் கடல் சமர்!

# ஓய்வும் – தயாரிப்பும்

புலிகள் தாக்குதல்கள் நடத்தக்கூடிய தினங்கள் எவையெவை என்றொரு பட்டியலை படைத்தரப்பு வைத்திருக்கிறது.

புலிகளுக்கு அதிஷ்டமான நாட்கள், புலிகளது நினைவு நாட்கள், முக்கிய தினங்கள் போன்றவை அந்தப் பட்டியலில் இருக்கும். அத்தகைய நாட்களில் படைத்தரப்பு உஷாராக இருப்பதுண்டு.

**கடற்படையினரைப் பொறுத்தவரை மூன்றாம்கட்ட ஈழப்போரின் ஒவ்வொரு ஆண்டும் நிறைவு பெறும்போதும் உஷாராகவே இருக்கின்றனர் என்று தெரிகிறது.இம்முறையும் அவ்வாறு புலிகளது தாக்குதலை எதிர்பார்த்து உஷாராக இருந்துள்ளனர்.**

ஏப்ரல் 18இரவு கடற்படையினரின் ராடர்களில் கடற்புலிப் படகுகளின் நடமாட்டம் தெரிந்திருக்க வேண்டும்.

உடனடியாக உஷாரான கடற்படையினர் தங்கள் அதிவேக டோரா சண்டைப் படகுகளுடன் கடற்புலிகளை நோக்கி விரைந்தனர்.

**கிட்டத்தட்ட பத்து டோரா சண்டைப் படகுகள் கடற்சண்டையில் கலந்தன. திருமலை துறைமுகத்தை அண்டிய ஆழ் கடற்பரப்பில் சண்டை ஆரம்பமானது.**

கடற்படையினர் தங்கள் நடமாட்டத்தை ராடர்களில் கண்டுவிட்டு சண்டைக்கு தயாராவர் என்பதை எதிர்பார்த்தே கடற்புலிகளும் வந்திருந்தனர்.

**அதனால் சண்டை உக்கிரமாக ஆரம்பித்தது. திருமலை துறைமுகத்தை அண்டிய கடற்பரப்பு கடற்படையினருக்கு சாதகமான கடற் களமாகும்.**

ஏனெனில் கடற்படைத் தளம் அமைந்துள்ளதும்,,தமது கட்டுப்பாட்டில் உள்ளதுமான தரைப்பகுதியை கரையாகக்கொண்ட கடல் வலயம் என்பதால், சண்டையில் ஈடுபடும் கடற்படையினர் தமக்கு தேவையான உதவிகளையும் உடனடியாக பெறக்கூடியதாக இருக்கும்.

கடற்புலிகளைப் பொறுத்தவரை இவ்வாறான, தமது எதிரிக்கு சார்பான கடற்பரப்பில் சண்டையிடுவதால் இரண்டு பிரதான பாதகங்கள் உள்ளன.


**ஒன்று: தமது தளத்தில் இருந்து மிக நீண்டதூரம் தாண்டி வந்துவிட்ட நிலையில் விரைந்து பின்வாங்க முடியாது.**

**இரண்டு: தமது எதிரியைவிட வசதியும், வலுவும் குறைந்த கடற்கலங்களை வைத்து எதிரிக்கு சாதகமான களத்தில் மோத வேண்டிய நிலை. தவிர கரையில் இருந்தோ கடற்படை தளத்தில் இருந்தோ கடற்படையினர் கடற்புலிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலும் நடத்த முடியும்.**

ஏற்கனவே 22.02.98 அன்று கடற்புலிகள் நடத்திய தாக்குதலும் தமது தளத்தில் இருந்து மிக நீண்டதூரம் கடந்து சென்று நடத்திய ஆழ்கடல் சமரேயாகும்.

கடற்படையினரின் கடல் வலயம் என்று கூறப்படத்தக்க கடற்பரப்பிலேயே அந்தச் சமர் நடைபெற்றிருந்தது.

ஏப்ரல் 18ம் திகதி இரவு 7.45 மணியளவில் திருமலை கடற்பரப்பில் ஆரம்பமான




**அதிவேக டோரா படகுகளுடன் ஒப்பிட்டால் கடற்புலிப் படகுகளின் வேகம் குறைச்சல்தான். ஆனால் கடற்புலிகள் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தமையாலும், எங்காவது இருந்து கடற் கரும்புலிப் படகுகள் பாய்ச்சல் நடத்தக்கூடும் என்று விழிப்பாக இருக்க வேண்டியதாலும் கடற் படையினரால் முற்றுகையிட்டு அழிக்க முடியவில்லை.**

கடற்புலிகள் தங்களுக்கு போக்குக்காட்டி பொறியில் வீழ்த்த நினைக்கலாம் என்பதால் கடற்படையினர் கடற்புலிகளை மிக நெருங்கிச் சென்றிருக்க மாட்டார்கள்.

**அதனால்தான் தம்மைவிட வலுக்குறைந்த கடற்கலம், படைக்கலம் கொண்ட கடற்புலிகளுடன் கிட்டத்தட்ட ஏழு மணிநேரமாக கடற்படையினர் சண்டையிட வேண்டி இருந்தது.**

திருமலை கடற்பரப்பில் இருந்து கொக்காவில் கடற்பரப்புவரை கடற்சமர் நடந்துள்ளது. அதிகாலை மூன்றுமணிவரை சண்டை தொடர்ந்தது.

**இச் சண்டையில் இரண்டு கடற்கரும்புலிகள் உட்பட ஐந்து கடற்புலிகள் பலியாகியுள்ளனர். இரண்டு படகுகளை கடற்புலிகள் இழந்துள்ளனர்.**

சண்டை என்ற வகையில் கடற்படையினருக்கே இது வெற்றியாகும். ஆனால், நீண்டநேர கடற்சமர் அனுபவத்தை கடற்புலிகள் படிப்படியாக பெற்றுவருவது நீண்டகால நோக்கில் கடற்படையினருக்கு ஆபத்தானதேயாகும்.

# திருமலையில் தப்பிய குறி

சித்திரைப் புதுவருடத்தை ஒட்டிய ஓய்வு நாட்களில் படையினர் ஓய்வு பெற்றதுக்கும், புலிகள் ஓய்வு பெற்றதுக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது.

படையினர் தாம் நிலைகொண்ட பகுதிகளுக்குள் புலிகளின் அணிகள் புகுந்து தாக்குமோ என்ற 24 மணிநேர விழிப்பு உணர்வுடன்தான் ஓய்வு பெறவேண்டி இருந்தது.

**இடைக்கிடையே புலிகளது மோட்டார் தாக்குதல்களும் இடம்பெற்றன. ஆனால், புலிகளோ அந்த ஓய்வு காலத்தில் படைத்தரப்பின் புதிய நகர்வுகளை தடுப்பதற்கான ஆயத்தங்களை செய்து முடித்துவிட்டனர்.**

மாங்குளம் நகரை நோக்கி ஏப்ரல் 14ம் திகதிக்கு முன்னர் முன்னேறியிருந்தால் ஏற்படக்கூடிய இழப்புக்களைவிட, இனிமேல் நடைபெறும் நகர்வுகளில் பன்மடங்கு இழப்பு ஏற்படும். அந்தளவுக்கு எதிர்ப்பு யுத்த ஏற்பாடுகள் புலிகளால் செய்யப்பட்டன.

**ஆக, ஓய்வு கொள்ளவிடாமல் படையினரை தேடிச் சென்று தாக்குவதில் ஈடுபடாமல், ஓய்வுக்கு பின்னர் முன்னேறும் படையினரை மூர்க்கமாக தாக்கும் தயாரிப்புக்களை புலிகள் செய்து வைத்திருந்தனர்.**

20.04.98 அன்று கரிப்பட்ட முறிப்பு ஒலுமடுப் பகுதியில் இருந்து பெரும் எடுப்புடன் ஜயசிக்குறுய் படையினர் முன்னேறத் தொடங்கினர்.

படையினரது முன்னேற்ற ஏற்பாடுகளை உளவுப் புலிகள் அவதானித்தபடியே இருந்தனராம். டாங்கிகளும், கனரக வாகனங்களும், ஆட்டிலெறிப் பீரங்கிகள், மோட்டார்கள் சகிதமாக 20.04.98 அதிகாலை படையினர் தரைநகர்வில் ஈடுபட்டனர்.

**போக்குக் காட்டும் தாக்குதல்கள் நடத்திய புலிகள், படையினரை முன்னேற அனுமதித்து, தாம் ஏற்கனவே குறித்த இடத்தில் வைத்து தாக்கத் தொடங்கினர்.**

மோட்டார் ஷெல்கள் குறிதவறாமல் ஏவப்

அப்படியானால் ஒலுமடு படையினர் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது என்று அர்த்தம்.

**பின்னர் எப்படி ஒலுமடுவில் பாரிய புலிகளது முகாம் இருந்திருக்க முடியும்? அப்படியானால் எது பொய்யான செய்தி? முன்னர் கூறப்பட்டதா? பின்னர் கூறியதா? அந்த செய்தி ஊடகங்களுக்குத்தான் வெளிச்சம்.**

ஒரு கோட்டை சிறிதாக காட்ட அதன் பக்கத்தில் பெரிய கோடு ஒன்றைக் கீறும் தந்திரம்தான் இத்தகைய பிரசாரங்களும். தம்மில் 30 பேர் பலியானதால், புலிகள் தரப்பில் 60பேர் பலியானதாக செய்தி கூறியாகி விட்டது.

**ஒலுமடுவில் புலிகளது பாரிய முகாம் எதுவும் இருக்கவும் இல்லை.தாக்கப்படவும் இல்லை என்றே முரசுக்கு கிடைத்த தகவல்களும் கூறுகின்றன.**

புலிகளின் ஆட்டிலெறி மோட்டார் நிலைகள்மீது தாக்குதல் தொடுக்கப்பட்டதாக கூறப்படுவதும் சரியான செய்தியாகத் தெரியவில்லை. புலிகளிடம் இருப்பது மூன்று ஆட்டிலெறிகள்தான். ஆட்டிலெறி தளங்களை தாக்கியதாக இதுவரை பலதடவை கூறிவிட்டனர். அப்படியானால் புலிகளிடம் ஆட்டிலெறிகள் புதிது புதிதாக முளைக்கின்றன என்றுதான் நினைக்கவேண்டியிருக்கும்.

**மோட்டார் நிலைகள் என்றும் தனியாக எதுவும் கிடையாது. மோட்டார்களை ஒரே இடத்தில் வைத்து புலிகள் ஏவிக்கொண்டும் இருக்கமுடியாது. உடனுக்குடன் இடம்விட்டு இடம் நகர்த்தக்கூடிய வகையில் கனரக மோட்டார்களும், நகரும் படையணிகள் கொண்டு சென்று கிட்டத்தில் நின்று தாக்கக்கூடியதாக குறும்தூர மோட்டார்களும் பாவிக்கப்படுகின்றன.**

ஏதோ கண்ணுக்கெட்டாத தூரத்தில் நின்று புலிகள் தம்மை தாக்குவது போல சித்தரிக்க படைத்தரப்பு முயற்சிக்கிறதோ தெரியவில்லை. நகரும் படையணிகளை அண்மித்தே புலிகள் மோட்டார் தாக்குதல்களை தொடுக்கின்றனர். மோட்டார்கள் மட்டுமன்றி டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களையும் பயன்படுத்துகின்றனர்.

ஒலுமடு மோதலில் மூன்று டாங்கிகள்

கரிப்பட்ட முறிப்பில் இருந்து பழைய கண்டி வீதிவழியாக பழைய கொக்காவில் நோக்கியோ, அல்லது புதிய கொக்காவில் நோக்கியோ செல்லலாமா என்றும் யோசிக்கப்படுகிறது.

கரிப்பட்ட முறிப்பில் இருந்தும், ஒலுமடுவில் இருந்தும் செல்லும் இரு சாலைகள் சந்திக்கும் இடம் அம்பாகமம்.

தற்போது அம்பாகமம்வரை படையினர் நிலை கொண்டுள்ளனர். அம்பாகமத்தில் இருந்து பழைய கண்டி வீதிவழியாக செல்வதா? அல்லது, கரிப்பட்ட முறிப்பு ஒலுமடுப் பகுதியில் இருந்து மாங்குளம் நகர் நோக்கிச் செல்வதா? என்பதை தீர்மானிக்க முடியாமல் படையினர் குழம்பி உள்ளனர்.

**மாங்குளம் நகரை கைப்பற்றினால் வவுனியா- யாழ் சாலை வழியாக கிளிநொச்சி நோக்கி செல்லலாம். ஆனால் புலிகளது எதிர்ப்பைப் பார்க்கையில் மாங்குளம் நகரை நேரடியாக கைப்பற்றுவது சுலபமல்ல என்றே தெரிகிறது.**

அம்பாகமம் ஊடாக பழைய கண்டி வீதிவழியாக உட்பாதையால் சென்றால், புலிகளது முல்லைத் தளத்திலிருந்து தொடுக்கப்படும் பாரிய தாக்குதல்களில் சிக்க நேரிடும்.

**எப்படியோ இனி 'ஜயசிக்குறுய்' படையினர் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் கரணம் தப்பினால் மரணம் என்ற கட்டத்திலேயே உள்ளன. புலிகளின் வலுவானதும், செறிந்த தாக்குதல்களுக்கு வாய்ப்பானதுமான பகுதிகள் ஊடாகவே மேற்கொண்டு 'ஜயசிக்குறுய்' படைகள் நகரவேண்டி இருக்கும். ஒலுமடு மோதல் அதனையே முன்னறிவித்துள்ளது.**

இந்த நகர்வானது படையினரை சிறுகச் சிறுக அழித்து பின்னர் ஒரேயடியாக அழித்தொழிக்கும் புலிகளது போர்ப் பொறியில் சிக்குவதாக முடிந்துவிடவும் கூடும். ❑

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



**அமெரிக்க பிரதிநிதி** புத்தியைக் காட்டிப்போட்டார். "முட்டாள், அமெரிக்கா எப்போதடா நீதிக்காகப் பேசியிருக்கிறது?" என்று என்னை திட்ட வேண்டாம். அமெரிக்கப் பிரதிநிதியை சந்தித்ததை தேவதூதரைச் சந்தித்த மாதிரியும், "ஒரு பத்து நிமிஷம் தனியாக சந்திக்க ஏற்பாடு செய்து போட்டோம் தெரியுமோ?" என்று புண்ணிய பலன் போலவும் பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்த தமிழ்க் கட்சிகளை நினைத்தால் அழுவதோ, சிரிப்பதோ? சிரியுங்கோ... சாதாரண சிரிப்பல்ல விதியின் சிரிப்பாக சிரியுங்கோ.

**கூட்டான கட்சியின்** சம்பந்தமானவர் சகுனிவேலை பார்த்த கதை தெரியுமோ? தன்னந்தனியாக அமெரிக்க பிரதிநிதியை பார்த்தவராம். பொதுச் சந்திப்பில் ரெண்டு எழுத்தார் பற்றி அவர் பேசியது வேறாம். தனிச் சந்திப்பில் பேசியது வேறாம். பச்சைக் கட்சிதான் தடை என்றும் நீலக்கட்சி சட்டத்தரணி மாதிரி எடுத்துச் சொன்னவராம். 'அம்மா நல்லவரே' என்பதை உரைத்தலே தம் கடன் என்று கூட்டானு கட்சியினர் அலைகினம். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வேணும் எண்டு ஒரு சொல்லுச் சொன்னாரா பார்த்தியளோ? ஆக்கபூர்வமாக உதவவேணுமாம். அது என்ன ஆக்கபூர்வமாக உதவுதல்? பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவதை தொடரச் சொன்னாராக்கும்.

**பக்கத்து நாட்டு** தூதரகத்தினர் கழுகு நாட்டின் பிரதிநிதியின் விஜயம் பற்றிய பின்னணியை ஆராய நாட்டம் காட்டியுள்ளனராம். பிரதிநிதியாரின் விருந்துச் சந்திப்புக்களில் கலந்து கொண்ட தமிழ்க் கட்சி பிரமுகர்களை அழைத்து என்ன பேசினார், என்ன வீசினார்? என்று விலாவாரியாக கேட்டறிந்தவையாம். எங்கள் தமிழ்க் கட்சிகளைவிட ஏனையோர் யாவருமே தம் நாடு, தம் மக்கள் நலனில் எத்தனை விழிப்பாக இருக்கினம் பார்த்தியளோ?

**யாழ்ப்பாணத்தில்** அழகுராணிப் போட்டியில் முதல் இடங்கள் சீருடை நங்கைகளுக்காம். ஆறாவது இடம்தான் யாழ் நங்கைக்கு. முன்னர் அழகுராணிப் போட்டிகளை கண்டித்த தமிழ்க் கட்சிகள் இந்தத் தடவை வாய் திறக்கவில்லை. போகப்போக வாயே திறக்க முடியாத நிலைதான் ஏற்படும்போல கிடக்கு.

**'பொதியை தூக்கிக்கொண்டு** ஓடியவர் பதவி காலியாகும் வரை விடோம்' என்று தபால் ஊழியர்கள் அடம்பிடிக்கினம். பொதி என்றாலே பிரச்சனைதான் போல கிடக்கு. எப்படியோ ஒன்று பட்டுப் போராடி பொதியை திருப்பி வாங்கிப்போட்டினம் தபால் ஊழியர்கள். எது கிடைக்க வேண்டுமென்றாலும் கையேந்தினால் கிடைக்காது. போராடினால்தான் கிடைக்குது பார்த்தியளோ? மயிலே மயிலே இறகு போடென்றால் போடுமோ?

**'ஆலையில்லாத ஊருக்கு** இலுப்பைப் பூ சர்க்கரை' எண்ட கதையாய் போச்சுது யாழ்ப்பாண நிலவரம். யாழ் போன ஆரியரிடம் தங்களுக்கு சீருடையினரால் நேரும் துன்பக் கதையை முறையிட்டதாம் பிரஜைகள் குழு. ஆனாலும் ஒரு விசயத்தைத் துணிந்து சொல்லியிருக்கினம். "எங்களுக்கு அபிவிருத்தியைவிட நிரந்தர சமாதானம்தான் தேவை. ரெண்டு எழுத்தாருடன் பேசவேண்டும். பிரச்சனை தீரவேண்டும்" எண்டும் சனம் அவரிடம் கூறியதாம். அபிவிருத்தி செய்வதாக விளம்பரம் தேடிக்கொண்டு, இலாபம் காணப் போனவருக்கு சனம் சொன்ன உண்மை அதிர்ச்சியான செய்திதான். யார் யாரிடமெல்லாம் முறையிடுவது என்ற விவஸ்தை இல்லாமல் போக யார் காரணம்? யார் யார் முறையிடலாம் என்று சனம் முந்தி நினைத்ததோ அவையெல்லாம் முறையற்றவையாக மாறிக்கொண்டிருப்பதுதான் காரணமோ?!

**'சங்கிலியன் படை'** என்ற பெயரில் பிரசுரமே வரவில்லை என்று சீருடை அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார். யாழ்ப்பாணம் நல்லூரில் வைத்து தாராளமாக விநியோகிக்கப்பட்டதைக்கூட அவர் அறியவில்லையோ?

**யாழ்ப்பாணத்தில் இருக்கிற** தமிழ் கட்சிகளை 'கைவிரல் சொடுக்கும் நேரத்திற்குள் பார்சல் பண்ணி அனுப்ப' தம்மால் முடியும் என்று சீருடை முக்கியஸ்தர் ஒருவர் கூறினாராம். நிதிப் பறிப்பு விவகாரம் ஒன்று பற்றி முறையிடச் சென்ற குடிமகனிடமே அப்படி கூறப்பட்டதாம். அப்படியானால், கடைசியாக இக் கட்சிகளைத்தான் பொதியாக மாற்றித்தரப்போகினமாக்கும்!

**உள்ளூராட்சிச் சபை** உறுப்பினர்கள் மோட்டார் சைக்கிள் வாங்க 40 ஆயிரம் ரூபா லோன் கொடுக்குதாம் வங்கி. இதனால் கட்சிகளுக்குள் பெரும் குழப்பம். தேர்தல் செலவுக்கு போன பணத்தை மீட்க லோனை வாங்கி எடுத்தால் என்ன? என்று சில கட்சிகளின் பொறுப்பாளர்கள் யோசிக்கினமாம். 'இப்படி என்றால் இன்னும் கொஞ்சம் கஷ்டப்பட்டு உறுப்பினர் தொகையை கூடவரப்பண்ணியிருக்கலாம,' என்றார் சற்றுக் குறைந்த உறுப்பினர் எண்ணிக்கை உள்ள கட்சிப் பொறுப்பாளர் ஒருத்தர். விஷயம் அறிந்த பிரமுகர்கள் சிலர் கட்சிகளை நாடி உள்ளூராட்சி சபை 'பதவிகள் காலியாக இருந்தால் நிரப்ப ரெடி' என்று சொல்லுகினமாம். எல்லாம் மக்கள் நலன்தான்!

**இவ்வாரக் கவிதை:**

"இங்கு
விண்வெளி சென்று
ஆராய்ச்சி செய்ய
விஞ்ஞானிகள் தேவையில்லை.
அதை விலைவாசியே
பார்த்துக் கொள்ளும்!" ■



படிப்பகம்

www.padippakam.com




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# நம்ப நடந்தனர் நம்பி நடக்கவில்லை

யாழ் குடாநாட்டில் இருந்து இந்தியப் படையினர் வெளியேறிய பின்னர் அங்கு விஜயம் செய்தார் 'ரைம் ஒஃப் இந்தியா' என்னும் சஞ்சிகை நிருபர். அவரது பெயர் சீமாகுகா.

அன்று (1990 ஆரம்பத்தில்) அவர் எழுதிய கட்டுரையின் பலகருத்துக்கள் இன்றுகூட தமிழ் மக்களின் 'மத்தியில் இருந்து வருபவைதான். இதோ கட்டுரையின் முக்கிய பகுதிகள்:

**"விடுதலைப் புலிகள் தங்கள் இராணுவ பலத்தின் மூலம் சிங்கள சமூகத்திற்கும், முக்கியமாக ஜனாதிபதிக்கும் இனிமேலும் தமிழ் மக்களை சாதாரணமாக நினைத்துவிட முடியாது என்று நிரூபித்துக் காட்டியுள்ளனர். இதுதான் யாழ் குடாநாட்டு மக்களதும் பொது அபிப்பிராயமாகவும் இருக்கிறது.**

**சிறிலங்கா அரசு அமைதியை விரும்புவதாயின், அவர்கள் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கு அவர்களது நியாயபூர்வமான உரிமைகளை வழங்க வழி செய்ய வேண்டும்."**

யாழ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தமிழ் அறிஞர் ஒருவர் கூறினார்: "இலங்கை சுதந்திரம் பெற்றபின்னர் நாம் தொடர்ந்து தலைகுனிந்த மக்களாக இருந்தோம். இப்போதுதான் நாங்கள் முதற் தடவை யாக தலை நிமிர்ந்துள்ளோம்.

தமிழ் மிதவாத அரசியல்வாதிகள் பல தலைமுறைகள் சம உரிமை கேட்டுக் கெஞ்சியும் அது நிராகரிக்கப்பட்டது. ஆனால் இன்று விடுதலைப் புலிகள் தமது இராணுவத் துணைகொண்டு தமிழ் மக்களை விரோதித்துக் கொள்வது நல்லதல்ல என்பதை ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு உணரவைத்துள்ளனர்."

இன்னொருவர் கூறினார்: "கொழும்பில் சுகமாக, சொகுசாக வாழ்ந்துகொண்டு ஆளும் கட்சிக்கு துதிபாடுவதும், சலுகைகள் பெறுவதுமே தமிழ் அரசியல்வாதிகளின் வழக்கம். ஆனால் இன்று நாம் ஒரு இயக்கத்தை கொண்டுள்ளோம். அவர்கள் எவ்வித சலுகைகளுக்கும் ஆசைப்படுபவர்கள் அல்ல. கொண்ட இலட்சியத்திற்காக உயிரையும் கொடுக்கத் தயாராக உள்ளவர்கள்" என்றார்.

ஒவ்வொருவரும் அமைதியை விரும்பினாலும் ஜனாதிபதியுடனான தற்போதைய பேச்சுவார்த்தை முறிவடைந்தால் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் போராடுவார்கள் என்பதை உணர்ந்தே உள்ளனர்.

பிரேமதாசா பிரதம மந்திரியாக இருந்தபோது வீடமைப்பு அமைச்சில் கடமை ஆற்றிய தற்போதைய யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் துரைராஜா குறிப்பிட்டார்: "ஜனநாயகத்தைப் பற்றி பேசுவது யார்? நீங்கள் ஒன்றை நினைவில் வைத்திருக்க வேண்டும். உலகில் உள்ள அனைத்து புரட்சிகர இயக்கங்களும் கண்டனங்களைச் சகித்துக் கொண்டதில்லை.

விடுதலைப் புலிகள் இல்லாதுவிட்டிருந்தால் இன்று தமிழ், தமிழர் என்ற சமுதாயம் இருந்திருக்காது. என்றோ அழிந்துபோயிருக்கும்" என்றார் அவர்.

மேற்கண்டவாறு அக் கட்டுரையில் கூறப்பட்டிருந்தது.

## குடியேற்றம்

தமிழ் பேசும் மக்களின் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறுவதற்குரிய காரணங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும் ஒன்று.

அமைதிவழியில் குடியேற்றங்களை நிறுத்த மேற்கொண்ட முயற்சிகள் அனைத்




'ஐலன்ட்' வெளியிட்ட காட்டூன்

தும் விழலுக்கு இறைத்த நீராகின.

'எல்லைக் காவலர்' என்றெல்லாம் தங்களுக்கு பட்டம் சூட்டிக்கொண்டு, தேர்தலில் வெற்றிபெற அப்பட்டங்களை பயன்படுத்தினர் முன்னாள் தலைவர்கள்.

**ஆயுதப் போராட்டம் மட்டும் அன்று ஆரம்பமாகாது இருந்திருந்தால் வடக்கு-கிழக்கில் பெரும்பாலான நிலம் துணிச்சலான குடியேற்ற வெள்ளத்தில் காணாமல் போயிருக்கும்.**

கிழக்கில் மட்டுமன்றி வடக்கில்கூட பெரும்பாலான குடியேற்றங்கள் நடத்தி முடிக்கப்பட்டிருக்கும்.

**காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை அபிவிருத்தி செய்வது, அங்கு வேலை வழங்குவது என்ற போர்வைகளில் சிங்களக் குடியேற்றத்துக்கு குடாநாட்டிலும் அடித்தளமிட்டார் ஜே.ஆர்.**

ஆயுதப் போராட்ட அலையில் அத்திட்டங்கள் எல்லாம் காணாமல்போயின.

இன்று கிழக்கில்கூட திட்டமிட்ட குடியேற்றங்களை பாரியளவில் விரிவாக்கினால் இராணுவ பாதுகாப்பு கொடுக்க வேண்டி இருக்கும்.தாக்குதலை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்னும் நிலை இருப்பதால்தான் குடியேற்ற வெள்ளம் கரைபுரண்டோடாமல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மட்டுமன்றி, ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர்கூட திருமலையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மீது தாக்குதல் நடத்தி இருந்தனர்.

ஆயுதம் தூக்கி கண்ட பலன் என்னவென்று இன்று கேட்கும் நன்றி கெட்ட சீவன்களும் உள்ளன.

ஆயுதம் ஏந்தி மரணித்த சகல இயக்க போராளிகளுக்கும் வடக்கு-கிழக்கை இந்தளவிலாவது காத்து நின்ற பெரும் புகழ் சேரும்.

**ஆனால் தங்கள் சகாக்களின் தியாகங்களை தங்கள் சுயநலன்களுக்காக கூவிவிற்றுக் கொண்டும், வடக்கு-கிழக்கை கூறுபோடும் தீர்விற்கான சூழலுக்காக அரசு நடத்தும் போருக்கு ஏதோ ஒரு வகையில் துணை போய்க் கொண்டும் இருப்போருக்கு அந்தப் புகழில் நெல்முனையளவு உரிமையும் கிடையாது.**

ஆயுதம் ஏந்தினால்தான் வீரமாகப் பேசலாம் என்றில்லை. அமைதிவழியில்கூட துணிச்சலாக நின்று விட்டுக் கொடுக்க முடியாத உரிமைகளுக்காக குரல் கொடுக்கலாம்.

ஜனாதிபதி பிரேமதாசாவுடன் அமைதியான சூழலில் பேச்சு நடந்து கொண்டிருக்கையில் புலிகள் முன்வைத்த கோரிக்கைகளில் ஒன்று, 1948ம் ஆண்டின் பின்னர் அதாவது இலங்கை சுதந்திரம் அடைந்தபின்னர் தமிழ் பேசும் மக்களது தாயகத்தில் நடத்தப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்கள் அகற்றப்பட வேண்டும்.

வேறு கட்சிகள் அப்படியொரு கோரிக்கையை முன்வைத்திருந்தால் பிரேமதாசா தூக்கி ஓரத்தில் போட்டிருப்பார். புலிகள் முன்வைத்ததால் புறக்கணிக்க இயலவில்லை. பலம்தானே எதனையும் தீர்மானிக்கிறது.

வடக்கு-கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற நிலவரம் பற்றி ஆராய ஒரு குழுவை நியமித்தார் பிரேமதாசா.

ஐந்துபேர் கொண்ட அக் குழுவில் இருவர் சிங்களவர். இருவர் தமிழர், ஒருவர் முஸ்லிம்.

இனப்பிரச்சனையின் மூலகாரணமே குடியேற்றத் திட்டம்தான். அதனைப் பற்றிய நிலைப்பாடு முதலில் அவசியம் என்று புலிகள் வலியுறுத்தி இருந்தனர்.

## தடுக்கப்பட்டது

இலங்கை அரசுடன் நம்பநட நம்பி நடவாதே என்ற ரீதியில் தந்திரோபாய உறவைத்தான் புலிகள் வைத்திருந்தனர்.

ஆனால் அதன்பின்னர் இலங்கை அரசுடன் நட்புக்கொண்ட தமிழ் இயக்கங்களும் தாமும் தந்திரோபாய உறவு கொள்வதாகவே தங்கள் உறுப்பினர்களுக்கு கூறின. இன்றோ அரசுடன் ஒன்று கலந்து அரசின் இன ஒடுக்குதலை நியாயப்படுத்தும் விசுவாசமான பேச்சாளர்களாக மாறிநிற்கின்றன.

**அப்படியிருந்தும் இந்தக் கட்சிகளது கருத்துக்கள் முக்கியமான பிரச்சனைகளில் அரசு செவிமடுக்கிறதா இல்லையா? என்பதற்கான பதிலை இத் தொடரை வாசிக்கும் உங்களிடம் விட்டுவிடுகிறேன்.**

பிரேமதாசா அரசுடன் புலிகள் பேச்சு நடத்திய காலத்தில் மட்டக்களப்பு வலையிறவு விமான நிலைய விஸ்தரிப்புக்காக அங்கிருந்த மக்களை வெளியேறுமாறு கோரப்பட்டது.

அந்த முடிவை புலிகள் எதிர்த்தனர். மட்டக்களப்பில் வைத்து விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் பெரல் குணவர்த்தனாவை புலிகளது மக்கள் முன்னணித் துணைத் தலைவர் கரிகாலன் சந்தித்து உரையாடினார்.

உடனடியாக விஸ்தரிப்பு முயற்சி நிறுத்தப்பட்டது. மாடிக்கட்டடம் கட்டும் முயற்சியும் தடைசெய்யப்பட்டது.

புலிகள் அரசு பேச்சு முறிந்த பின்னர் அரசுடன் நட்புக் கொண்ட ஏனைய தமிழ்க் கட்சிகளால் விமான நிலைய விஸ்தரிப்பை நிறுத்த முடியவில்லை.

## ஆறாவது சட்டத்திருத்தம்

தமிழ் மக்களை இனக்கலவரங்கள் மூலமும், இனவாதக் காடையர்களை ஏவியும் அடிபணியவைப்பதிலேயே முந்தைய ஆட்சி



யாளர்கள் கவனமாக இருந்தனர்.

கூட்டணியினர் 1977 பொதுத்தேர்தல் மேடைகளில் ஒரு சம்பவத்தை நினைவூட்டுவது வழக்கம்.

**1956ல் இனக்கலவரம் வெடித்து கொழும்பு அல்லோலகல்லோலப்படுகிறது. அப்போது பொலிஸ் மா அதிபர் அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவிடம் ஓடோடிப்போய், 'கலவரத்தை கட்டுப்படுத்த கடும் நடவடிக்கை' எடுப்பதற்கு உத்தரவு கேட்கிறார்.**

**பிரதமர் பண்டாரநாயக்கா மிக நிதானமாக கூறினாராம்; "24 மணிநேரத்துக்கு விட்டுப்பிடிப்போம். அதன்பின்னர் பார்த்துக் கொள்ளலாம்!"**

காடைத்தனத்தால் மட்டும் தமிழ் மக்களை அடக்குவதை நம்பியிராமல், சட்ட ரீதியாக தமிழ் மக்களை ஒடுக்க பலசட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

அவற்றில் ஒன்றுதான் அவசரகாலச் சட்டம். சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதம

# புலிகள் விடுத்த கோரிக்கைகள்

ராக இருந்தபோது அச் சட்டத்தின் கீழ்தான் பல நூறு தமிழ் இளைஞர்கள் கைதாகி விசாரணை இன்றி ஆண்டுக்கணக்காக சிறையில் வாடினர்.

**பின்னர் ஜே.ஆர். பதவிக்கு வந்த பின்னர் அவ்சரகால சட்ட அதிகாரங்களை பயன்படுத்தியே இன்பம், செல்வம், கோப்பாய் பரமேஸ்வரன் உட்பட பலரை இரவோடு இரவாக கைது செய்து படுகொலை செய்து வீதிகளில் வீசி எறிந்தனர்.**

வரைமுறையற்ற கைதுகளுக்கு மட்டுமல்லாமல் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், கூட்டங்கள், கருத்தரங்குகள் நடத்துவதை தடை செய்யும் அதிகாரமும் அவசரகால சட்டத்திற்கு இருக்கிறது. சுருக்கமாகக் கூறினால் தமிழர் விரோத,ஜனநாயக விரோத சட்டமே இதுவாகும். சில சமயங்களில் எதிர்க்கட்சியை ஒடுக்கவும் இதனை ஆளும் கட்சி பயன்படுத்துவது உண்டு.

இத்தொடர் எழுதப்படும்போது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அவசரகால சட்டத்தன்கீழான மாபெரும் கொடூரத்தையும், அதன் கரங்களால் இன கௌரவம் துகிலுரியப்பட்ட கொடுமையையும் தமிழ் மக்கள் அனுபவித்துள்ளனர்.

அவசரகால சட்டம் மட்டும் போதாது என்று நினைத்து விடுதலைப் புலிகள் தடைச்சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் போன்றவையும் ஐ.தே.கட்சி ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்டன.

1983 இனக் கலவரத்தின் பின்னர் ஜே.ஆர். கொண்டுவந்த சட்டம்தான் ஆறாவது சட்டத்திருத்தம்.

1978இல் புதிய அரசியலமைப்பை அறிமுகம் செய்தார் ஜே.ஆர். அதன்பின்னர் அவர் பதவியில் இருந்து இறங்கும்வரை மொத்தம் பதினெட்டுத் திருத்தங்களை செய்தார். அப்போது ஆளும் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் இருந்தமையால் திருத்தங்களை செய்ய முடிந்தது.

அத் திருத்தங்களுக்குள் முக்கியமானது 'ஆறாவது சட்டத்திருத்தம்.

**இச் சட்டத்தின் முக்கிய நோக்கம் 'தமிழீழ போராட்டத்தை' ஒடுக்குவதும், சட்டரீதியாக தடை செய்வதுமே.**

இச் சட்டத்தின் முதலாவது துணைப்பிரிவின்படி இலங்கைத் தீவுக்கு உள்ளேயோ, வெளியேயோ, வசிக்கும் எவரும் சிறிலங்காவின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வேறு தனியான அரசை நிறுவுவதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவு நல்குவதோ, நிதி உதவி வழங்குவதோ, வலியுறுத்துவதோ தடை செய்யப்பட்டது.

அதேபோல எந்த அரசியல் கட்சியோ, அமைப்போ இலங்கையின் எப்பகுதியிலும் வேறு ஓர் அரசை நிறுவுவதை நோக்கமாக கொண்டிருப்பதும் தடை செய்யப்பட்டது.

**மேற்கண்ட சட்டப்படி பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச ஊழியர்கள், நீதிபதிகள், சட்டத்தரணிகள் போன்றோர் சிறிலங்கா அரசியல் யாப்பைப் பேணுவோம் என்று சத்தியப்பிரமாணம் செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டது.**

சத்தியப் பிரமாணப்படி நடக்காதவர்களுக்கும், பிரிவினைக்கு ஆதரவாளர்களிடமும் அசையும், அசையாத சொத்துக்கள் மற்றும் பதவிகள் பறிக்கப்படும் என்றும் ஆறாவது சட்டத்திருத்தம் கூறியது.

## புலிகள் நிபந்தனை

**ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்கினால்தான் தேர்தலில் போட்டியிட புலிகளது மக்கள் முன்னணி முன்வரும் என்று பிரேமதாசாவிடம் புலிகள் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டனர்.**

அக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பிரேமதாசா, அதற்கான தீர்மானம் ஒன்றை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்போவதாக புலிகளின் தூதுக்குழுவினரிடம் உறுதியளித்தார்.

ஜே.ஆர். காலத்தில் ஐ.தே.கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பாராளுமன்றத்தில் இருந்தது.

**பிரேமதாசா காலத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருக்கவில்லை. எனவே பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவைக் கோர உள்ளதாக பிரேமதாசா தெரிவித்தார்.**

அப்போது பாராளுமன்றத்தில் இருந்த ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப். இரண்டும் ஆறாவது சட்ட திருத்தத்தை நீக்க ஆதரவு தரமாட்டோம் என்று கூறிவிட்டன.

**'புலி எதிர்ப்பு' என்ற கண்ணாடியை மாட்டிக்கொண்டு,அதன் வழியாக அடக்குமுறைக்கான சட்டங்களைக்கூட நியாயப்படுத்த தமிழ்க் கட்சிகள் முனைந்தமை துயரமான வரலாற்றுக் காட்சிகளாகும்.**

ஈழக் கோரிக்கையை நாம் கைவிட்டுவிட்டோம், எனவே ஆறாவது சட்ட திருத்தம் இருந்தால் எமக்கென்ன? என்று ரெலோ இயக்கம் கேள்வி எழுப்பியது.

அது மட்டுமல்லாமல் ரெலோவின் தலைமைக் குழுவால் ஒரு அறிக்கையும் விடுக்கப்பட்டது.

'தமிழீழப் போராட்டத்தில் குதிக்க ஆழமான அரசியல் சதியில் விடுதலைப் புலிகள் இறங்கியுள்ளனர். அந்த சதித் திட்டத்தின் ஓரங்கமாகவே ஜனநாயக வேசம் போட்டுக்கொண்டு தேர்தல் நாடகம் ஆடவும் முற்படுகின்றனர்.' என்று அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

ரெலோவின் முழுமையான பெயர் தமிழீழ விடுதலை இயக்கம். பெயரில் தமிழீழத்தை வைத்துக்கொண்டு தமிழீழப் போராட்டத்துக்கு எதிராக அறிக்கை விட்டனர். ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்குவதற்கு ஆதரவளிக்க மறுத்தனர். தெளிவற்ற நிலைப்பாடுகள்தான்.

இக் காலகட்டத்தில் ஏனைய இயக்கங்களுக்கு புலிகளால் ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அதில் தெரிவிக்கப்பட்டு இருந்ததாவது:

"தமிழீழ இளைஞர்கள் சிலரை தவறாக வழிநடத்தும் கூலிக் குழுக்களின் தலைவர்களே! இனியாவது திருந்துங்கள்.

**ஒரு விடுதலைப் போருக்காக மாற்று அரசுகளை பயன்படுத்துவது வேறு, மாற்று அரசுகளின் நோக்கங்களுக்காக விடுதலைப் போரை பயன்படுத்துவது வேறு.**

இந்திய 'றோ'வின் சூழ்ச்சிக்குப் பலியாகி தமிழ் இளைஞர்களை குடிவெறிக்கும், போதைப் பொருட்களுக்கும், நீலப் படங்களுக்கும், பாலியல் வன்முறைக்கும் பழக்கி எடுத்து, இறுதியில் அவர்களை பிணங்களாக மாற்றாதீர்கள்.

பாடசாலை மாணவர்களை, முதியவர்களை, தாய்மார்களை மிரட்டாதீர்கள்.

விடுதலைப் போருக்கும் சண்டித்தனத்துக்கும் வேறுபாடு உண்டு. விளங்கிக் கொள்ளுங்கள். தமிழ் இளைஞர்களை கூலிக்கு மாரடிக்க வைக்காதீர்கள்.

உங்கள் மக்களை உங்கள் கைகளால் அழிப்பதுதான் உங்கள் போராட்டமா?" என்று அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(தொடர்ந்து வரும்)

## ரஜினி திரணகம படுகொலை
### அதற்கு நாம் பொறுப்பல்ல

அன்புள்ள அற்புதன்.

வணக்கம்

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் ரஜினி திரணகம கொலையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க உறுப்பினர்கள் சிலரே சம்பந்தப்பட்டதாக தங்கள் தொடரில் தெரிவித்திருந்தீர்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைமையை நேரடியாக தொடர்புபடுத்தி தாங்கள் குறிப்பிடவில்லை. யாழ் மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். இராணுவப் பொறுப்பாளராக இருந்த ரவிசங்கர் என்னும் ராபீக்தான் சூத்திரதாரியாக இருந்தார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ரவிசங்கர் என்னும் ராபீக் தற்போது எமது கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். எனவே அவர்மீதான குற்றச்சாட்டை மறுக்கும் அவசியம் எமக்கில்லை. எனினும் நான் அறிந்தவரை, இன்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைமையில் உள்ளவர்கள் அறிந்தவரை ரஜினி திரணகம கொலைக்கும் ராபீக்குக்கும் தொடர்பில்லை என்பதை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

விடுதலைப் புலிகள்தான் ரஜினி திரணகம கொலையில் நேரடியாக சம்பந்தப்பட்டிருந்தனர்.

இவ் விடயத்தில் தங்களுக்கு கிடைத்த தகவல் தவறானதாகும். எனவே எமது மறுப்பை தங்கள் தொடரில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தம்பிராசா சுபத்திரன்,
ஈ.பி.ஆர்.எல்.எஃப்.
-மத்திய குழு உறுப்பினர்-







படிப்பகம்

www.padippakam.com

# மாகாணசபைத் தேர்தல் ஆட்சியாளரின் வியூகம்

**அலசுவது- இராஜதந்திரி**

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு ஆட்சியாளர்கள் திட்டமிட்டிருக்கின்றனர்.

எனினும் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்தும் யோசனை இதுவரை இருப்பதாகத் தெரியவில்லை.

வடக்கு-கிழக்கில் பல பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால்தான் அங்கு மாகாணசபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் விரும்பவில்லை என்று காரணம் கூறப்படுகிறது.

**ஆனால், அது உண்மையான காரணமல்ல என்பது புலனாகின்றது. மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு தமது வெற்றிக்காக ஆட்சியாளர்கள் வகுக்கப்போகும் வியூகத்தின் தேவை கருதியே அங்கு தேர்தல் நடத்த விரும்பவில்லை.**

உள்ளூராட்சி தேர்தலாக இருந்தாலும், மாகாணசபைத் தேர்தலாக இருந்தாலும் ஆட்சியில் உள்ள கட்சிக்கு வெற்றிக்குரிய சாதக பாதகங்களை கணிப்பிட்டே தேர்தல் நடைபெறும் காலகட்டம் தீர்மானிக்கப்படுகிறது.

**வடக்கு-கிழக்கில் தமது அரசியல், இராணுவ இலாபம் கருதியே குட்டித் தேர்தல்கள் ஆட்சியாளர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.**

அபிவிருத்தி என்றுகூறி வெளிநாடுகளில் நிதி உதவி பெற்றுக்கொள்ளவும், தமது இராணுவத்தீர்வு முயற்சிக்கு ஜனநாயக சாயம் பூசவுமே சமீபத்தில் யாழ் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை ஆட்சியாளர்கள் நடத்தியிருந்தனர்.

**சுதந்திரமான தேர்தலை நடத்தக்கூடிய சூழல் உள்ளதா என்பது குறித்தோ, பெரும்பாலான வாக்காளர்கள் இடம்பெயர்ந்துள்ளமை குறித்தோ எவ்வித அக்கறையும் இன்றியே உள்ளூராட்சித் தேர்தலை துடாலடியாக நடத்தி முடித்தனர்.**

எனவே, வடக்கு-கிழக்கில் தேர்தல்கள் நடத்துவது என்பது ஆட்சியாளரின் அரசியல், இராணுவ நலன் சார்ந்த ஒன்றாகவும், வடக்கு-கிழக்குக்கு வெளியே தேர்தல்கள் நடத்துவது என்பது ஆளும் கட்சியின் வெற்றி பற்றிய அக்கறை சார்ந்த ஒன்றாகவுமே அமைகின்றன.

**தற்போதுள்ள நிலையில் வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கு தேர்தல் நடத்தப்படுமானால் தமிழ்பேசும் தரப்புக்கு பாதகமான ஒன்றாகவும், அரசியல் தீர்வு ஒன்றை வழங்கமுடியாத ஆட்சியாளரின் இயலாமையை உலகின் பார்வையில் இருந்து மூடி மறைப்பதாகவுமே அமையும்.**

ஆனாலும், வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கு ஏனைய மாகாண சபைகளுடன் தேர்தல் நடத்தப்படுமானால் ஏனைய மாகாண சபைகளில் தமது வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படும் என்று ஆளும் கட்சியினர் அஞ்சுகின்றனர்.

**வடக்கு-கிழக்கை பிரிக்கக்கூடிய தீர்வொன்றையே தாம் வழங்கப்போவதாக சிங்கள மக்களை நம்பவைக்க ஆட்சியாளர்கள் முயன்று வருகின்றனர்.**

அதன் காரணமாகவே வடக்கு-கிழக்கை பல கூறுகளாக துண்டு போடக்கூடிய தங்கள் யோசனையை ஆட்சியாளர்கள் பகிரங்கமாக அறிவித்தும் இருந்தனர்.

தமிழ் பேசும் மக்களுக்கு அதிக உரிமைகளையும், அதிகாரங்களையும் அரசின் தீர்வு யோசனைகள் வழங்கியுள்ளன என்று சிங்கள மக்கள் நினைத்துவிடக்கூடாது என்ற அரசியல் அச்சம் காரணமாகவே துண்டுபோடும் திட்டத்தை அவசர அவசரமாக நீதியமைச்சர் பீரிஸ் வெளியிட்டிருந்தார். பிரிப்பு விவகாரத்தில் தமிழ் கட்சிகளது கருத்துக்களை ஏற்கப்போவதில்லை என்றும் சிங்கள மக்களுக்கு திட்டவட்டமான உத்தரவாதத்தையும் வழங்கியிருந்தார்.

**இவ்வாறான நிலையில் வடக்கு-கிழக்கு இணைந்த மாகாணசபைக்கு தேர்தல் நடத்தப்படுமானால், இணைப்புக்கு தாமும் ஆதரவானவர்கள் என்று சிங்கள மக்கள் நினைத்துவிடக்கூடும் என்றே ஆளும் கட்சியினர் அஞ்சுகின்றனர்.**

சமீபத்தில் தன்னைச் சந்தித்த தமிழ்க் கட்சியின் தூதுக்குழு ஒன்றிடம், "மாகாணசபைத் தேர்தல் முடியும்வரை தீர்வுப் பொதி பற்றிய பேச்சையே என்னிடம் எடுக்கவேண்டாம்" என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார் என்று அறியமுடிகிறது.

**இன்றைய ஆட்சியாளர்கள் தமது நலன்களுக்காக இரண்டுவிதமான உபாயங்களை கைக்கொள்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கு சகல உரிமைகளையும், ஜனநாயக சூழலையும் வழங்குவதே தம் இலட்சியம் என்று உலகை நம்பவைப்பதே இன்றைய ஆட்சியாளரது வெளியுலகம் முன்பான உபாயமாக விளங்குகிறது.**

**தமிழ் மக்களுக்கு அதிக உரிமைகளும், போதிய ஜனநாயகமும் வழங்கப்படுவதாக சிங்கள மக்கள் நினைத்துவிடக்கூடாது என்பதே உள்நாட்டில் இன்றைய ஆட்சியாளரது உபாயமாக இருக்கிறது.**

வடக்கு-கிழக்கை துண்டுபோடுவதில் தமக்குள்ள உறுதியை திட்டவட்டமாக அறிவித்தமையானது தமிழ் மக்களுக்கு அதிக உரிமைகள் வழங்கப்போவதில்லை என்பதை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

**அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படுதல், சமீபகாலத்தில் நிகழ்ந்த பாரிய கைதுகள், இந்து மதகுருமார்களை அவமதித்த சம்பவங்கள் போன்றவை தொடர்பாக ஜனாதிபதியோ ஏனைய முக்கிய அமைச்சர்களோ உடனடியாக வருத்தம் தெரிவிக்க முன்வரவில்லை.**

இந்து மதகுருமார்களை அவமதித்தமை தமிழ் மக்களிடையே உணர்வுபூர்வமான பிரச்சனையாக பெரிதான பின்னரும்கூட ஜனாதிபதி உட்பட ஆட்சியில் உள்ள முக்கியஸ்தர்கள் அதனையிட்டு அலட்சிய மனோபாவத்தையே வெளியிட்டிருந்தனர்.

'நாம் அப்படியொன்றும் தமிழ் மக்களிடம் அதிக கரிசனை காட்டவில்லை. ஒரு வரையறைக்கு பின்னர் தமிழர்கள் வாலாட்டினால் ஒட்ட நறுக்கவும் தயங்கோம், அவர்களது ஜனநாயக உரிமைகளை கட்டுப்படுத்தவும் பின்நிற்கமாட்டோம்' என்று சிங்கள மக்களை நினைக்கத்தூண்டும் விதமாகத்தான் ஆட்சியாளர்கள் மௌனம் அனுஷ்டித்தனர் என்றே கருதவேண்டியுள்ளது.

**போரில் ஏற்படும் பின்னடைவுகள், தமது பாதுகாப்பு ஏற்பாடுகளில் உள்ள ஓட்டைகள் போன்றவற்றால் சிங்கள மக்களிடம் ஏற்பட்டுள்ள அதிருப்திகளை தணிக்க வகை தொகையற்ற தமிழர் கைதுகள் பற்றிய செய்திகளை ஆட்சியாளர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.**



தமிழ் மக்களை துன்புறுத்துவது மூலம் சிங்கள வாக்காளர்களை இன்புறுத்தும் அரசியல் உபாயம்தான் கொழும்பில் நடைபெற்று முடிந்த பரவலான கைது வேட்டைகளாகும்.

**யாழ் குடாநாட்டில் 700 பேர்வரை கைதாகி பலியான மிகப்பாரிய மனித உரிமை மீறல் முதற்கொண்டு, குண்டுவீச்சுக்கள், தேவாலயங்கள்மீதான தாக்குதல் உட்பட கொழும்பில் நடைபெற்ற இனரீதியான அவமதித்தல் சம்பவம்வரை, இவை எது தொடர்பாகவும் ஜனாதிபதியோ அவரது ஆட்சியின் முக்கிய சகாக்களோ இன்றுவரை கருத்து எதனையும் பகிரங்கமாக கூறியதில்லை.**

**ஜனாதிபதியை சந்திக்கும் தமிழ்க் கட்சித் தலைவர்கள்தான், ஜனாதிபதி வருந்தினார் என்றும், கண்கள் கலங்கினார் என்றும் உரிய அதிகாரிகளை தொடர்பு கொண்டு உத்தரவிட்டார் என்றும் விதம் விதமாக செய்திகள் கூறிவருகின்றனரே தவிர, ஜனாதிபதி பகிரங்கமாக எதனையும் தெரிவித்தது இல்லை.**

சென்ற ஆட்சிக் காலத்தில் காணாமல்போனவர்கள் எந்தெந்த குழிகளில் இருக்கிறார்கள் என்பதை கண்டறிந்து, அவர்களது எலும்புக்கூடுகளை வெளியே எடுத்தவர் இன்றைய ஜனாதிபதி. அவ்விவகாரத்தில் படையினரை பகிரங்கமாக குற்றம்சாட்டவோ, முன்னாள் ஆட்சியாளரைச் சாடவோ எந்த விசாரணைக் கமிஷன் முடிவுக்காகவும் ஜனாதிபதி காத்திருக்கவில்லை.

**ஆனால் தனது ஆட்சிக்காலத்தில், தனது கட்டுப்பாட்டில் உள்ள படையினரால் யாழ் குடாநாட்டில் காணாமல்போனோர் விவகாரத்தில் விசாரணைக் கமிஷன் போடுவதாக கூறியுள்ளாரே தவிர.**

**அந்த மனித அவலத்தைப் பற்றி கருத்து எதனையும் வெளிப்படையாக தெரிவிக்கவில்லை.**

கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை. இன்றைய ஆட்சியாளர்கள் வெளியுலகின் முன்பும், உள்நாட்டிலும் காண்பித்துவருகின்ற இரண்டு முகங்களை தமிழ் பேசும் மக்கள் இன்று நன்கு அறிந்துகொண்டுள்ளனர்.

எனவே, மாகாணசபைத் தேர்தலை வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் நடத்துவதும் இன்றைய ஆட்சியாளரின் சுயரூபத்தையே வெளிப்படுத்தி இருக்கிறது.

**தமிழ்க் கட்சிகள் உடன்படத் தயங்கிய நிலையிலும் யாழ் உள்ளூராட்சித் தேர்தலை ஆட்சியாளர் அறிவித்தனர். ஆனால், வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றால் போட்டியிடத் தயார் என்று தமிழ்க் கட்சிகள் சில தங்கள் ஆசையைத் தெரிவித்தும்கூட ஆட்சியாளர்கள் நடத்த முன்வரவில்லை.**

வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்துவது மூலம் தமிழ் பேசும் தரப்பை பலவீனமாக்கும் அரசியல், இராணுவ ஆதாயம் இருந்தாலும்கூட, அதனைவிட ஏனைய மாகாணசபைகளில் ஐ.தே.கட்சியை தோற்கடிப்பதுதான் ஆளும் கட்சிக்கு முக்கியமாக இருக்கிறது.

**அதுமட்டுமன்றி இன்னொரு காரணமும் இருக்கிறது. வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தினால், மாகாணசபை நிர்வாகத்திற்கு அதிகாரங்களை வழங்க வேண்டியிருக்கும்.**

ஆனால் போதிய அதிகாரங்களை பகிர்வு செய்ய ஆட்சியாளர்கள் தயாராக இல்லை. அவ்வாறு தயாராக இருந்தால் தீர்வை இழுத்தடிக்கும் அவசியம் நேர்ந்திருக்காது.

எனவே, வடக்கு-கிழக்கு மாகாணசபை தேர்தல் நடத்தப்படுமானால், அதன் பின்னர் அதிகாரப் பகிர்வு பிரச்சனைகளும் தோன்றும். அப்போது அதிகாரங்களை போதியளவு பகிர தயாரில்லாத தமது சுயரூபம் வெளியுலகின் முன்னால் நடைமுறை ரீதியாக அம்பலமாகிவிடுமே என்றும் ஆட்சியாளர்கள் அஞ்ச வேண்டிய நிலையில் உள்ளனர்.

இவற்றின் பின்னணியில்தான் வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் தவிர்ப்பதற்கான முடிவை அரசாங்கத்திற்குள் உள்ள வியூக வகுப்பாளர்கள் மேற்கொண்டுள்ளனர். என்பதே நன்கு புலனாகின்றது.

**'நாம் அவ்வாறு மேன்மை பொருந்திய அரசுக்கு தர்ம சங்கடங்களை உருவாக்க மாட்டோம். தாங்கள் தருவதை வைத்து சமாளிக்க சித்தமாய் உள்ளோம்' என்று தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியிடம் உத்தரவாதம் கொடுத்தால்கூட ஆச்சரியம் இல்லை.**

இந்த தந்திரங்களுக்கு அப்பால் வடக்கு-கிழக்கு தவிர்ந்த மாகாணசபைகளை கைப்பற்ற நடைபெறப்போகும் பலப்பரீட்சையில் ஆளும் கட்சியின் வெற்றியை தீர்மானிக்கப்போவது விடுதலைப் புலிகள்தான்.

**வன்னியில் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை எப்படியாவது ஒப்பேற்றிவிடலாம் என்ற நம்பிக்கையில்தான் மாகாணசபைத் தேர்தலை ஆகஸ்ட் மாதத்தில் நடத்த ஆட்சியாளர்கள் எண்ணியுள்ளனர்.**

'ஜயசிக்குறுய்' நடவடிக்கை பூர்த்தியானால்தான் மாகாணசபைத் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு படையினரில் ஒரு பகுதியினரை அங்கிருந்து எடுத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அதேசமயம், 'ஜயசிக்குறுய்' படையினர்மீதோ அன்றி வேறு முனைகளிலோ புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை தொடுப்பார்களேயானால், ஐ.தே.கட்சிக்கு அதுவே தேர்தல் பிரசார ஆயுதமாக மாறிவிடக்கூடும் என்பதும் ஆட்சியாளர் அறியாதது அல்ல.

**எனவே, மாகாணசபை தேர்தலின் வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் மந்திரக்கோல் ஜனாதிபதி சந்திரிக்காவிடமோ, எதிர்க்கட்சித் தலைவர் ரணிலிடமோ இல்லை. வன்னியில் பிரபாகரனிடமே இருக்கிறது.**

நாட்டின் ஏனைய மாகாணசபைகளில் தமது வெற்றி வாய்ப்பைப் பாதிக்கும் என்பதால் வடக்கு-கிழக்கு மாகணசபைக்கு தேர்தல் நடத்த ஆட்சியாளர் தயங்கினாலும், வடக்கு-கிழக்கில் இராணுவ தீர்வை கொண்டுவருவதில் வெற்றிபெற்று வருவதாக காண்பித்தே சிங்கள மக்களின் வாக்குகளை அறுவடை செய்ய வேண்டியவர்களாக உள்ளனர்.

எனவே யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை பற்றி தற்போது மறுபடி கிளம்பியுள்ள ஆருடங்கள் புஸ்வாணமாகும் நாள் தூரத்தில் இல்லை எனலாம்.

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

**நக்கீரன்**

# கூட்டத்தில் குழப்பம்

யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் கிடைத்த வெற்றியால் கூட்டணித் தலைவர்கள் மிதப்பில் இருக்கிறார்கள்.

யாழ் மாவட்டத்தில் மட்டுமல்ல, வடக்கு-கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் தேர்தல்களில் கூட்டணிக்குத்தான் அதிஷ்டம் தொடரக்கூடும்.

ஆனால், இந்த அதிஷ்டம்-இருக்கிற பிசாசில் நல்ல பிசாசு என்ற ரீதியில் கிடைக்கக்கூடிய அதிஷ்டம்தான்.

கூட்டணி தவிர்ந்த ஏனைய ஐந்து தமிழ்க் கட்சிகளும் மிகப் பலவீனமான அரசியலையும், கட்டுக்கோப்பற்ற அமைப்பையும் கொண்டிருப்பதாலும், இக் கட்சிகளால், தம்மத்தியில் இருந்து ஆளுமைமிக்க- துணிச்சலான தலைமைத்துவத்தை மக்கள் முன் நிறுத்த முடியாமையாலும் கூட்டணியை அவற்றால் முந்த முடியவில்லை.

**ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்ட பின்னர் இக் கட்சிகளால் ஆரோக்கியமான, முற்போக்கான அரசியல் அமைப்புக்களாகக் கூட தங்களை வளர்த்துக்கொள்ள முடியவில்லை.**

அதுமட்டுமன்றி கடந்த காலத்தில் ஆயுதப்போராட்டத்தில் இக் கட்சிகள் ஈடுபட்டிருந்தபோதும் தமக்கென தனித்துவம் எதனையும் இவை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**புலிகளைப்போல செயற்பட இவர்களுக்கும் ஆசை இருந்தது. ஆனால் இக் கட்சித் தலைமைகளது இயலாமை காரணமாக அது சாத்தியப்படாதபோது 'சீச்சி இந்தப் பழம் புளிக்கும்' என்ற ரீதியில் புலிகளின் நடவடிக்கைகளை விமர்சித்தன.**

ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்ட பின்னரும் இக் கட்சிகள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் பாணியில் உள்ளூரக் காதல் கொண்டவையாக மாறின. இக் கட்சிகளின் தலைவர்கள் சிலர் தங்களை அமிர்தலிங்கங்களாகக் கற்பனை செய்து கொண்டதுதான் தமாஷ்.

அமரர் அமிர்தலிங்கம் தமது மிதவாதப் போக்கை நியாயப்படுத்த- இளைஞர்களை சாந்தப்படுத்த சில வார்த்தைப் பிரயோகங்களைப் பிரயோகிப்பதுண்டு.

**"வேகம் மட்டும் போதாது; விவேகம் வேண்டும். வீரமும் வேண்டும்; விவேகமும் வேண்டும். அரசுக்கு ஒரு சந்தர்ப்பம் தந்து பார்ப்போம். இல்லையெனில் மாற்றுத்திட்டம் வைத்திருக்கிறோம்...!"**

மேற்கண்ட வெற்று வாய்வீச்சுக்கள்தான் அமிரின் வீழ்ச்சிக்கு வழிகோலியவை என்பதை துரதிஷ்டவசமாக இவர்கள் மறந்து போனார்கள்.

எனினும் கூட்டணிப் பாணியில்கூட இவர்களால் முழுமையாக அரசியல் நடத்த இயலவில்லை.

முன்னாள் போராளிகளான இந்நாள் மிதவாத தமிழ்க் கட்சிகளுக்கு பந்தா தேவை; பகட்டு தேவை; ஆள், அம்பு, சேனை தேவை. தினச் செலவுக்கு கட்டுக் கட்டாக நோட்டுத் தேவை.

ஒரு காலத்தில் கூட்டணியைச் சுற்றி இருந்தவர்கள் தமிழ் உணர்வு கொண்டவர்களாகவும், தனிப்பட்ட ரீதியில் பெருமளவு குறை கூறப்படமுடியாதவர் களாகவும் இருந்தனர்.

ஆனால், இன்று முன்னாள் போராளிகளான இந்நாள் மிதவாதிகளை அண்டிச் செல்பவர்கள் இவர்களைப் பயன்படுத்தி பிழைப்பு நடத்தும் ஆட்களாகவும், தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காகத் துதிபாடுகிறவர்களாகவும், கட்டடக் குத்தகைகள் போன்ற வாய்ப்புக்களைப் பெறுகிறவர்களாகவுமே இருக்கின்றனர்.

இத்தகைய நபர்கள் முன்னர் ஒரு காலத்தில் தமிழ் பிரதேசங்களில் இருந்த ஆளும் கட்சிப் பிரமுகர்களான துரையப்பா, தேவநாயகம், குமாரசூரியர், தியாகராசா போன்றோரைச் சுற்றியே காணப்பட்டனர். அவர்கள் தங்களுக்கு வீசப்படுபவற்றில் ஒரு பங்கை இவர்களுக்கு வீசி தங்களைச் சுற்றி இருக்க வைத்திருந்தனர்.

**ஆக, கூட்டணியின் அரசியல் பாணியில் கொஞ்சம், துரையப்பா வகையறாக்களின் அரசியல் பாணியில் கொஞ்சம், இரண்டும் கலந்ததே முன்னாள் போராளிகளின் இந்நாள் அரசியல்.**

ஆனால், இத்தகைய அரசியலுக்கு ஆயுள் மிகக் குறைவு. ஒரு குறிப்பிட்டளவான ஊசலாடும் வாக்காளர்கள்தான் இவர்களால் கவரப்படுவர். யார் பக்கம் பண- அதிகார பலம் உண்டு என்று பார்த்து சாயக்கூடிய வாக்காளர்களாக அவர்கள் இருப்பர்.

ஆனால் பெரும்பாலான வடக்கு-கிழக்கு வாக்காளர்களை பகட்டும், சலுகைகளும் கவருவதில்ல. கூட்டணியை அதன் அரசியல் வேகம் போதாது என்று நிராகரித்தவர்கள் தமிழ் மக்கள். ஆனால் கூட்டணியின் பாதையைவிட கீழான பாதைக்கு ஏனைய தமிழ்க் கட்சிகள் திரும்பிவிட்டதால் தேர்தல்களில் கூட்டணியை ஆதரிப்பதைத் தவிர வேறு தெரிவு அவர்களுக்கு இல்லாமல் போகக்கூடும்.

கூட்டணியின் தீவிரம் போதாது என்று ஆயுதம் ஏந்திய முன்னாள் போராளிகளான தமிழ்க் கட்சிகள் இன்று கூட்டணியை விமர்சிக்கும் தகுதியை இழந்துவிட்டன. குறைந்தபட்சம் இன்றைய இரும்புக்கரமாக நீளும் அவசர காலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கும் துணிச்சலாவது கூட்டணிக்கு இருக்கிறது.

ஒப்பீட்டளவில் பரவாயில்லை என்ற முடிவுக்கு இவ்வாறான உதாரணங்கள் பல உள்ளன. **எனவே கூட்டணி பெற்ற சமீபகால குட்டித் தேர்தல் வெற்றியானது- ஏனைய தமிழ்க் கட்சிகள் கூறுவதுபோல தற்செயலான ஒன்று அல்ல. 'அதே சமயம் கூட்டணி நினைப்பதுபோல; மக்கள் எல்லாம் கூட்டணிதான் மகத்தான தலைமை' என்று ஏற்றுக் கொண்டுவிட்டனர் என்பதும் அல்ல.**

ஆனால் கூட்டணியினர் ஒரே புழுகில் ஓடுப்பட்டுத்திரிகிறார்கள். அதில் ஒரு கட்டமாக நடைபெற்ற உச்சக் கட்ட தமாஷ் நிகழ்ச்சிதான் இளைஞர் பேரவையைப் புனரமைக்கும் முயற்சி.




உள்ளூராட்சித் தேர்தல் வெற்றி தந்த களிப்பால் தங்கள் ஆட்கள் எல்லோருக்கும் இளமை திரும்பி விட்டதாக நினைத்தார்களோ தெரியாது. புனரமைப்புக் கூட்டத்தையும் துணிந்து நடத்தினார்கள்.

கொழும்பில் நடந்த புனரமைப்புக் கூட்டத்திலும் ஏகப்பட்ட தமாசுகள்.

திரு. சிவசிதம்பரம் ஆற்றிய தலைமை உரையில், "சமீபகாலமாக ஆயுதப்போராட்டத்தை எதிர்த்து இளைஞர்கள் கூட்டணியின் பின்னால் அணிதிரளத் தொடங்கியுள்ளனர். அதனை இங்கு திரண்டு வந்துள்ள இளைஞர்கள் தொகை எடுத்துக் காட்டுகிறது. ஆனாலும் விடுதலைப் புலிகள் எமது உரிமைக்காக ஆயுதம் ஏந்திப்போராடி வருகின்றனர். அவர்களுக்கு எதிராக நாம் செயற்படக் கூடாது!" என்று கூறினார். சிரிக்காமலே ஜோக்கடித்தது போலிருந்தது அவரது பேச்சு.

கேள்வி கேட்கவும், கிண்டலடிக்கவும் அங்கு வந்திருந்த பலர் சிவாவின் பேச்சைக் கேட்டதும் தங்கள் சிரிப்பை அடக்க பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் சரமாரியாக கேள்விகள் தொடுக்க ஆரம்பிக்க அகிம்சா மூர்த்திகள் கோபப்பட்டதுடன், கேள்விகேட்ட பல்கலைக்கழக மாணவர் ஒருவரை 'பைத்தியம்' என்று திட்டினர். அவ்வாறு திட்டியவர் ஒரு சட்டத்தரணி. அவர்தான் இளைஞர் பேரவை புனரமைக்கப்பட்டால் செயலாளராக போடப்பட இருந்தவராம்.

கூட்டத்தில் கலந்துகொண்ட சிலர் தர்ம அடி கொடுப்பது பற்றிச் சிந்திக்கத் தொடங்க, இன்னொரு புறம் சிலர் கேள்விகளைத் தொடுத்தபடி இருக்க, சிவசிதம்பரத்தாருக்கு சூழ்நிலை விளங்கிவிட்டது.

ஏடாகூடமாக கதைத்த ஒருவரை மன்னிப்புக் கேட்குமாறு சிவா கூறியதால், அவர் எல்லோரிடமும் மன்னிப்புக் கேட்டதால்தான் சூடு சற்றுக் குறைந்தது. மேலும் கூட்டத்தை நீட்ட விரும்பாமல் ஒத்தி வைப்பதாக அறிவித்துவிட்டனர். இனிமேல் இளைஞர் பேரவையை புனரமைக்கும் நினைப்பு கனவிலும் எழுமோ தெரியவில்லை. வடக்கு-கிழக்கிலும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படக்கூடும் என்ற கதை உலாவியதால்தான் தேர்தல் பிரசாரத்திற்கு உதவும் வகையில் இளைஞர் பேரவையை புனரமைக்க அவசரப்பட்டனராம்.

இனி என்ன- கூட்டணியில் உள்ளவர்களே தங்களை இளைஞர்களாக எண்ணிக் கொண்டு துள்ளித்திரிய வேண்டியதுதான்!



படிப்பகம்

www.padippakam.com

## புதிய உண்மைத் தொடர்

## அதிர் இடி 5

# இடி அமீன்

**இதுவரை**

உகண்டா ஜனாதிபதி கபாகாவுக்கும் பிரதமர் ஒபேட்டேவுக்கும் இடையே அதிகாரப்போட்டி வலுவடைகிறது. பிரதமர் ஒபேடேவின் நம்பிக்கைக்கு உரியவனாகிறான் இடி அமீன். ஜனாதிபதியை பதவிநீக்குவதாக அறிவிக்கிறார் பிரதமர். ஜனாதிபதியின் ஆதரவாளர்களை ஒடுக்கும் பொறுப்பை இடி அமீனிடம் ஒப்படைக்கிறார். **இனி...**

கம்பாலாவிலுள்ள ஜனாதிபதி மாளிகை நோக்கி இடி-அமீன் தனது படைகளுடன் புறப்பட்டபோதே, அந்த தகவல் ஜனாதிபதி மாளிகைக்கு எட்டிவிட்டது.

பிரதமர் ஒபேடேவின் ஆட்களாலும் கண்டுபிடிக்க முடியாதளவுக்கு கபாகாவின் விசுவாசிகள் உள்ளேயே இருந்தனர். அவர்களில் சிலர் மூலமாகவே தகவல் பறந்தது.

கபாகாவின் விசுவாசப் படைகள் ஜனாதிபதி மாளிகையை பாதுகாக்க தயார் நிலையில் நின்றன.

இடி-அமீனின் படைகள் கம்பாலாவை நெருங்கியதும் பயங்கர சண்டை மூண்டது.

அந்தச் சண்டையில்தான் இடி-அமீன் தன்னை ஒரு அஞ்சா நெஞ்சனாக நிரூபித்தான்.

பின்னர் உகண்டா படைகளுக்குள் அமீனின் புகழ் பரவவும், ஆளுமை வளரவும் அச் சண்டையும் ஒரு காரண மாக இருந்தது.

எங்கெங்கு இருந்து தாக்குகிறார்கள் என்பதை நிதானமாகக் கண்டறிந்து அந்த முனைகளை நோக்கி தன் படைப்பிரிவுகளை ஏவினான் அமீன்.

'கொல்லுங்கள், விடாதீர்கள்' என்று அமீன் பெரும் குரலில் கத்திக் கொண்டே சண்டை முனையின் முன்வரிசையில் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான்.

அமீனின் வாகனத்தில் 22.எம்.எம். பீரங்கி ஒன்று பொருத்தப்பட்டு இருந்தது. ஜனாதிபதி மாளிகையை நோக்கி பீரங்கியால் அடிக்கடி சுட்டுக் கொண்டிருந்தான் அமீன்.



ஜனாதிபதி கபாகாவின் படையினர் சிலர் மாளி கையின் மேற்குப் புறமாக நடந்த சண்டையில் அமீனின் படைகளிடம் சிக்கிக் கொண்டனர்.

உடனடியாக அங்கு விரைந்தான் அமீன். கைதான படையினரில் ஒருவன் வெள்ளையினத்தவன்.

அவனை மட்டும் தனியாக பிரித்து வைத்துவிட்டு, கைதான அத்தனை படையினரையும், கையில் துப்பாக்கியை ஏந்திய வாறு பார்த்துச் சிரித்தான்.

அவன் சிரித்த சிரிப்பில் தங்கள் மரணம் நிச்சயம் என்பது கைதானவர்களுக்கு தெரிந்துவிட்டது. அவர்களது முகங்களில் சவக்களையடித்தது.

"உங்கள் கடைசி ஆசை என்ன?" என்று கேட்டான் அமீன்.

அமீன் கேட்கும்போது ஜனாதிபதி மாளிகையின் மேற்குப் புறம் வீழ்ச்சி அடைந்திருந்தது.

அமீனின் கேள்விக்கு அவர்கள் பதில் சொல்ல அஞ்சினார்கள். அமீன் இடியாகச் சிரித்து: "ஒரே ஒரு ஆசை உயிராசைதான் இருக்கும், எனக்கும் உங்கள் உயிர் மேல் ஆசை. அதனால் விடுதலை செய்ய தீர்மானித்துவிட்டேன், உங்கள் உயிர்களை!"

அமீனின் துப்பாக்கி தன் வயிற்றிலிருந்து ரவைகளை துப்பி முடித்தபோது, கைதான அனைவரும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்.

தன் சகாக்கள் துடிதுடித்துச் சாவதை வெளிறிய முகத்தோடும், பயந்த விழிகளோடும், தலைக்கு மேல் உயர்த்திய கரங்களோடும் பார்த்துக் கொண்டிருந்தான் அந்த வெள்ளையின சிப்பாய்.

தன் கையில் இருந்த துப்பாக்கியை அருகில் நின்ற சிப்பாய் ஒருவனிடம் கொடுத்த அமீன், வெள்ளையின சிப்பாயை நெருங்கினான்.

அவன் கன்னத்தில் இலேசாகத் தட்டிவிட்டு, "தொட்டால் தீட்டா? நான் கறுப்பன். சுத்தமான கறுப்பு நிறத்தவன். நீ வெள்ளையன். நான் தொட்டால் தீட்டுத்தானே?" என்று கேட்டான்.

அவன் மிதமிஞ்சிய பயத்தோடு 'இல்லை' என தலையசைக்க, அவனது அடிவயிற்றில் தன் கையை மடக்கி இடி அமீன் விட்ட குத்தில், சிப்பாய் அப்படியே குனிந்து மடங்கி சரிய, 'அவன் சட்டையில் பிடித்த அமீன், "முழந்தாளிட்டு நில்லடா. இங்கே நான்தான் கடவுள்" என்றுவிட்டு உரத்துச் சிரித்தான்.

"அப்படியே முழங்காலில் நடந்துபோய் அந்த ஜீப்பில் ஏறிக்கொள்!" என்று ஜீப் ஒன்றைக் காட்டினான்.

முழங்காலில் அவன் சிரமப்பட்டு நடந்துபோவதை ஒரு குரூர திருப்தியோடு இரசித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"வெள்ளைக்காரனை விடக்கூடாது! வீரம் தோல் நிறத்தில் வராது.தோள்பலத்தில் வரும் என்பதை வெள்ளை நாய்களுக்கு வரிவரியாகப் படிப்பிக்க வேண்டும்!" என்று சற்றுச் சத்தமாகவே கூறிவிட்டு தன் ஜீப்பில் ஏறிக் கொண்டான்.

ஜனாதிபதி மாளிகையை காப்பாற்ற நாலு மணிநேரமாக சண்டையிட்ட கபாகாவின் விசுவாசப் படைகள் இறுதியில் தோல்வி கண்டன.

பிடிபட்ட சிலரை சுட்டுக் சொன்ற அமீன் அங்குள்ள மரங்களில் கட்டித் தொங்க விட்டான்.

ஜனாதிபதி மாளிகைக்குள் அமீன் புகுந்த போது ஜனாதிபதி கபாகா அங்கிருந்து தப்பி ஓடியிருந்தார்.

"கோழை மாதிரி தப்பி ஓடிவிட்டான் தொடை நடுங்கி" என்று கூறிய அமீன், ஜனாதிபதியின் பிரத்தியேக அறைக்குள் நுழைந்தான்.

ஜனாதிபதி மாளிகையின் இடுக்குகள் எல்லாம் தேடி, அங்கு மறைந்திருந்த ஜனாதிபதி மாளிகை ஊழியர்கள் பதினைந்து பேரை பிடித்துவந்து நிறுத்திவைத்தனர் அமீனின் சிப்பாய்கள்.

ஜனாதிபதியின் பிரத்தியேக அறைக்குள் தேடியதில் விழாக்களின் போது ஜனாதிபதி அணியும் தொப்பியும், ஜனாதிபதிக்கான கொடியும்தான் அகப்பட்டன.

அந்தத் தொப்பியை எடுத்து தன் தலையில் அணிந்துகொண்டு, கையில் கொடியுடன் அமீன் சிரித்தபோது, அவன் அருகே நின்றிருந்த சிப்பாய்களுக்கு அந்தச் சிரிப்பின் அர்த்தம் புரியவில்லை.

தருவது

ரசிகன்



தொப்பியுடனும் கொடியுடனும் குரூரமான புன்னகையுடனும் வெளியே வந்த அமீன் அங்கு நிறுத்தப்பட்டிருந்த ஜனாதிபதி மாளிகை பணியாளர்களை கண்டதும் அப்படியே நின்றுவிட்டான்.

பதினைந்து பேரில் மூன்றுபேர் பெண்கள். அதில் இரண்டுபேர் பிரமாதமான அழகிகள்.

"யார் இவர்கள் எல்லாம்?" என்றான். யார் என்று விளக்கப்பட்டது.

அதில் ஒருத்தியை தன் சுட்டுவிரல் நீட்டி அழைத்தான். அருகில் வந்தவளின் கழுத்தில் கைவைத்து ஜனாதிபதியின் பிரத்தியேக அறைக்குள் தள்ளினான்.

தானும் உள்ளே வந்து கதவை மூடிக் கொண்டான்.

"இப்போது ஜனாதிபதி நான்தானடி. என்னை சந்தோஷப்படுத்து" என்று அமீன் கூற, அப் பெண் மறுப்பேதும் சொல்லாமல் கட்டிலில் ஏறி மல்லாந்து படுத்துக் கொண்டாள்.

அமீனுக்கு சப்பென்று போய்விட்டது. அவன் எதிர்ப்பையோ மறுப்பையோ, மறுத்து மறுத்து கீழ்படிதலையோ தான் எதிர்பார்த்தான்.

விசை கொடுக்கப்பட்ட பொம்மை போல அவள் சென்று மல்லாந்து, மரக்கட்டைபோல கிடப்பதை பார்க்க அமீனுக்கு பற்றிக்கொண்டு வந்தது.

"எழும்படி நாயே!" என்று அவன் போட்ட கூச்சலில் ஆடிப்போய், அப் பெண் எழுந்த போது கேட்டான்: "ஜனாதிபதியையும் சந்தோஷப்படுத்தி இருக்கிறாயா?"

"ஆம்!" என்றாள் தயக்கம் இல்லாமல்.

"எத்தனை தடவை?"

"பல தடவைகள்!" என்று அவள் சொன்ன பதிலுக்கு, குரூரமாகச் சிரித்த அமீன், இப்போது நான் உன்னை ஒரேயடியாக சந்தோஷப்படுத்தப் போகிறேன்! என்றபடி தன் இடுப்பில் இருந்த பிஸ்டலை உருவி, அவளது வயிற்றின் கீழ், மிகக் கீழே பிஸ்டலை அழுத்தி 'டுமீல்!'

அவள் கடைசியே கடைசியான மரண ஓலத்துடன் அப்படியே கட்டிலில் மல்லாந்து விழிகள் குத்தி நிற்கதிறந்த வாயுடன் செத்துப் போனாள்.

அதே வேகத்தில் கதவைத் திறந்துவந்த அமீன் ஏனைய ஊழியர்களை சுட்டுத் தள்ளுமாறு உத்தரவிட்டான்.

மாளிகைக்குள் வெடிச்சத்தங்களும், மரண ஓலங்களும் கலந்து ஒலித்தன.

மாளிகையை குண்டுவைத்து தகர்க்குமாறு கட்டளையிட்ட அமீன் ஜனாதிபதி மாளிகைக்கு அருகே இருந்த வீடுகளுக்குள் புகுந்து பெண்களை வேட்டையாடவும் தன் படையினருக்கு சுதந்திரம் கொடுத்தான்.

எல்லாம் முடிந்து அமீனின் படைகள் திரும்பும்போது, ஜனாதிபதி கபாகாவின் மாளிகை வெடித்துத் தகர்ந்த சத்தம் அப்பகுதியை அதிரவைத்தது.

தப்பியோடிய கபாகாவை தேடுகிறோம் என்ற பெயரில் பலவீடுகளுக்குள் புகுந்த அமீனின் படைகள் பெண்களை வேட்டையாடியது தான் கண்ட பலன்.

கபாகா மாட்டவே இல்லை. தன் நம்பகமான ஆட்களின் உதவியுடன் உகண்டாவை விட்டு தப்பியோடி பிரிட்டனுக்குள் புகுந்து விட்டார் கபாகா.

கபேகாவின் ஆதரவாளர்கள் என்று கருதப்பட்ட நூறுபேர்வரை சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பிணங்களை வீதிகளில் போட்டுவிட்டு அமீனின் படை வெற்றியோடும், வெறியோடும் திரும்பியது.

பிரதமர் ஒபேடேயிடம் அமீன் வெற்றிச் செய்தியை தெரிவித்தபோது அவர் தன்னை மறந்தவராக அமீனிடம் கூறினார்.

"நீதான் விரைவில் இராணுத் தளபதி!"

"இருக்கட்டும் என்ன அவசரம்?" என்றான் அமீன்.

"என் மகளுக்கு அவசரம்!" என்று சொல்லிச் சிரித்தார் பிரதமர்.

பிரதமரின் மகள் தனது அறையில் அமீனை கட்டித் தழுவினாள். அவனை கட்டிலில் சரித்து ஏக்கத்துடன் அவன்மேல் புரண்டாள்.

"நீ பெரிய முரடன் என்றுதான் நினைத்திருந்தேன். பெரிய சண்டைக்காரன் என்றும் நிருபித்துவிட்டாயே. என்னிடம் உன்னை நிருபி பார்க்கலாம்" என்று அமீனை உடும்பாய் பற்றிக் கொண்டாள்.

தான் உகண்டாவை ஆள்வதற்கான திறவுகோல்களில் அவளும் ஒருத்தி என்பதால், அவளை களைய ஆரம்பித்தான் அமீன்.

பிரிட்டனுக்கு சென்ற ஜனாதிபதி கபாகா பாரிய குற்றச்சாட்டு ஒன்றை வீசினார்.

'தனது மாளிகையில் ஆயிரக்கணக்கானோரை கொன்று விட்டனர்' என்று கூறினார்.

"அது உண்மையா?" என்று பிரதமர் கேட்க, அமீன் "எங்கள் முன்னாள் ஜனாதிபதிக்கு கணக்கு சரியாக வராது போலிருக்கிறது" என்றான்.

"ஏன்?" என்ற பிரதமரின் கேள்விக்கு "ஜனாதிபதியின் விசுவாசப்படைகள் மற்றும் ஆதரவாளர்கள் என்று சகலரையும் சேர்த்து கூட்டிப் பார்த்தால் குறைந்தது ஆயிரத்தி ஐநூறு பேராவது செத்திருப்பார்கள்" என்றான் சர்வசாதாரணமாக.


படுகொலையை நகைச்சுவையாகவும், சர்வசாதாரணமாகவும் அவன் கூறியவிதம் பிரதமர் ஒபேடேயைக்கூட அசரச் செய்து விட்டது.

தன் முன்னால் நிற்பவன் மனிதனா? இராட்சதனா? என்று அவருக்கே சந்தேகமாக இருந்தது.

(இடி தொடரும்)

## தலைவர்களுக்கு பிடித்த பெண்கள்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் எழுதியுள்ள நாவல் அரசியலில் சூடு கிளப்பியுள்ளது.



அந்த நாவலின் பெயர் 'தி இன்சைடர்' அரசியல் ஏற்றத்தாழ்வுகள், அதிகாரத்தை கைப்பற்ற அரசியல்வாதிகள் நடத்தும் வக்கிரப் போட்டிகள், ஏமாற்றுத்தனங்கள் அனைத்தையும் அனுபவபூர்வமாக உணர்ந்து வெளிப்படுத்தி உள்ளார் நரசிம்மராவ்.

தன்னை ஆனந்த் என்ற பாத்திரம் மூலம் இனம் காட்டுகிறார் நரசிம்மராவ். அரசியல் உலகில் ஆனந்த் பெறும் அனுபவங்கள்தான் நாவலில் கொட்டிக்கிடக்கின்றன.

காங்கிரஸ் கட்சியும், அதன் தலைவர்களும் புனிதமானவர்கள் என்ற எண்ணத்தை உடைக்கிறது நாவல்.

காங்கிரஸ் போன்ற கட்சிகளில் பெண்கள் எப்படி முக்கியத்துவம் பெறுகிறார்கள், தலைவர்களுக்கு வேண்டப்பட்டவர்களாக எப்படி மாறுகிறார்கள் என்பவற்றை நரசிம்மராவ் சுவாரசியமாக அம்பலப்படுத்தி இருக்கிறார்.

அரசியலில் பிரபலம் பெறவிரும்பிய பெண்மணி ஒருவர் காங்கிரஸ் தலைவர் ஒருவரது கட்டிலுக்கு சென்றபின்னரே வேட்பாளர் பட்டியலில் இடம்பெறுகிறார்.

கொஞ்சம் வாளிப்பான, வசீகரமான பெண்கள் என்றால் தலைவர்கள் அவர்களைத் தலைவியாக்கிவிடுவார்கள். கட்சியில் உள்ள தொண்டர்களின் தோளில் தூக்கி அமரவைத்துவிடுவார்கள். பின்னர் பெண்களுக்கு முன்னுரிமை என்றெல்லாம் அதற்கு சாயம் பூசுவார்கள். காங்கிரஸ் கட்சியும் அதற்கு விதிவிலக்கல்ல.

தமிழ் நாட்டில்கூட கீதா என்றொரு பெண் இருந்தார். உயரமாக, எடுப்பாக எப்போதும் கூலிங்கிளாஸ் சகிதம் கார்களில் பந்தாவாக பவனிவருவார்.

காங்கிரஸ் தலைவர்கள் எவரையும் முன் அனுமதி இன்றியே சந்திக்கக் கூடியவர். சமூக சேவையாளர் என்று வெளியே பிரபலம் தேடியிமடகொண்டார்.

பின்னர் ஒருநாள் சுயரூபம் அம்பலமானது. அழகான பெண்களை சமூக சேவையாளர்கள் என்ற பெயரில் வைத்திருந்து முக்கிய தலைவர்களுக்கும், பெரும் புள்ளிகளுக்கும் விநியோகிப்பதுதான் அவரது பணி. பின்னர் பொலிசார் அவரை கைதுசெய்தனர். உள்ளே தள்ளினர்.

நரசிம்மராவின் நாவலைப் படிக்கையில் மேற்கண்ட சம்பவம் நினைவில் வராமல் இல்லை.

இவ்வாறான நாவல்கள் வருவது அரசியல் தலைவர்களின் புனிதமான முகமூடிகளை கிழித்துப்போட உதவும். நம் நாட்டில்கூட யாராவது எழுதலாமே!

## துரத்தும் இரசிகைகள்

கிரிக்கெட் வீரர்கள் என்றாலே பெண் இரசிகைகள் பட்டாளம் அவர்களை முற்றுகையிடுவது வழக்கமாகிவிட்டது.

இலங்கைக் கிரிக்கெட் வீரர்களை உலகக் கிண்ணப் போட்டிவரை பெண் இரசிகைகள் பெரியளவில் கணக்கில் எடுக்கவில்லை. கிளாமரான வீரர்கள் யாரும் இல்லாத அணி என்றும், பெரிய பையன்களின் அணி என்றும் கூறப்பட்டு வந்தது.



ஆனால், உலகக் கோப்பையை இலங்கை அணி வென்றதோடு எல்லாம் தலைகீழாகிவிட்டது. இப்போது இந்தப் பெரிய பையன்களும் விஷயகாரர்களாக கவனிக்கப்படுகிறார்கள். கிளாமரானவர்களாக மாறிவிட்டார்கள்.

இலங்கை அணி வீரர்களுக்குள் பெண் இரசிகைகள் ஜெயசூர்யாவுக்கும், அரவிந்த டி சில்வாவுக்கும் தான் அதிகம் என்று தகவல்.

மும்பாயில் அரவிந்த டி சில்வாவை நடிகர் சுனில் ஷெட்டி சந்தித்தார். இருவரையும் சந்திக்கவைத்து ஒருவரை ஒருவர் பேட்டி காண வைத்தது மும்பாய் சஞ்சிகை ஒன்று.

'பெண் இரசிகைகள் எப்போதும் உங்கள் பக்கத்தில் இருக்கிறார்களாமே? பெண்கள் என்றால் உங்களுக்கு பிடிக்குமாமே?' என்ற தொனியில் சுனில் ஷெட்டி கேள்வி கேட்க அரவிந்தா முகம் மாறினாலும் சிரித்து சமாளித்து விட்டாராம்.

சனத் ஜெயசூர்யாவை 'கறுப்புத் தங்கம்' என்று இளம் இரசிகைகள் பலர் அழைக்கிறார்கள்.பெண் நண்பிகளும் அதிகம். அவர்களுடன் பொழுதை போக்குவது சனத்துக்கும் புத்துணர்ச்சி அளிக்கிறதாம்.

## அமெரிக்காவின் மாத்திரை

அமெரிக்கா புலிகளை தடைசெய்த காரணத்தால் சிங்கள பேரினவாதிகளிடம் நல்ல பெயர். இன அபிமானமோ, இன நலன் பற்றியோ அக்கறை இல்லாத தமிழ்க் கட்சிகளும் அமெரிக்கப் பிரதிநிதிகளை தேவதூதர்களாக கருதுகிறார்கள்.



ஆனால் அமெரிக்கா அன்று முதல் இன்றுவரை மனிதகுல எதிரியாகவே இருந்து வருகிறது.

'வன்முறைக்கு நாம் எதிர்ப்பு', 'பயங்கர வாதம் ஒழிக' என்றெல்லாம் அமெரிக்கா இனிக்க இனிக்க கோஷம் போடுகிறது. ஆனால் பயங்கர ஆயுதங்களை உற்பத்தி செய்து வருகிறது என்பது தெரிந்த கதை.

தெரியாத கதையொன்றும் அம்பலமாகி இருக்கிறது. வன்முறை மனோபாவத்தை தூண்டும் மாத்திரை ஒன்றை அமெரிக்காவில் கண்டு பிடித்துள்ளனர்.

இந்த மாத்திரையில் ஒன்றைப் போட்டால் போதுமா? அல்லது அதிகம் போடவேண்டுமா? என்று ஆராய்ச்சி நடந்தது. இந்த ஆராய்ச்சிக்கு யாரைப் பயன்படுத்தி உள்ளனர் தெரியுமா? கறுப்பு இன மாணவர்களை!

கறுப்பு இன மாணவர்களான 34 சிறுவர்களுக்கு மாத்திரையைக் கொடுத்து ஆராய்ச்சி நடத்திப் பார்த்தார்களாம்.

இந்தப் பரிசோதனைக்கு அமெரிக்காவில் பலத்த எதிர்ப்பு கிளம்பி இருக்கிறது.

உலகுக்கு புத்தி சொல்ல முன்னர் தன் கரங்களை அமெரிக்கா சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். ▫

## சிறையிலும் சில்மிஷம்

கள்ளச் சுவாமி பிரேமானந்தாவுக்கு பிணைகொடுக்க நீதிமன்றம் மறுத்துள்ளது. இரண்டு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட காமக் கொடூரனான பிரேமானந்தா தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்துள்ளார்.



சிறையில் உள்ள பிரேமானந்தாவுக்கு அவரால் 'சுகப்'பட்ட புள்ளிகள் பண உதவிகள் செய்கிறார்களாம். அந்தப் பணத்தை வீசி சிறைக் காவலர்களை கையில் போட்டு வைத்திருக்கிறார்.

வெளியே இருந்தபோது தினமும் பல தடவை 'சுகப்பட்ட' பிரேமானந்தாவுக்கு சிறைக்குள் உடல் திமிறுகிறதாம்.

ஆனால் சிறைக்குள் பெண்களை தருவிக்க முடியாத நிலை. அதனால் ஆண் கைதிகள் சிலருடன் தப்பான உறவு கொள்வதாக பல தகவல்கள் வெளியாகி உள்ளன.

சிறைக்குள் பிரேமானந்தாவுக்கு இராஜ உபசாரம் நடப்பது பற்றி தமிழக சஞ்சிகை ஒன்றும் காட்டமான கண்டனம் தெரிவித்துள்ளது. ▫



படிப்பகம்

www.padippakam.com



## சாது மிரண்டால்...

← பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை வரும் சித்திரா அமாவாசை தினத்தன்று வட இந்திய மாநிலமான உத்தர பிரதேசத்தில் ஹரிது-வார் என்ற இடத்தில் கங்கை நதியில் தீர்த்தமாடுவது இந்துக்களுக்கான சிறப்புக் கிரியையாகும். இவ்விழா 'கும்பமேளா' என்றழைக்கப்படுகிறது.

கடந்த மார்ச் 28ம் திகதி வட இந்தியக் கணக்குப்படி சித்ரா அமாவாசையாகும். இப் புனித தினத்தன்று யார் முதலில் தீர்த்தமாடுவது என்ற போட்டியில் இமயமலைச் சாரலிலிருந்து திரண்டு வந்திருந்த துறவிகளின் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் பல அனர்த்தங்கள் நேர்ந்தன.

அன்றைய தினம் கங்கையில் தீர்த்தமாட வந்திருந்த 13 துறவிகள் குழுவில் முதன்மையாகக் கருதப்படும் 'ஜுனா' என்ற குழுவினரே முதலில் தீர்த்தமாடுவது என்று கோரியிருந்தனர். ஆனால் விழாக் குழுவினர் 'நிரஞ்சனி' என்ற குழுவுக்கு முதலிடம் கொடுத்தனர்.

இதனால் வெகுண்டெழுந்த ஜுனா குழுவினர் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். ஊர்வலம் சென்ற பாதையில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களை அடித்து உடைத்து தீக்கிரையாக்கினர்.

கட்டடங்களை உடைத்தனர். கலவரத்தைத் தடுக்கப்போன பொலிஸ்காரர்களையும் அடித்து உதைத்து கங்கை நதியில் தூக்கி வீசினார்கள்.

காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற பொலிசார் அனுமதிக்கப்பட்டனர். இதனால் ஆத்திரமடைந்த துறவிகள் அந்த மருத்துவமனைக்கும் தீ மூட்டினர்.

'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பது சரிதான் பார்த்தீர்களா? துறவிகளை சாதுக்கள் எனவும் அழைப்பர். இந்த சாதுக்களில் பலர் நிர்வாணச் சாமியார்கள்தான். ஆடையைத் துறந்தார்கள், ஆத்திரத்தையும் துறந்திருந்தால் அனர்த்தம் நேர்ந்திருக்காதல்லவோ?! ■

↓ 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' என்று சொல்வதுண்டு. ஐந்து வயதிலேயே குழந்தைகளின் நடவடிக்கைளை வைத்து அவற்றின் எதிர்காலத்தை கூறிவிடலாம் என்பார்கள்.

## நாலில் வளைந்தது



ஆனால், யாமினியின் திறமையை அறிய அவளது பெற்றோர் ஐந்து வயது வரை காத்திருக்கவில்லை. இரண்டரை வயதானதுமே மீன்குஞ்சைப்போல நீச்சல் தடாகத்தில் போட்டு நீந்தவைத்தனர்.

இப்போது யாமினிக்கு நாலுவயது. நீச்சலில் சாதனை படைத்து அசத்திவிட்டாள்.

யார் இந்த யாமினி? தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையைச் சேர்ந்தவள். ராஜேந்திரன்-சகுந்தலா தம்பதியின் செல்ல மகள். இம்மாதம் ஏப்ரல் 04ம் திகதி சென்னை கடலில் 10 கிலோமீட்டர் தூரத்தை மூன்றே முக்கால் மணிநேரத்தில் நீந்திக் கடந்து சாதனை படைத்துவிட்டாள்.

இத்தனை சிறுவயதில் வேறு யாரும் இப்படி சாதனை படைத்ததில்லை. அதனால் உலக சாதனையாக யாமினியின் சாதனை குறிக்கப்பட இருக்கிறது. சுட்டிக் குழந்தை! கெட்டிக்காரி! ■

## ஜூடோவில் சூரர்

→ 'கல் ஒன்று மாங்காய் இரண்டு' இப் பழமொழி தற்காப்புக் கலைகளுக்கும் பொருந்தும்.

'மல்யுத்தம்','சிலம்பம்','கராட்டி','ஜூடோ' போன்ற தற்காப்புக் கலைகள் உடலுக்கும் நல்ல பயிற்சி. வலிய வம்புக்கு இழுக்கும் ஆசாமிகளை புரட்டி எடுக்கவும் உதவும்.

'ஜூடோ' என்னும் தற்காப்புக் கலை 1882ல் உருவானது. இது ஜப்பானின் புராதன தற்காப்புக் கலையான 'ஜூ ஜிற்சூ' என்பதில் இருந்து செழுமை பெற்று வளர்ந்தது.

'ஜூடோ' போட்டிகள் இன்று உலக அளவில் நடந்து வருகின்றன. படத்தில் ஒருவரை தரையில் சாய்த்து மடக்கிப் பிடித்திருக்கிறார் பாருங்கள், அவர்தான் 'ஜூடோ' போட்டிகளில் உலக சாதனை படைத்த சூரர். 1977 முதல் 1985 வரையான காலப்பகுதியில் பங்குகொண்ட அனைத்துப் போட்டிகளிலும் வெற்றிமேல் வெற்றி. ஒன்பது பதக்கங்கள் தொடர்ச்சியாக பெற்று உலக சாதனை படைத்தார்.

இதனைவிட நான்கு தடவைகள் 'ஜூடோ' உலக சாம்பியன் பட்டத்தை வென்றதும் மற்றொரு உலக சாதனை. 1981ல் வயது, எடை போன்ற வேறுபாடுகள் எதுவும் அற்ற யார் வேண்டுமானாலும் பங்குகொள்ளக்கூடிய திறந்த போட்டியில் பங்குகொண்டார். இவரை தோற்கடிக்க பலர் முயன்றும் இறுதியில் வெற்றிக் கனி வீழ்ந்தது இவர் கையில்தான். அன்னாரது பெயர்தான் வாயில் நுழைய சிரமப்படும் யசுஹிறோ யமசீயிற்றா.



## கற்றது ஏழுமாதம்

→ யாழ் போன்ற நரம்பு வாத்தியம் இது. இதனை 'ஹார்ப்' என்று அழைப்பர். கைவிரல்களால் கம்பிகளை மீட்ட மீட்ட நாதம் எழும்.

கனடா ரொறன்டோவில் இடம்பெற்ற 'இவானிஸ்' என்னும் விழா ஒன்றில் இந்த வாத்தியத்தை இசைத்து பிரமிப்பில் ஆழ்த்தினார் இச் சிறுமி.

இதில் என்ன பிரமிப்பு. என்கிறீர்களா? ஆக, ஏழு மாதங்களில் அக்குவேறு ஆணிவேறாக இந்த வாத்தியத்தை கையாளும் திறமை பெற்றுள்ளார். வனெஸ்ஸா கொமர்நிக்கி என்னும் இச் சிறுமியின் வயது 12. சின்ன இசையரசி. ■




## தகவல் பெட்டி

↓ சைக்கிளின் அருமை நம் மக்களுக்கு விலாவாரியாகத் தெரியும். குறிப்பாக பொருளாதாரத் தடையின் ஒரு அங்கமான எரிபொருள் தடையை சந்தித்த மக்களுக்கு சைக்கிள்தான் நம்பிக்கை ஊக்கியாக இருந்தது.

நமது அபிமானத்துக்கு உரிய சைக்கிள் இனிமேல் பற்றரியில் இயங்கும் வசதியைப் பெறப்போகிறது. இஸ்ரேலியரான சிரோமின் என்பவர் பற்றரியில் இயங்கும் சைக்கிளை வடிவமைத்துள்ளார்.

ஏற்கனவே பற்றரியில் இயங்கும் சைக்கிள்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றால் வேகமாகச் செல்ல முடியாது. அதை விட பெடலை மிதித்து ஓடிவிடலாம். ஆனால் சிரோமின் வடிவமைத்துள்ள சைக்கிளில் உள்ள மோட்டாரின் எடை 700 கிராம் மட்டும்தான். இதனால் சைக்கிள் அதிக வேகத்தில் செல்லும்.

கடந்த ஆறு ஆண்டு காலமாக சிரத்தையுடன் உழைத்து இந்த சைக்கிளை வடிவமைத்துள்ளார். விரைவில் முதற்கட்டமாக பத்தாயிரம் பற்றரி சைக்கிள்கள் தயாரிக்கப்பட உள்ளன. பறக்கும் சைக்கிள். ■



## இனி மிதிக்க வேண்டாம்



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் -52

# 'மும்பாய்' நடிகை கொடுத்த ஏமாற்றம்

## மகளுக்கு உபதேசம் செய்யும் நடிகை

விரைவில் வெளிவரப்போகும் திரைப்படம் அது. அப்படத்தில் இந்தியில் பிரபலமான நடிகை ஒருவர் நடித்திருக்கிறார். இதற்கு முன்னரும் தமிழ்ப்படம் ஒன்றில் அவர் நடித்திருந்தார். அவரது பெயர் இரண்டே இரண்டு எழுத்து மட்டும்தான்.

இம்முறைதான் அவருக்கு வித்தியாசமான அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. சண்டைக் காட்சிகளில் தூள் கிளப்பும் நடிகர்தான் அவருக்கு ஜோடி.

இந்தியில் இருந்து தமிழுக்கு வந்த இன்னொரு நடிகையுடனும் அன்பாக இருந்தவர் இந்த நடிகர்.

அந்த நடிகையோ எதற்கும் தயாராக வந்திருந்தவர். நடிகரின் விருப்பப்படி இசைந்து நடந்தார்.

அவர் போலத்தான் இவரும் இருப்பார் என்று நினைத்தார் நடிகர். இணைந்து நடிக்கும் போதே கூட நடிக்கும் நடிகையின் நாடிபிடித்து அறிந்து கொள்வார்கள் நடிகர்கள்.

ஆனால் இந்த இரண்டெழுத்து நடிகை விடயத்தில் குறிப்பு எதனையும் அறிய முடியவில்லை. ஆனால் படத்திலோ மிக நெருக்கமாக எந்த முகச்சுளிப்பும் இன்றி நடிகருடன் நடித்தார் நடிகை.

நடிகையின் உடலை கமரா முன்னால் ஸ்பரிசித்த நடிகருக்கு, கமராவின் பின்னாலும் ஸ்பரிசிக்கும் ஆசை வந்து விட்டது.

ஆனால் நடிகையிடம் நேரில் கேட்பதற்கு தயக்கம். அதனால் தன் உதவியாளரை நடிகையிடம் தூதுவிட்டார்.

நடிகையிடம் சென்று உதவியாளர் அசடு வழிந்தபோதே நடிகைக்கு புரிந்துவிட்டது. இப்படி எத்தனையோ பேரை கண்டவர் அவர்!

'அவரையே நேரில் வரச் சொல்லுங்கள்' என்று நடிகை கூற, உதவியாளர் அதனை சம்மதத்தின் அறிகுறியாகப் புரிந்துகொண்டார்.

'எந்தத் தடங்கலும் கிடையாது. சென்று வென்று வருக' என்று நடிகரை உற்சாகப்படுத்தி நடிகையின் அறைக்கு அனுப்பி வைத்தார்.

'இன்று வேட்டைதான்' என்ற துள்ளலுடன் நடிகையின் அறைக்கு சென்ற நடிகருக்கு நடிகை என்ன கொடுத்தார், எப்படிக் கொடுத்தார் என்று யாருக்கும் தெரியாது.

நடிகர் போன வேகத்தில் பேயறைந்தது போன்ற முகத்துடன் திரும்பி வந்ததையும், தன் உதவியாளரை கெட்ட வார்த்தைகளால் திட்டியதையும்தான் நடிகரின் ஏனைய பணியாளர்கள் கண்டனர்.

மறுநாள் நடிகை யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் மும்பாய்க்கு பறந்துவிட்டார். படப்பிடிப்பு பாழானது. பின்னர் ஃபோனில் கெஞ்சிக் கூத்தாடி நடிகையை மீண்டும் சென்னைக்கு அழைத்து படப்பிடிப்பு நடத்தி முடித்தனர்.

### குடும்ப வருமானம்

எம்.ஜி.ஆர். ஜோடியாக அறிமுகமான மஞ்சளான நடிகை அவர். முன்னரும் இவர் பற்றி கூறப்பட்டது.

இவரது மகள்மார் எல்லாம் இப்போது சினிமா உலகில்தான் உள்ளனர். நட்சத்திரக் குடும்பம் என்று இவர்களது குடும்பத்தை அழைக்கிறார்கள். கணவன், மனைவி, மகன், மகள்மார் என்று அனைவருமே நடிப்பில் ஈடுபட்டிருப்பது என்றால் சும்மாவா?!

மஞ்சள் நடிகையின் மகள் வனித நடிகை இயக்குநர் ஒருவரது அன்புப் பிடியில் எக்கச் சக்கமாக சிக்கி இருந்தார். மகளுக்கு துணையாக மஞ்சள் நடிகையும் இயக்குநர் வீட்டில் சிலகாலம் இருந்தார்.

சில மாதங்களுக்குள் இயக்குநருக்கும் மஞ்சள் நடிகைக்கும் இடையே பிரச்சனை தோன்றியதால், மகளுடன் வெளியேறினார் நடிகை. இந்த விவகாரம் மஞ்சள் நடிகையின் கணவரான வெற்றிக்குமார நடிகருக்கும் நன்கு தெரியும்.

திருமணத்தின் முன்னரே வெற்றிக்குமாரருக்கு மஞ்சள் நடிகை நிபந்தனை ஒன்று போட்டிருந்தாராம். "எனது சுதந்திரங்களில் குறுக்கிடக்கூடாது, அதுபோல உங்கள் சுதந்திரங்களிலும் நான் மூக்கை நுழைக்கமாட்டேன்" என்பதுதான் அந்த நிபந்தனை.

ஆனாலும் மஞ்சள் நடிகையினதும், வாரிசுகளதும் வருமானம் மட்டும் குடும்பத்திற்கு சேருகிறது. அந்த வகையில் வெற்றிக்குமாரருக்கு மகிழ்ச்சி தான்.

இப்போது இன்னொரு மகள் நடிப்புலகில் வெற்றிக் கொடி நாட்டத் தொடங்கி இருக்கிறார். அந்த மகளின் வெற்றிக்கு பின்னால் நிற்பவர் மஞ்சள் நடிகைதான்.

யாரை, எப்படி கையாளவேண்டும் என்று மகளுக்கு உபதேசம் செய்வதுபோல, கதை கேட்பதுவரை மஞ்சள் நடிகைதான் கவனிக்கிறார். மஞ்சள் நடிகைபோலவே இருக்கும் தோற்றம் தரும் வாரிசு நடிகையும் குணத்திலும் அவர் போன்றே நடந்து கொள்கிறாராம். ▭



விஜயகாந்த்-பிரீதா விஜயகுமார்
படம்: தர்மா

## பார்க்க...

நெப்போலியன், ...
மேற்கும்' இயக்கம் மு...
தமிழகத் திரைகளி...
பார்க்கலாம்.

ஆரம்பம் முதல் ...
மனசு' தொலைக்கா...
இப் படத்தில் இள...
நாசர் வரும் கா...
என்று படபடப்பா...
தலைவாசல் விஜ...
ஆவேசம் என்று ...
குடும்பப்பாங்கு ...
இடைவேளை...
சோகத்தை தரு...
படம். விசித்ரா ...
ஆகியோரும் ...



ரம்யா கிருஷ்ணன்
ஜெயசூர்யா
தே...

கவண்ணா

## மூன்றாவது படம்

'அவதாரம்' என்று நல்ல கதையுடன் படம் எடுத்தார் நாசர். படம் தோல்வி. அதன்பின்னர் கம்பியூட்டர் கிராபிக்ஸ் உதவியுடன் பிரமாண்டமாக 'தேவதை' படம் எடுத்தார். அதுவும் தோல்வி. அதில் நடித்த நாயகி கீர்த்தி ரெட்டி மட்டும் புகழ் பெற்றார்.

இப்போது மூன்றாவதாக முழுக்க முழுக்க மசாலாவாக ஒரு படம் பண்ணப்போகிறார் நாசர். படத்திற்கு 'வீரன் விருமாண்டி' என்று பெயர் சூட்ட உள்ளாராம். ▭

## உரித்து வைத்து...

'தர்மா' படத்தில் விஜயகாந்த் ஜோடி ப்ரீதா விஜயகுமார் என்பது தெரிந்த செய்தி. இங்கே விஜயகாந்த் ஜோடியாக பிரகரமாகியுள்ள படத்தில் முன்னாள் நடிகையின் சாயல் தெரிகிறதா பாருங்கள்?

ஆம்! மஞ்சளாவை அப்படியே உரித்து வைத்தது போலவே இருக்கிறார் அவரது மகள் ப்ரீதா விஜயகுமார்.

## காட்டிக் கொடுத்தனர்

தேர்தல் தோல்வியின் பின்னரும் உற்சாக முகம் அணிந்து காணப்படுகிறார் சரத்குமார். அந்த உற்சாக முகத்துக்கு அரிவாள் மீசையை மாட்டி விட்டுள்ளார்கள். அந்தக் காலத்தில் வாழ்ந்து மறைந்த மாவீரன் செம்புலிங்கமாக நடிக்கிறார் சரத்குமார். படத்திற்கும் 'செம்புலிங்கம்' என்றே பெயர் சூட்டியுள்ளனர்.

மாவீரன் செம்புலிங்கம் வீர இளைஞன். யாராலும் அவனைப் பிடிக்க முடியவில்லை. இறுதியில் சில துரோகிகள் அவனைக் காட்டிக் கொடுத்தனர். சுட்டுக் கொல்லப்பட்டான்.

இசை: இளையராஜா. திரைக்கதை, இயக்கம் சூர்யகுமார். இவர் பாக்யராஜிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியவர். கதாநாயகி தேர்வு நடக்கிறது.

## ராமகிருஷ்ண ரஜினி

இனி அடுத்த வருடம்தான் ரஜினியின் படம் என்று அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளதல்லவா. அதற்கு எதிராக இன்னொரு தகவலும் உலா வருகிறது. அதையும் கூறிவிடுகிறோம்.

தனது அடுத்த படத்தில் ரஜினி இரண்டு வேடங்களில் தோன்றக் கூடுமாம். ராமா-கிருஷ்ணா என்று பாத்திரங்களின் பெயர்கள் இருக்கும். படத்தின் கதையை லதா ரஜினிகாந்த் எழுதியுள்ளார்.

இப் படம் பிரமாண்டமாக அமைய வேண்டும் என்று விரும்புகிறார் ரஜினி. அதனால் பெரிய நட்சத்திர விடுதி ஒன்றில் அறை எடுத்து தங்கி கதை விவாதத்தில் ஈடுபட்டு வருகிறார். இசை: இளையராஜா. இயக்கம் சுரேஸ் கிருஷ்ணா. இப்படியும் ஒரு செய்தி. இதனையும் ரஜினியே உறுதிப்படுத்தினால்தான் நம்பலாம்.

## சங்கீதாவின் காதலர்

நடிகை சங்கீதா தற்போது காதலிப்பது ஒளிப்பதிவாளர் சரவணனை. 'பூவே உனக்காக' படத்தில் ஒளிப்பதிவாளராக பணியாற்றியவர் சரவணன்.

தற்போது சில படங்களே கைவசம் இருப்பதால் அவற்றை முடித்து கொடுத்துவிட்டு கல்யாணம் பண்ண ஆசைப்படுகிறார் சங்கீதா. ஏற்கனவே சில நடிகர்களிடம் ஏமாந்தது போதும். இனிமேல் நடிகர்களை நம்பக்கூடாது என்று முடிவு செய்துள்ளாராம்.

ஆனால் சங்கீதாவின் வீட்டில் காதலுக்கு சிவப்புக் கொடி.. எதிர்நீச்சல் போட துணிந்துவிட்டாராம்.

## மிரட்டல்

'தன்னைப் பற்றிக் கிசுகிசு எழுதினால் உதை விழும்' என்று நிருபர் ஒருவரை மிரட்டினார் சிம்ரான்.

சும்மா ஒரு பேச்சுக்கு சொல்கிறார் என்றுதான் நினைத்தார்கள். ஆனால் தனது மேக்-அப் உதவியாளரான பையன் ஒருவரை பலர் முன்பாக சிம்ரான் அறைந்திருக்கிறார். அதன்பின்னர் தம்மையும் அறைந்து விடுவாரோ என்று சற்று எட்டவே நிற்கிறார்களாம் நிருபர்கள்.



சரவணன்-சுவலட்சுமி
படம்: சந்தோஷம்

## அதிர்ச்சியான தகவல்

உண்மையோ, பொய்யோ தெரியவில்லை, ரஜினியின் அடுத்த படம் பற்றி இப்படியொரு செய்தி வெளியாகி உள்ளது.

இந்த ஆண்டு படம் எதுவும் நடிக்கமாட்டாராம். 1975ல் நடிக்க ஆரம்பித்த ரஜினிக்கு அடுத்த ஆண்டு வெள்ளிவிழா ஆண்டு.

தனது திரையுலகப் பிரவே...
வெளியாகக் கூடியவிதமாக ப...
திட்டமிட்டுள்ளாராம்.

இத் தகவல் ரஜினி ரசி...
இருக்கிறது. இதன் உண்மை பெ...
ரஜினிதான் வாய் திறக்க வே...



படிப்பகம்

## ...க்கூடிய படம்

...ணி, நாசர், கீதா நடித்துள்ள படம் 'கிழக்கும் ...ஞ்சியம். இசை: இளையராஜா.
...ற்றி நடை போடுகிறது. நம்நாட்டில் விடியோவில் ...
...வரை தொய்வு இல்லாமல் நகர்கிறது. 'கையளவு ... தொடர் மூலம் இங்கும் பிரபலமானவர் கீதா. ...ன கீதாவை நல்ல நடிப்போடு காணலாம். ...ள் எல்லாம் என்ன நாசம் பண்ணப்போகிறாரோ ...ருக்கிறது. வில்லன் அவர்தான். உபவில்லன் ...நப்போலியன்' நகைச்சுவை, அப்பாவித்தனம், ...ரிமாணங்களிலும் சோபிக்கிறார். தேவயாணி ...ார்களே: அதேதான்.
... பின்னர் பிழிந்து பிழிந்து ...ர்கள். பார்க்கக் கூடிய ...ி வண்ணன் ...னர்.

## ரஜினி உதவி

தமிழ் நாட்டில் கோவை குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களது குடும்பங்களுக்கு உதவி செய்வதாக ரஜினி அறிவித்திருந்தார்.

உதவி செய்வதாக பகிரங்கமாக அறிவிப்பதும், பின்னர் நைசாக நழுவிக் கொள்வதும் நடிகர்கள் பலரது வழக்கம்.

ஆனால் ரஜினி சொன்னதைச் செய்யப் போகிறார். தனது செயலாளரை கோவைக்கு அனுப்பி பாதிக்கப்பட்ட குடும்பங்களது விபரங்களை திரட்டுகிறார். 50 குடும்பங்களுக்கு உதவப் போகிறாராம்.

## காதோடு சொல்லுகிறோம்

சங்கீத நடிகை மிக நொந்துபோய் இருக்கிறாராம். 'பா' நடிகரும் டாட்டா காட்டி விட்டார். 'ராம' நடிகர் அரசியலில் பெரும்புள்ளியாகி டில்லி போய்விட்டார். சங்கீத நடிகையை கைப்பிடித்தால்தான் யோகம் என்று தன் மனைவியிடம் 'ராம' நடிகர் முன்பு கூறிவைத்திருந்தார். நடிகையை கல்யாணம் பண்ண முன்னரே யோகம் அடித்துவிட்டதால் இனி மனைவியை ஏமாற்ற முடியாது. அதனால் 'ராம' நடிகரும் நடிகைக்கு 'அல்வா' கொடுத்துவிட்டார்.

**மைக்** புகழ் மோகன நடிகருக்கு 'எய்ட்ஸ்' என்ற வதந்தியால் நடிகைகள் பலர் அவரைக் கண்டாலே ஓட்டம் பிடித்தது தெரிந்த சங்கதி. எப்படியோ வெளியூரில் அழகிகளை பிடித்துவந்து சொந்தப் படம் சுட்டுக்கொண்டிருக்கிறார். ஆரம்பத்தில் பழைய விளையாட்டுத்தனம் எல்லாவற்றையும் மூட்டைகட்டி வைத்துவிட்டு நல்ல பிள்ளையாக இருந்தாராம். பின்னர் 'டூயட்' காட்சிகளில் ஏற்பட்ட நெருக்கத்தால் மனது மாறிவிட்டாராம். இப்போது விளையாட்டுப் பிள்ளையாகி தினம் ஒரு ஜோடியுடன் காணப்படுகிறார். அவரது தொல்லை தாங்கமாட்டாமல் இறக்குமதி அழகிகள் புழுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**கீர்த்தி**யான நடிகையின் இல்லத்தில் இளைய திலகத்திற்கு ஒருநாள் முழுக்க இராஜ உபசாரம் நடந்ததாம். எடையை குறைப்பதில் தீவிரமாக இருந்த இளையதிலகம் அன்றைய உபசாரத்தால் எடை கூடிவிட்டாராம். இராஜ பரம்பரை நடிகை என்று 'பந்தா' காட்டும் கீர்த்தி நடிகை இளைய திலகத்திடம் மட்டும் பதமாக நடக்கிறாராம்.

**மூ**ன்றெழுத்து 'மா' நடிகை ஓஹோ என்று இருந்தபோது 'கார்' நடிகருடனும் ராசியாக இருந்தவர். தன் தங்கைக்கும் 'கார்' நடிகரின் சிபாரிசில் படவாய்ப்பு பெற்றுக் கொடுத்தவர். அப்போதெல்லாம் 'மா' நடிகை காலால் இட்டதை நடிகர் தலையால் செய்து முடிப்பார். இப்போது நடிகை ஜொலிப்பு இழந்துவிட்டார். சரமான குமார நடிகரையும் பிரிந்துவிட்டார். 'கார்' நடிகரிடம் போய் தனக்கு வாய்ப்பு பெற்றுத்தருமாறு கேட்டாராம். நடிகர் சரியாக முகம் கொடுத்தே பேசவில்லையாம். 'இதுதான் உலகம்' என்று முணுமுணுத்தபடி போனாராம் நடிகை.



கௌசல்யா-கீர்த்திரெட்டி
படம்: ஜாலி

“கன்னம் என்னும் ஒரு கிண்ணத்திலே
கவுத்த பால் இருக்கும் வண்ணத்திலே
கறந்த பால் இருக்கும் வண்ணத்திலே
கரும்புச்சாறு கொண்டு வருவாயோ
கிளியே கொஞ்சம் தருவாயோ?”
—கவியரசு கண்ணதாசன்



ஸ்வேதா

## சினிவிசிட்

☐ கே. பாக்யராஜின் 'வேட்டிய மடிச்சுக்கட்டு' படம் மூலம் தமிழில் வில்லனாக அறிமுகமானவர் கன்னட நடிகர் சத்யபிரகாஷ். இவர் அடுத்து மம்முட்டி- சாய்குமார் இணைந்து நடிக்கும் 'இந்தியாருடே' படத்திலும் வில்லனாக நடிக்கிறார்.

☐ சரத்குமார்-சிம்ரான் நடிக்கும் 'நட்புக்காக' படத்தை இயக்கி வரும் கே.எஸ். ரவிக்குமார் அடுத்து பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். இப்படத்தில் சௌந்தர்யா கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.

☐ முரளி கதாநாயகனாக நடிக்கும் 'ரத்னா' படத்தின் இயக்குநர் இளஞ்செழியனுக்கு 'ரத்னா' படம் வெளியாவதற்கு முன்பே இன்னொரு படத்தினை இயக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. புதிதாக இயக்கும் படத்திற்கு 'ராஜகோபுரம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

☐ ஏ. வெங்கடேசன் இயக்கத்தில் விஜய் தயாரித்து நடிக்கும் 'நிலாவே வா' படத்தில் சுவலட்சுமியும், சங்கவியும் கதாநாயகிகளாக நடிக்கின்றனர். இந்தப் படத்தில் விஜய் நடிப்பது மீனவன் வேடத்தில்.

☐ கே. பாலச்சந்தரின் கவிதாலயா தயாரித்த 'துள்ளித் திரிந்த காலம்' படத்தை இயக்கிய பாலசேகரன், கவிதாலயாவுக்காக மீண்டும் ஒரு படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தின் பெயர் என்ன தெரியுமா? 'உயிரெழுத்து.'

☐ ரம்பா, மந்த்ரா, சங்கவி, சுவாதி ஆகியோர் தமிழில் இருந்து மிதுன் சக்கரவர்த்திக்கு ஜோடியாக இந்திப் படங்களில் அறிமுகமானார்கள். தற்போது மிதுன் நடிக்கும் 'தோ நம்பரி' படம் மூலம்சுவர்ணா, செண்பகா,வர்ணா ஆகியோர் மிதுனுக்கு ஜோடியாக இந்தியில் நுழைகிறார்கள்.

☐ 'காதல் தேசம்' படம் முதல் தற்போது நடித்து வரும் படங்கள் வரை ஒரே மாதிரியான தோற்றத்தில் தோன்றும் அப்பாஸ், 'வேண்டுமடி நீ எனக்கு' படத்தில் தாடி- மீசையுடன் வித்தியாசமான கெட்டப்பில் நடிக்கவுள்ளார்.

☐ தமிழில் படவாய்ப்புக்களின்றி கன்னடப்படங்களில் நடித்து வந்த சித்தாரா, நீண்ட இடைவெளிக்குப் பின் 'நட்புக்காக' படத்தில் நடிக்கிறார். இதில் மன்சூர் அலிகானுக்கு ஜோடியாக இவர் நடிக்கிறார்.

☐ மக்கள் திலகம் நடித்த படமொன்றின் பெயர் 'சர்வாதிகாரி' இப்போது சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் படத்திற்கு அப்பெயரை வைத்துள்ளார்கள். 'பொன்மனம்' படத்தை இயக்கிய எஸ்.பி. ராஜ்குமார் இப்படத்தை இயக்குகிறார்.

☐ அரவிந்தசாமிக்கு ஜோடியாக 'என் சுவாசக் காற்றே' படத்தில் நடிப்பவர் மும்பாய் மொடல் இஷா கோபிகர். இவர் நாகார்ஜுனுக்கு ஜோடியாக தெலுங்குப் படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

## வில்லன் அப்பா

உலக அழகி ஐஸ்வர்யா ராயுடன் நடித்து உலகப் புகழ் பெற்றுவிட்டார் பிரசாந்த். அதனால் அப்பா தியாகராஜனுக்கு மகா சந்தோஷம்.

அதே சந்தோசத்துடன் மறுபடி நடிக்க வந்துவிட்டார். பாரதிராஜா இயக்கத்தில் அவரது மகன் மனோஜ் நடிக்கும் தாஜ்மஹால் படத்தில் வில்லன் யாரென்றீர்கள் சாட்சாத் தியாகராஜனே தான்.

## ரகுமான்கள்

நடிகர் ரகுமானும், இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமானும் சகலைகள். இப்போது நடிகர் ரகுமானுக்கு படவாய்ப்புக்கள் இல்லை. மீசை வளர்த்துக் கொண்டும் நடித்துப் பார்த்தார். படவாய்ப்புக்கள் கிடைத்தபாடில்லை.

இப்போது ஏ.ஆர்.ரகுமான் இசையில் ஒரு படத்தில் நடிக்கப்போகிறார் ரகுமான். ஏ.ஆர்.ரகுமானின் இசைக்காக நடிகர் ரகுமானை வைத்து படம் தயாரிக்க பலர் முன்வந்துள்ளனர்.



## இந்திய அழகிக்கு அழைப்பு

முன்னாள் இந்திய அழகு ராணி. அதாகப்பட்டது.'மிஸ் இந்தியா' இவரதுபெயர் ஸ்வேதா. மஞ்சள் தோகையுடன் இங்கு தரிசனம்தருகிறாரே அவர் தான்.

ஸ்வேதாவை தமிழில் நடிக்க வைக்க அணுகியுள்ளார் குஞ்சுமோன். 'ரட்சகன்' படத்தில் உலக அழகி சுஷ்மிதா சென்னை வைத்து படாத பாடுபடுத்தியவர் குஞ்சுமோன். இப்போது முன்னாள் இந்திய அழகிகள் பக்கம் தன் பார்வையை திருப்பி இருக்கிறார்.

அப்படித் திருப்பியபோது இப்போது அதிகப் பட்ச இளமையுடன் தள தளவென்று இருக்கும் ஸ்வேதா சிக்கி இருக்கிறார்.

ஸ்வேதா பற்றிய ஏகப்பட்ட கிசுகிசுக்கள் மும்பாய் சஞ்சிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அழகிப் பட்டத்தை வைத்து திரை மறைவு தொழிலில் கொடிகட்டிப் பறக்கிறாராம்.

இதொன்றும் பெரிய இரகசியமல்ல. அழகு ராணிப் போட்டியில் பலர் பங்குகொள்வதே பணம் சம்பாதிக்க விளம்பரம் தேடத்தான். ஸ்வேதாவிடம் இளமை இருக்கிறது. அது போதும் ரசிகர்களைக் கவர என்று நினைக்கிறாராக்கும் குஞ்சுமோன்.

## மாற்றல் நாயகி

'தேவதை' பட நாயகி கீர்த்தி ரெட்டியை இதுவரை ஐந்து படங்களில் இருந்து தூக்கிக் கடாசிவிட்டார்கள். எல்லாம் அவர் அடிக்கும் பந்தாவை தாங்க முடியாமல்தானாம்.

தனது மேக்-அப் மேன்களை கீர்த்தி ரெட்டியே அடிக்கடி மாற்றிக் கொள்கிறார். இதுவரை ஒன்பது மேக்-அப் மேன்கள் அவரிடம் பணியாற்றியுள்ளனர்.

...வெள்ளிவிழா ஆண்டில் ...ந்தை வெளியிட ரஜினி ...களை சோகப்படுத்தி ... அறியவேண்டுமானால் ...டும்.



www.padippakam.com படிப்பகம்

www.padippakam.com

## உதயத்தைத் தொட்டுவிடு

எந்த அனுதாபமுமின்றித்
தலைகீழாய்ப் புரட்டப்பட்ட–உன்
வாழ்வின் ஓரம்
வழியும் கண்ணீரோடு
நின்று தவிக்கிறாய்!
–0–
உனது கண்ணீரும்...
உனது கவலையின்
கனமும் கூர்மையும்...
உன் வேதனையும்...
வெற்று வாழ்க்கையும்...
எத்தனை கொடியவை..!
–0–
எட்டுத் திக்கையும்
சுற்றிப் பார்த்துத்
திரும்பும் வேளை– உன்
தேவியின் திருமுகம்
விழியெதிரே நிழலாட
விக்கித்து அழும் உனை
தெய்வமும்
தேவதைகளும்
வேடிக்கை பார்த்திருக்கும்!
–0–
உனது மௌனத்தினுள்
செறிந்திருக்கும் கலக்கம்
விபரிக்க முடியாத– உன்
வேதனைகளின்
வலி சொல்லும்!
–0–
மனதினுள்ளே
மணம் தூவிய பூமாலையொன்று
ஒப்பாரியின் ஒலத்தோடு
அறுந்து வீழ்ந்த நாளை...
காற்று உறைந்து
கண்களுக்குள்
அக்கினி படர்ந்த நாளை...
எங்ஙனம் நீ மறப்பாய்..?
–0–
உன் நாயகத்தையும்
உன் நாயகியையும்
இழந்து வெளியேறிய
வன்மமும் வைராக்கியமும்
இனி எதனையும்
மன்னிக்கவோ
மறக்கவோ– உனைத்
தயார்ப்படுத்த மாட்டாது!
–0–
நட்சத்திரங்கள் புள்ளியிட்ட
வானத்தின் கீழ் நின்று
நினைவுகளால்
இருளில் துழாவி– உன்
கண்மணியின்
புன்னகையைக் காண
முயன்று தோற்கிறாய்?
–0–
காலம் கடந்தாலும்...
காதல் விட்டுச் சென்ற
ஒளிக் கிரணங்கள்
உள்ளமெங்கும் ஆட்சிசெய்ய
எங்கோ ஒரு தேசத்தில்
ஒற்றையாய் வாழ்கின்றாய்!
–0–
பனிப்படலங்களினூடு
திசை தெரியாது
தொலைதூரம் போன உயிரே!
திரும்பிப் பார்– நீ
மறுதலித்த திசையொன்றில்
உதயமும் பூபாளமும்
ஒன்றாய் எழுகிறது;
எப்போது அதையடைந்து
என்மனதை மலரவைப்பாய்?

பஹீமா ஜஹான்– அட்டாளைச்சேனை.

## பூச்சியம்

தடுக்கி விழுந்தேன்
பட்டை தீட்டப்பட்ட
அழகான இரண்டு
பூச்சியங்களால்!
00
அவனே– ஒரு
பூச்சியந்தான்!
00
சில நேரங்களில்
பெறுமதியில்லை!
பல நேரங்களிலும்
பெறுமதியே அவள்தான்!
00
பகலில் ஒரு
பூச்சியம்
அது சுடும்!
00
இரவில் ஒரு
பூச்சியம்
அது குளிரும்!
00
நெற்றியில் பூச்சியம்
அது–

## தேன் கிண்ணம்

அடையாள அட்டையை
கூர்ந்து கவனிக்கவைக்கும்!
00
அவலங்களுக்கு
முற்றுப்புள்ளி வைப்பதாகச்
சொல்வார்கள்...
முற்றுப்புள்ளியை பெரிதாக்கி
பூச்சியமாகத் தந்துவிடுவார்கள்!

எஸ். பிரபா, பதுளை.

## கிழிந்த இதயம்

இனி
பிரிவில்லையென
இறுமாந்திருந்தேன்!
என்னாலும்
அதை விதைக்க
முடியுமென
காட்டி விட்டாய்!
*–*
என் ஆசைக்கு
நீர் வார்த்தவன்
நீ தான் என்றால்...
யாருக்கும் புரிவதில்லை;
இப்போது–
தேவையுமில்லை!
*–*
"நான் நினைத்தது
நடக்கவில்லை"– என்ற
உன் சாட்டுகளும்
சளாப்பல்களும்
என் கனவுகளைத்தான்
சிதைத்தன!
*–*
வானத்தில் வாழ
நீ நினைக்கிறாய்!
எனக்கு–
மண்ணில் நின்று
வாழத்தான்
முடிகின்றது!
*–*
ஆனாலும்–ஒரு
சின்ன வேண்டுகோள்
மட்டும்...!
"என்னை உதறியவள்...!"
என்ற விதையை
மட்டும்
சமுதாயத்தில் விதைத்து
விடாதே!
*–*
ஏனெனில்–
நாளை– என்பது
உனக்கு
மட்டுமல்ல;
எனக்கும்
காத்திருக்கிறது!
*–*

மௌனிகா.

## 'அடக்கி ஆள நினைக்காதே!'



அடக்குமுறைகள் எந்த வடிவத்தில் வந்தாலும் அதனை எதிர்த்துப் போராட மக்கள் தயங்கி நின்றதில்லை. சரியான தலைமைத்துவம் அமையும் போது மக்களின் அத்தகைய துணிச்சல் மாபெரும் எழுச்சியாக மாறுகிறது. படத்தில் உள்ள காட்சி இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில்– 1930ல் நிகழ்ந்தது.

வெள்ளையர் ஆட்சியின் பொலிஸ் படைக்கு எதிராக பம்பாயில் (மும்பாய்) பெண்கள் போராடினார்கள். குண்டாந்தடிகளால் அவர்களை தாக்கியது பொலிஸ். ஆனாலும் சற்றும் தளராமல் பொலிசாரை முன்னேறவிடாமல் வழிமறித்து நிற்கிறார்கள் பெண்கள். துணிந்தால் துக்கமில்லை.

அமைதி வழியிலும் துணிச்சலான போராட்டங்களை நடத்தியதும், மக்கள் சக்தியை ஒன்று திரட்டியதும் மகாத்மா காந்தியின் சாதனை. 'போராடினால் நஷ்டம்' என்று காந்தி ஒரு நாளும் சொன்னதில்லை.

## செந்தமிழ்ச் சொற்கள்



இந்தியாவில் தமிழ்நாடு மாநில அரசு வெளியிட்டுள்ள வணிகத்துறைக்கான செந்தமிழ் சொற் பட்டியல்:

ஏஜென்ஸி - முகவாண்மை, முகவர்கள்
ஓட்டோ மொபைல்ஸ் - தானியங்கிகள்
பேங்கர்ஸ் - வைப்பகர், வங்கி
பார் - மது அருந்தகம்
பேக்கரி - அடுமனை
பஸார் - கடைத்தெரு
கலர்லேப் - வண்ணக்கூடம்
கூரியர் - தூதஞ்சல்
நேர்சரி ஸ்கூல் - மழலையர் பாடசாலை
ஸ்ருடியோ - ஒளிப்பட நிலையம், படமனை
ஓடியோ கசட் - ஒலிநாடா
ஓடிட்டோரியம் - கலையரங்கம்
பார்சோப் - நீள் வழலை
பியூட்டி பார்லர் - அழகு நிலையம்
பிஸ்கட்ஸ் - ஈரட்டிகள்
போர்டிங் - உணவு, உறையுள் விடுதி
பல்ப் - குமிழ் விளக்கு
பீரோ - பேழை
கண்டீன் - சிற்றுண்டிச்சாலை
சிமெண்ட் - பசுங்காரை
கொம்பிளெக்ஸ் - வளாகம்
கூல் ட்ரிங்ஸ் - தண்ணருந்தகம்
சைக்கிள் ரிக்ஷா - மிதியிழுவை
எம்ப்ரொய்டரி - பூத்தையல்
எவர்சில்வர் - நிலைவெள்ளி
ஃபேஷன் - புதுப்பாணி
பிளாஸ்க் - குடுவைகள்
லொறி - சரக்குந்து
பாஸ்போர்ட் - கடவுச்சீட்டு
பாட்னர்ஷிப் - பங்காண்மை
பெட்ரோல் - எரிநெய்
சோப் - வழலை
வீடியோ - வாரொளியம்
வோட்டர் ஃபில்டர் - நீர்வடிகலன்
டிஜிட்டல் வோட்ச் - எண்கடிகை

## பிரிவு வரும் போது...!

வானம் சுழலும்
பூமி நழுவும்
இதயம் துடிக்க
மறந்து
துவழும்..!
**
விருட்சமாய்
வேர் விட்டு
விழுது பரப்பிய
கனவுகள்
எல்லாம்
ஆயிரமாயிரம்
அரிவாள்கள்
கொண்டு
அறுத்தெறியப்படும்...!
**
உச்சி முதல்
பாதம் வரை
வேதனை
தீ பரவும்...:
உறக்கமும்
உன்னை
உதறியெறியும்...!
**
கடந்த கால
கனிமொழிகள்
காதோரம்
ஆர்ப்பரிக்கும்...:
முத்தங்களின்
சத்தம் நினைவில்
நித்தம் வந்து
முட்டும்...!
**
விழிகள் அருவியாய்
உருமாறும்...:
விம்மல்கள்
விண்ணையும் தொட்டு
விடும்...
**
சூரியன் குளிர்வதாய்,
நிலவு சுடுவதாய்
உனக்குள்ளே
அர்த்தப்படும்...:
வயிறு பசித்தாலும்
உணவை
வாய் மறுக்கும்..!
**
முடிவுமற்ற
தொடருமற்ற
'வாழ்க்கை'
வாலுமின்றி
நூலுமின்றி
அந்தரத்தில்
பறக்கும் பட்டமென
பரிதவிக்கும்...!?

'குறிஞ்சி நிலா'– இரத்தினபுரி.

## பேனா நண்பர்கள்



பெயர்:
எம். உதயசீலன்
வயது: 23
முகவரி:
492/8, காலி வீதி,
கொழும்பு–06.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்:
எஸ். முஸ்தாக்
வயது: 22
முகவரி: 247/ஏ,
புதுப்பள்ளி வீதி,
அக்கரைப்பற்று–06.
பொழுது போக்கு:
பேனா நட்பு,
வானொலி.



பெயர்:
எஸ். பத்மினிதேவி
வயது: 20
முகவரி:
பதுளை வீதி,
இராஜபுரம்.
பொழுது போக்கு:
பத்திரிகை,
பேனா நட்பு.



பெயர்:
முகமட் நிஸ்பர்
வயது: 17
முகவரி:
நிக்கவெல,
ஹொரவபொத்தான,
அநுராதபுரம்.
பொழுது போக்கு:
ரீ.வி., பாடல்கள்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(26.04.1998 தொடக்கம் 02.05.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி தடை, உறவினர் பகை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, தொழில் மந்தம். | பகல் | 12 | மணி |
| புதன்- பணக் கஷ்டம், கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- சுபகாரியத் தடை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| சனி- வெளியிட பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், கடன் தொல்லை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- அந்நியர் நட்பு, உறவினர் பகை. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| சனி- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப | 1 | மணி |
| திங்கள்- பெரியோர் சகாயம், தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பண வரவு. | பகல் | 12 | மணி |
| புதன்- உறவினர் உதவி, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- பலவித பேறு, தொழில் சிறப்பு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | மு.ப | 10 | மணி |
| சனி- அந்நியர் நட்பு, பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், தொழில் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப | 1 | மணி |
| புதன்- பெரியோர் நட்பு, தொழில் விருத்தி. | பகல் | 11 | மணி |
| வியாழன்- பயனற்ற செயல், மனக் கலக்கம். | பி.ப | 1 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | மு.ப. | 10 | மணி |
| சனி- அந்நியர் நட்பு, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் பேறு, மன மகிழ்ச்சி. | பி.ப | 2 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| புதன்- துயர் நீங்கும், காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- உயர்ந்த எண்ணம், அந்நியர் நட்பு. | பகல் | 11 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- பலவித நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பலவித பேறு, இனசன நன்மை. | பகல் | 11 | மணி |
| சனி- துயர் நீங்கும், உறவினர் உதவி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6

### நவக்கிரக சஞ்சாரம்

மேடம் - சூரியன், செவ்வாய், சனி.
சிம்மம் - இராகு.
கும்பம் - வியாழன், கேது.
மீனம் - புதன், வெள்ளி.

சந்திரன்- மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், தொழில் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பலவித பேறு, காரியானுகூலம். | பி.ப. | 3 | மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பயனற்ற செயல்; மனக் கலகம். | மு.ப. | 10 | மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | மு.ப. | 11 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் | 12 | மணி |
| புதன்- பலவித பேறு, தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- மன மகிழ்ச்சி, காரியசித்தி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், இனசன நன்மை. | பி.ப. | 1 | மணி |
| சனி- பொருள் வரவு, உயர்ந்த நிலை. | மு.ப. | 11 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், பணக் கஷ்டம். | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- உயர்ந்த எண்ணம், பெரியோர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| புதன்- முயற்சி பலிதம், தொழில் மேன்மை. | பகல் | 11 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பலவித பேறு, மனக் கிலேசம். | பகல் | 11 | மணி |
| சனி- வீண் விரோதம், மறைமுக எதிர்ப்பு. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி. | பி.ப | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப | 1 | மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- அந்நியர் பகை, வீண் விரோதம். | பகல் | 11 | மணி |
| சனி- தொழில் மந்தம், கடன் படல். | பி.ப. | .2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசனப் பகை, மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| புதன்- தொழில் கஷ்டம், மனக் கிலேசம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- பலவித பேறு, இனசன நன்மை. | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3




படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

## அபாயம் இல்லாத உடற் பயிற்சி



உடலை அழகாகவும், ஆரோக்கிய மாகவும் வைத்துக்கொள்ள உடற்பயிற்சி அவசியம். உடற்பயிற்சிக்கு முன்னும் பின்னும் கடைப்பிடிக்க வேண்டிய விஷயங்களை மறந்து விட்டு ஒரேயடியாக உடற்பயிற்சிக்கு அடிமையாவது ஆபத்தானது.

உடற்பயிற்சிகள் செய்யும் போது கவனிக்க வேண்டியவை:

❒ ஆரம்ப காலத்தில் மிக மிக மெதுவாக உடற்பயிற்சியில் ஈடுபடுவதே சிறந்தது. விரைவாகச் செய்வதால் விரைவான பலன்களைப் பெறமுடியாது.

❒ உடற்பயிற்சியைத் தொடங்கியதும் முதலில் சில நாட்களுக்கு உடல் தசைகளில் வலி இருப்பது சகஜம். இது ஒரு சில நாட்களில் மறைந்து விடும். சிலவேளைகளில் வலி தொடர்ந்தால் மருத்துவப் பரிசோதனை அவசியம்.

❒ உடலில் ஏதேனும் வியாதிகள் இருந்தாலோ, அதற்கு சிகிச்சை மேற் கொண்டு வந்தாலோ, மருத்துவரது ஆலோ சனையின்றி உடற்பயிற்சியைத் தொடங்கக் கூடாது.

❒ சிலவித உடற்பயிற்சிகள் பெண் களது உடல் ஹோர்மோன்களில் மாற்றங் களை ஏற்படுத்தலாம். எனவே, திருமணத் திற்குப் பிறகு இதுபோன்ற உடற்பயிற்சி களைத் தொடரும் பெண்கள் கருத்தரிக்க முடியாமல் போகலாம்.

❒ உடற்பயிற்சியின் மூலம் நமது உடல் தசைகள் வலுப்பெற்று சுவாசம் எளிதாகிறது. தீவிர உடற்பயிற்சியால் இதயத்துடிப் பும் அதிகமாகிறது. எனவே கர்ப்பிணிப் பெண்கள் உடற் பயிற்சி விஷயத்தில் மிகுந்த கவனத் துடன் இருக்க வேண்டும். தீவிர உடற் பயிற்சியும் அதன் விளைவாக ஏற்படக்கூடிய இதயத்துடிப்பின் அதிகரிப்பும், தாய், சேய் இருவரையும் தாக்கும்.

❒ உடல் இளைக்க உடற்பயிற்சியை மேற்கொள்பவர்கள் உணவு விஷயத்திலும் கட்டுப்பாட்டுடன் இருந்தால் மட்டுமே முழுப் பலனையும் பெறமுடியும்.

❒ சில பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறுகள் இருக்கும். இதற்குக் கண் மூடித்தனமான உடற்பயிற்சிகளும் காரண மாக இருக்கலாம். எனவே உடற்பயிற்சியைத் தொடங்குவதற்கு முன் ஒவ்வொருவரும் மருத்துவரையோ, உடற்பயிற்சி நிபு ணரையோ கலந்தாலோசித்து உடல் நிலைக் கேற்ப சரியான பயிற்சிகளை மேற் கொள்ளலாம். ◘

## இது–புடவை சமாச்சாரம்



புடவைகள், துணிகளை அடுக்கி வைத்து, பராமரித்துப் பாதுகாத்துப் பயன் படுத்தும் வழிமுறைகள் எல்லாம் உங்க ளுக்கு தெரியுமா?

★ பலர் தேவையற்ற துணிகளைக் கண்ட கண்ட இடங்களில் குவித்துப் போட்டி ருப்பார்கள். வீட்டைச் சுத்தப்படுத்தும்போதும் வீட்டுக்கு விருந்தினர்கள் யாராவது வரும் போதும் அந்தத் துணிகளை எங்கே வைப்பது என்று தெரியாமல் திணறுவார்கள்.

தேவையில்லாத துணிகளைக் கண்ட கண்ட இடங்களில் போடாமல் தூரவீசி விடவோ, அல்லது தேவைப்படுவோரிடம் கொடுக்கவோ செய்துவிடுங்கள்.

★ தினமும் பயன்படுத்தும் துணிகள், துவைக்க வேண்டிய துணிகள், துவைத்த துணிகள் ஆகியவற்றை ஒன்றோடொன்று சேர்த்துப் போடாதீர்கள்.

★ 'பட்டு' போன்ற சிலவகை புடவை களில் நேரடியாகச் சூரியவெளிச்சம் பட்டால், புடவையின் வர்ணம் மங்கும். ஆகவே அதனை நிழலில் போட்டுக் காயவிடுங்கள்.

★ அலமாரியில் ஒவ்வொரு வகை துணிகளுக்கும் தனித்தனி இடங்களை உருவாக்குவது நல்லது. சில சீசன்களில் உபயோகிக்கும் துணிகளை, அந்த சீசன் சென்றதும் சுத்தப்படுத்தி தனியாகப் பத்திரப்படுத்தி ஒதுக்கி வைத்துவிடுங்கள்.

★ துணிகளை அடுக்கி வைக்கும் அலமாரியின் உள் அறைகளில் வாரம் ஒரு முறை சென்ட் தெளித்தால், அந்த மணம் புடவைகளில் நிலைத்து நிற்கும். கம்பளித் துணிகளை பொலித்தீன் பைகளிலோ, கட தாசியிலோ பார்சல் செய்து வைத்திருங்கள்.

★ சமையல் வேலை செய்யும்போது புடவை கட்டினால் அழுக்குப்பட்டு சேதமாகி விடும். எனவே சமையலறையில் புடவை வேண்டாம்.

★ பெண்கள் மேக்கப் போட்டுக் கொண்ட பின்பே புடவைகளைக் கட்ட வேண்டும்.

★ புடவை கட்டிய பின்பு தலையைச் சீவுவதாக இருந்தால் முதுகுப்பகுதியுடன் சேர்த்து துவாயைப் போட்டு மூடிக்கொள் ளுங்கள்.

★ துணிகளில் கறைபட்டால் 'அயர்ன்' பண்ணுவதற்கு முன்பு கறையைப் போக்கி விட வேண்டும். கறையின்மீது அயர்ன் பண்ணினால் பின்பு கறையைப் போக்குவது கடினம்.

★ உள்ளாடைகளைத் தினமும் மாற்றி, தினமும் துவைக்க வேண்டும். இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு மேல், மேலுடைகளை அணியாமல் துவைத்துவிட வேண்டும். ■


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



✯ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

✯ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

✯ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** DO

பெயர்:........................

முகவரி:........................

..............................

தொழில்:........................

கையொப்பம்:........................

**உண்மை–நேர்மை–வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிர சுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 02-05-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 32



ஜேம்ஸ் ஹெவிற்றைக் கண்டதும் டயானா தன்னை மறந்தவராக அவரைக் கட்டி யணைத்தபடி விம்மத் தொடங்கி விட்டார்.

ஹெவிற்றின் மார்பில் தன் தலையைச் சரித்து முகத்தைப் புதைத்தபடி டயானா தேம்பி னார்.

ஹெவிற்றும் டயானாவை ஆறுதல்படுத்தும் பாவனை யில் அவரது முதுகை வருடத் தொடங்கினார்.

டயானா நிமிர்ந்து ஹெவிற்றை நோக்கினார். கண் களுக்குள் கண்ணீர் நிரம்பி வழிந்தது.

அன்புக்காகவும், ஆதரவுக் காகவும் ஏங்கித் துடிப்பது போன்று, டயானாவின் அழ கான சிவந்த உதடுகள் துடித் தன.

அவை ஹெவிற்றை அழைத்தன. ஹெவிற் யமகாத கன்; அழைப்பை உணர்ச்சிகர மாக, ஆவேசமாக எதிர் கொண் டான்.

டயானாவின் பிடரியை அழுத்தியபடி, அவரது இதழ் களை ஆழமாக, மிக மிக ஆழ மாக உணர்ந்தான். டயானா வுக்கு இனிய வதையாக இருந் தது.

இத்தனை நாள் பிரிவுக்கு அது தேவையான வதைபோல வும் இருந்தது.

இதுதான் சந்தர்ப்பம் என்று நினைத்த ஹெவிற் டயானாவை தன் தனி யாறைக்கு அழைத்துச் செல்ல முயன்றான்.

ஹெவிற்றின் இதமான அணைப்பு கத கதப்பாக இருந்தது. டயானாவின் மென்மை யான தாடையை தன் முன்பற்களால் கவ்விக் கொண்டான் ஹெவிற். அவன் கைகள் மிக மிக மிக அத்துமீறிக் கொண்டிருந்தன.

### டயானா விழிப்பு

டயானாவை அவன் தனது வேட்டைக் குத் தயார் படுத்துவதில்–இசையவைப்பதில் அக்கறை காட்டினான்.

"என் செல்லப் பூனையே" என்று டயானா வின் காதருகே அவன் முணுமுணுத்தான். தனக்குத் தெரிந்த வித்தைகளையெல்லாம் பிரயோகித்து அன்று டயானாவை வெற்றி கொள்ள அதி தீவிரம் கொண்டான்.

ஆனால், அன்றும் டயானா முதலில் இணங்கினாலும் பின்னர் விழித்துக் கொண்டு, அவனிடம் இருந்து தப்பிக் கொண்டார்.

"இன்னொரு நாள் பார்த்துக்கொள்ள லாம்!" என்று டயானா அவனை சமாளித்தார்.

## அரச குடும்ப திருமணங்கள்

"ஏனோ தெரியவில்லை; அப்போதெல் லாம் எனக்கு ஹெவிற்றுடன் உறவு கொள் ளும் எண்ணமே தோன்றவில்லை. அவன் தொடும்போதெல்லாம் இசைந்து கொடுத்த என் மனது, அவனுடன் உறவு கொள்வதை மட்டும் ஏன் தடுத்தது என்பது புரியாத புதிர்தான்," என்று அப்போதைய மன நிலையை தன் நெருங்கிய தோழிகள் சிலரிடம் பின்னர் விபரித்தார் டயானா.

ஜேம்ஸ் ஹெவிற் கள்ளப் பூனை. அந்தக் கள்ளப்பூனை டயானாவின் பலவீனத்தை நம்பிக் காத்திருந்தது.

### அரச குடும்பத் திருமணங்கள்

இளவரசர் சாள்ஸ்–டயானா தம்பதி பிரிவது உறுதி என்று பத்திரிகைகள் ஆருடங் கள் வெளியிட்டு வந்தன.

இந்த ஆருடங்களைப் பார்த்தவர்கள் பிரிட்டிஷ் அரச குடும்ப திருமணங்கள்– இன்று நேற்றல்ல– பல நூற்றாண்டாகவே பிரச்சனைக்குரியவையாகவே விளங்கி வரு வதையும் அசைபோட்டுப் பார்த்தனர்.

ஆறாம் நூற்றாண்டில் அரசர் ஆர்தர், மகாராணி குயினோவர் மற்றும் சே. லான்ஸ் லொட் ஆகியோர் மத்தியில் பல பிரச்சனைகள் தோன்றின.

அப்போது மதபீடத்தினர் தலையிட்டு தீர்த்துவைத்தனர்.

அதன் பின்னர் அரச குடும்பத்தில் ஏற்பட்ட பல பிணக்குகளை யாராலும் தீர்க்க முடியாமல் போய்விட்டது.

செல்வச் செழிப்பில் சொகுசு வாழ்க்கை யில் திளைப்பவர்கள் 'செக்ஸ்' விஷயத்திலும் மாற்றங்களை நாடுவது தவிர்க்க முடியாத தாகியது.

சில காதல் லீலைகள் இரகசியமாக நடந்தேறின. சில பகிரங்கமாக அறியப்பட் டன.

13ம் நூற்றாண்டில் அரச குடும்பப் பெண்களை மட்டுமே கட்டுப்படுத்தும் சட்டங்கள் இருந்தன.

'அரசரின் மூத்த மகனும், பட்டத்துக்கு உரியவருமான ஒருவரது துணைவியார் தன் கணவருக்குத் துரோகம் செய்தால் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்' என்று 1351ம் ஆண்டில் சட்டம் கொண்டுவரப் பட்டது.

ஆனால் அரசரோ, அவரது மூத்த மகனோ தங்கள் துணைவிமாருக்குத் துரோ கம் செய்வது குற்றமாகக் கருதப்படவில்லை. எத்தனை பெண்களுடனும் அவர்கள் சல்லா பிக்கலாம்.

ஆனால், பின்னர் இத்தகைய சட்டங்கள் இல்லாதொழிந்தன. 1772ல் உருவாக்கப்பட்ட அரச குடும்பத் திருமணங்கள் தொடர்பான சட்டம் 'சோரம் போதல்' தொடர்பான குற்றங் களுக்கு தண்டனை விதிப் பது பற்றி எதுவும் கூற வில்லை.

நாலாவது ஜோர்ஜ் மன்னர் 1820 முதல் 1830 வரை 10 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.

இவருடைய மகா ராணி கரோலினுக்கு தினம் ஒரு புதுத் துணை தேவை. அரண்மனையில் பணி புரிந்த கட்டுமஸ்தான ஊழி யர்கள் மாகராணியின் படுக்கையறையிலும் பணி புரிந்தனர்.

மகாராணியின் நட வடிக்கைளை அறிந்தும் மன்னரால் அவளை நிரா கரிக்க முடியவில்லை.

### சபல மன்னர்

இரண்டாவது எட் வேட் மன்னர் பயங்கர மான சபலப் பேர்வழி. பெண்களுடன் மட்டுமல்லா மல், தன்னினச் சேர்க்கை யிலும் பிரியம் உள்ளவர்.

எட்வேட் மன்னருக்கு 12 வயதில் ஒரு பெண்ணை மணமகளாக்கி னார்கள். அவளது பெயர் இஸபெல்லா– ஃபிரான்ஸ் நாட்டவள்.

**புவனா**

வக்கிர குணம் கொண்ட எட்வேட் மன்ன ரால் சிறுவயதில் இருந்து இஸபெல்லா பட்ட துன் பம் கொஞ்ச நஞ்சமல்ல.

மகாராணி இஸபெல் லாவின் கண் முன்னா லேயே காம நாடகங்களை அரங்கேற்றினார் எட் வேட் மன்னர்.

பெண் பித்துப்பிடித்த மன்னரால் தன் மனைவி யான இஸபெல்லாவுக்கு சந்தோசம் கொடுக்க முடியவில்லை.

இறுதியில் மகாராணி இஸபெல்லா தானும் துணை தேட ஆரம்பித் தாள். பிரபுக்கள் பலர் மகாராணியின் அடிமை களாக மாறினார்கள்.

எட்வேட்டின் வக்கிர எண்ணங்களால் மகாராணி இஸபெல்லாவின் அழகான உடம்பில் ஏராளமான தழும்புகள்.

மன்னர் எட்வேட்டை பழி தீர்க்கும் கோபத்துடன் மகாராணி இஸபெல்லாவின் நடவடிக்கைகள் அமைந்தன.

இஸபெல்லாவின் நடவடிக்கைகள் மிக மோச மானவை என்பது உண்மையே. அதைவிட மோசமானவை எட்வேட் மன்ன ரின் நடவடிக்கைகள்.

விபரம் அறியாத வயதில் இஸபெல் லாவை மனைவியாக்கி, பின்னர் தன் வக் கிரங்களுக்கு வடிகாலாக்கிய கொடிய மன்னர் எட்வேட்.

ஆனாலும் மகாராணி இஸபெல்லாவை மட்டும் 'ஃபிரான்ஸ் நாட்டின் ஓநாய்' என்று பட்டம் சூட்டி கொடுமைக்காரியாகச் சித்தரித் தார்கள்.

### இரண்டாவது ஜோர்ஜ்

இரண்டாம் ஜோர்ஜ் மன்னர் 1727 முதல் 1760வரை இங்கிலாந்தை ஆண்ட வர்.

இவருக்கு மனைவியான மகாராணியை விட அவளது உதவியாளர்களாக இருந்த இரு பெண்கள்மீதுதான் அவருக்கு ஆசை.



மனைவியை ஏக்கத்தில் வாடவைத்து விட்டு, மனைவியின் உதவியாளர்களான இரண்டு பெண்களுடனும் சல்லாபிப் பார்.

அந்த இரண்டு பெண்களில் ஒருத்தியின் பெயர் ஹென்றியெட்டா.

அவளது கணவர், கண்டர்பரி பிஷப் பாண்டவரிடம் தன் மனைவியை மன்னரின் பிடியில் இருந்து மீட்டுத் தரும்படி வேண்டு கோள் விடுத்தார்.

ஆனால் எட்டாவது எட்வேட் மன்னர் இவர்களுக்குள் வித்தியாசமானவர். புதுமை யானவர். அது எப்படி என்பதை அடுத்த வாரம் பார்ப்போம்.

(அடுத்த வாரமும் வரும்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கல்பிட்டி வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் ☞ எஸ். மஞ்சுளா, அரசினர் வைத்தியசாலை, கல்பிட்டி.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.


அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்





சொல்லு மழலையிலே-கண்ணம்மா!
துன்பங்கள் தீர்த்திடுவாய்;
முல்லைச் சிரிப்பாலே-எனது
மூர்க்கந் தணித்திடுவாய்!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# சிறுவனும் வெளியூர்க்காரனும்

ஓர் ஊருக்கு நன்றாகப் படித்த ஒரு வெளியூர்க்காரன் வந்தான். அவன் வானசாஸ்திரம், வேதசாஸ்திரம், உடல்கூறு என எல்லாவற்றிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தான்.

அவன் நன்கு படித்திருந்ததால் தன்னை விட நன்றாகப் படித்தவர்கள் யாரும் இல்லை என்ற இறுமாப்புக் கொண்டிருந்தான்.

அவன் அந்த ஊருக்குள் நுழையும் போது, சில கூலித் தொழிலாளர்கள் வேலை செய்துவிட்டு ஒரு பெரிய மரத் தடியில் அமர்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தனர்.

நேராக அவன் கிராமவாசிகளிடம் சென்று,

"நான் பக்கத்து ஊரில் இருந்து வருகிறேன். நான் எல்லா சாஸ்திரங்களையும் நன்கு படித்துத் தேர்ச்சி பெற்றிருக்கிறேன்.

உங்களில் யாராவது என்னிடம் ஒரு கேள்வி கேளுங்கள். அதற்கு நான் பதில் சொல்கிறேன். நீங்கள் என்னிடம் கேட்கும் கேள்விக்கு சரியாக நான் பதில் சொன்னால், நீங்கள் எனக்கு ஐந்து வெள்ளிக்காசுகள் தரவேண்டும்.

நான் சரியாகப் பதில் சொல்லவில்லை என்றால் பத்து வெள்ளிக்காசுகள் தருகிறேன்!" என்று சவால் விட்டான்.

அந்தக் கிராமவாசிகள் யாரும் எதுவும் பேசாமல் இருந்தனர். எவரும் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை.

'ஆஹா, என்னிடம் கேள்வி கேட்பதற்கு யாருக்கும் துணிச்சல் இல்லை' என்று மேலும் இறுமாப்பு அடைந்தான் அவன்.

இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன், படித்த வெளியூர்க்காரனிடம் வந்து,

"உங்களிடம் நான் ஒரு கேள்வி கேட்கிறேன், பதில் சொல்வீர்களா?" என்று கேட்டான்.

'இந்தச் சிறுவன் என்னிடம் என்ன கேள்வி கேட்டுவிடப் போகிறான்?' என்று



அலட்சியமாக, "சரி கேள்!" என்றான்.

"ஒரு பறவை இருக்கிறது. அதற்கு ஆறு கால்கள், ஆறு இறக்கைகள், ஆறு கண்கள் உள்ளன. அந்தப் பறவையின் பெயர் என்னவென்று சொல்லுங்கள் பார்க்கலாம்?" என்றான் சிறுவன்.

'இப்படி ஒரு பறவை இருக்கிறதா? எனக்குத் தெரியவில்லையே. இவனுக்குத் தெரியும்போல் இருக்கிறதே' என்று எண்ணிய படித்த வெளியூர்க்காரன் சிறுவனிடம்,

"இந்தக் கேள்விக்கு எனக்குப் பதில் தெரியவில்லை. ஆகவே நான் தோற்றுவிட்டேன். இந்தா பத்து வெள்ளிக்காசுகள். கேள்விக்கான பதிலை நீயே சொல்!" என்றான்.

அதற்கு அந்தச் சிறுவன்,

"எனக்கும் இந்தக் கேள்விக்குப் பதில் தெரியாது. இந்தாருங்கள் ஐந்து வெள்ளிக் காசுகள்" என்று, ஐந்து வெள்ளிக்காசுகளைக் கொடுத்துவிட்டு, மிகுதி ஐந்து வெள்ளிக் காசுகளை எடுத்துக்கொண்டு சென்றான் சிறுவன்.

'நாம் இவ்வளவு படித்திருந்தும், ஒரு சாதாரண சிறுவனிடம் தோற்றுவிட்டோமே!' என்று வெட்கித் தலைகுனிந்தபடி அந்த ஊரை விட்டுச் சென்றான் படித்த வெளியூர்க்காரன்.

# அதிசயம்-ஆனால் உண்மை!



### விந்தைக் கப்பல்:

மிசௌரி நதியில் டிராகன் வடிவில் அமைந்த கப்பல் ஒன்று 1819ல் விடப்பட்டது. சிவப்பிந்தியர்களைப் பயமுறுத்துவதற்காகவே இக்கப்பல் டிராகன் வடிவில் அமைக்கப்பட்டது. இதன் வாயிலிருந்து புகை வெளியே வரும். வால்பகுதியில் நுரையைத் தள்ளியபடி வரும்.



### ரேமி செடி:

மேற்கிந்தியத்தீவில் காணப்படும் ரேமி எனப்படும் இச்செடி ஒரு வருடத்தில் 7முறை நாரிழையை (ஃபைபர்) உற்பத்தி செய்கிறது. இந்த நாரிழையைக் கொண்டு ஆடை நெய்யப்படுகிறது.



### வாடாத இலை:

ஜப்பானில் இருந்த அமெரிக்க மாலுமி ஒருவர் 1945ம் ஆண்டு பைபிள் புத்தகத்தினுள் பக்க அடையாளத்திற்காக வைத்த இலை ஒன்று 21 வருடங்களாகியும் வாடாமல் பச்சை நிறமாகவே இருந்ததாம்.

### நினைவுச் சின்னம்:



எகிப்திய பாரோமன்னர் இரண்டாம் ராமேஸஸ் இரண்டு குதிரைகள் உள்ள மோதிரம் ஒன்றை அணிந்திருந்தார். காதேஷ் போரில் அவரின் உயிரைக் காத்த இரு குதிரைகளின் நினைவாகவே அதை அவர் அணிந்திருந்தார்.

# வாரம் ஒரு நாடு

## எஸ்தோனியா

| | |
|---|---|
| தலைநகர் | - தாலின் |
| பரப்பு | - 45,100 சதுரகிலோமீட்டர் |
| மக்கள் தொகை | - 15 இலட்சம் |
| மொழி | - எஸ்தோனியன் |
| சமயம் | - கிறிஸ்தவம் |
| நாணயம் | - குருன் |
| எழுத்தறிவு | - 100% |
| தனிநபர் வருமானம் | - 2617 டொலர் |

**அமைவிடம்:**

எஸ்தோனியக் குடியரசின் மேற்கிலும்; வடக்கிலும் பால்டிக் கடல் அமைந்துள்ளது. தென்மேற்கே ரஷ்யாவும், தெற்கில் லாட்வியாவும் எல்லைகளாக அமைந்துள்ளன. அதிக ஏரிகளைக் கொண்ட தாழ்வான நாடு இது.

**வரலாறு:**

சோவியத் யூனியனுக்கும், ஜெர்மனிக்கும் இடையே 1939ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தைத்





தொடர்ந்து எஸ்தோனியா சோவியத் யூனியனுக்குக் கிடைத்தது. 1940ல் சோவியத் யூனியனின் ஒரு குடியரசானது. 1991ல் சோவியத் யூனியனிடமிருந்து பிரிந்து சுதந்திர தனி நாடானது.

**பொருளாதாரம்:**

விவசாயம் முக்கிய தொழில். கால்நடை வளர்ப்பும் சிறப்பாகவுள்ளது. தானியங்கள், உருளைக்கிழங்கு முக்கிய விளை பொருட்கள். காட்டுவளம் மிகுதியாதலால் மரத்தொழிற்சாலைகள் அதிகம் உள்ளன.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 02.05.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 242
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 240

பரிசுக்குரியவர்:
எஸ். நிவேதா,
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ஏ. றினோஸா, நீர்கொழும்பு வீதி, சீதுவை. | எ.ஃப். அல்றினா, அல்ஹம்ரா வித்தியாலயம், தர்கா நகர். |
| கே. அகிலன், மத்திய மகா வித்தியாலயம், தம்பலுவில்-01. | வி. கஜரூபன், விஜயரட்ணம் இந்து மத்திய கல்., நீர்கொழும்பு |
| எஸ். லிங்கேஸ்வரி, தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை. | ஆர். பிரியதர்ஷினி, சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை. |
| முகமட் பர்ஹான், ஸாஹிரா கல்லூரி, கம்பளை. | கே. ஜெயகுமார், கண்டி வீதி, வவுனியா. |
| எம். நகுலேஸ்வரன், நிக்கா கொல்ல, வெலிமடை. | எஸ். அருணன், விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13. |

# பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை

பிறவிக் கோளாறுகளால் முகத்தில் உண்டான விகாரங்கள், விபத்துக்களால் உடல் உறுப்புக்களில் ஏற்படும் சீர்குலைவுகள் போன்றவற்றை செம்மைப் படுத்துவதற்காக செய்யப்படும் அறுவைச் சிகிச்சைக்குப் பெயர் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை.



வெட்டுக்காயம், தழும்புகள், விகாரமாக இருக்கும் முக அமைப்பு போன்றவற்றை மாற்றி இயல்பான அமைப்பில் கொண்டுவர இந்த அறுவைச் சிகிச்சை பயன்படுகிறது.

வசதியுள்ளவர்கள்- குறிப்பாக நடிக, நடிகையர் வளைந்த மூக்கு, உப்பிய கன்னம், முகச்சுருக்கங்கள் போன்றவற்றை சீர்படுத்த இச்சிகிச்சையை நாடுகின்றனர்.

வேண்டாத சதைகளையோ, தோலையோ நீக்கிவிட்டு அந்த இடத்தில் உடலின் பழுதுபடாத, நலமிக்க நிலையிலுள்ள பகுதியில் இருந்து தோலை எடுத்து உரிய இடத்தில் வைத்து இச்சிகிச்சை செய்கிறார்கள். இந்த அறுவைச் சிகிச்சை முறை மேற்கத்திய நாடுகளில் நடைமுறைக்கு வந்து பலகாலம் ஆகிவிட்டது. ஆசிய நாடுகளில் இப்போதுதான் பரவத் தொடங்கியுள்ளது.

# அதிசய எண்


37,037 என்ற எண்ணை ஒன்றிலிருந்து ஒன்பதிற்குள் உள்ள ஏதாவது ஒரு எண்ணால் பெருக்குங்கள். வந்த விடையை மீண்டும் 3ஆல் பெருக்குங்கள். இப்போது வரும் விடையில் உள்ள ஒவ்வொரு எண்ணும், முதலில் எந்த எண்ணால் பெருக்கினீர்களோ அந்த எண்ணாகவே இருக்கும்.

உதாரணமாக,

| | |
|---|---|
| 37,037 | 259,259 |
| 7 | 3 |
| 259,259 | 777777 |

அனுப்பியவர்: தா. தயாளன், கொழும்பு-09.

# டயறி பற்றிய குறிப்புகள்



பெரும்பாலானவர்கள் தங்கள் வாழ்க்கையில் தினசரி நடப்பவற்றை, வேலை சம்பந்தமான குறிப்புகள் போன்றவற்றை எழுதி வைப்பதற்கு டயறிகள் (நாட் குறிப்புகள்) தான் பேருதவியாக இருக்கின்றன.

டயறி எழுதும் பழக்கம், காகிதம் தோன்றிய காலம் முதலே ஆரம்பமாகிவிட்டதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். 'டேயி' என்ற இலத்தீன் சொல்லில் இருந்துதான் டயறி என்ற சொல் வந்தது. கிரேக்கர்கள் டயறியை எபிமெரிடெல் என்று அழைத்தார்கள்.

உலகின் புகழ்பெற்ற டயறி சாமுவேல் பெப்ஸி என்பவர் எழுதியதாகும். இது 1633க்கும் 1703க்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகும்.

உலகில் மிக நீண்டகாலம் டயறி எழுதியவர் என்ற பெருமைக்குரியவர் பெத்தெஸ்டா நகரைச் சேர்ந்த ஜோர்ஜ் சி. எட்லர் என்பவர். இவர் தனது 11வது வயதிலிருந்து 87 வயதுவரை தொடர்ந்து 76 வருடங்கள் டயறி எழுதியுள்ளார்.

# சூரியப் பறவை

வாழ்நாளில் பெரும்பகுதியை சூரியனையே பார்த்துக்கொண்டு வாழும் பறவை இனம் ஒன்றுள்ளது. இதற்கு டெர்ன் என்று பெயர். துருவப் பகுதியில் வசிக்கும் இப்பறவையினம் கோடை முழுவதும் வடதுருவத்தில் நல்ல சூரிய வெளிச்சத்திலேயே வாழும். இருட்டைக் கண்டால் இதற்குப் பிடிக்காது. அத்துடன் சோர்வின்றி வெகுதூரம் இப்பறவை பறக்கக் கூடியது.

# மனித மூளை



* மனிதனின் சராசரி மூளை சுமார் ஒன்றரை கிலோ நிறையாக இருக்கும்.

* அளவை வைத்துப் பார்க்கும்போது பெண்களது மூளையின் அளவு, ஆண்களுடைய மூளையின் அளவைவிட சற்றுக் குறைவு. ஆனால் மூளையின் அளவுக்கும், புத்திசாலித்தனத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

* ஒரு கொரில்லாவைப் பார்க்கிலும் மனித மூளை மூன்று மடங்கு கனம். ஆனால் உடல் கனத்தில் கொரில்லா மனிதனைவிட மூன்று மடங்கு அதிகம். குதிரை, மனிதனை விட பத்து மடங்கு எடை அதிகம். ஆனால் அதன் மூளை, மனிதனுடைய மூளையில் பாதியளவு எடை ஆகும். யானையின் மூளை, மனித மூளையிலும் பார்க்க மூன்றரை மடங்கு எடை கூடியது.

* ஒரு நிமிடத்திற்கு 800 மில்லி லீட்டர் இரத்தம் மனித மூளைக்குத் தேவைப்படுகிறது. ஒரு மனிதனின் உடல் எடையில் மூளை ஐம்பதில் ஒரு பங்குதான். ஆனால் உடலுக்குத் தேவைப்படும் இரத்தம், ஒட்சிசன் ஆகியவற்றின் ஐந்தில் ஒரு பங்கை மூளையே எடுத்துக் கொள்கிறது.

* மனித மூளையின் கனம் எப்போதும் ஒரே எடையில் இருப்பதில்லை. பிறந்ததில் ஆரம்பித்து, ஒரு குறிப்பிட்ட வயது வரை மூன்று மடங்கு அதிகரிக்கிறது. அதன்பின் வருடத்திற்கு ஒரு கிராம் வீதம் குறைந்து கொண்டு செல்கிறது.

# ஏன் தெரியுமா?



இரவு வேளைகளில் பளிச் பளிச்சென மின்னிக்கொண்டு பறக்கும் மின்மினிப் பூச்சிகளைப் பார்த்திருப்பீர்கள். அந்த பளிச் பளிச் வெளிச்சம் எதனால் ஏற்படுகிறது என்று உங்களுக்குத் தெரியுமா?

மின்மினிப் பூச்சிகளின் பின்பக்கத்தில் லூசிபெரின், லூசிபெரஸ் எனப்படும் இரண்டு பொருட்கள் இருக்கின்றன. இவை காற்றில் உள்ள ஒட்சிசனுடன் சேர்ந்து பளிச் பளிச் வெளிச்சத்தை உண்டாக்குகின்றன. ஆனால் இதில் வெப்பம் உண்டாவதில்லை.

www.padippakam.com

**நெ**ற்றியிலும், முழங்கையிலும் கூட்டல் பிளாஸ்திரிகள் தெரிய- தலை கலைந்து- உடம்பெல்லாம் மண் தீற்றிய கோலத்தோடு பாரி உட்கார்ந்திருந்தான். அவனைச் சுற்றிலும் வாகீசன், பரிமளம், விமல், சொப்னா கண்ணீர் நிரம்பிய விழிகளோடு நின்றிருந்தார்கள். கிருஷ்ணன் மூலமாய் விஷயத்தைக் கேள்விப்பட்டு- மெட்டாடர் வேன் ஒன்றைப் பிடித்து- வழுக்குப் பாறை எஸ்டேட்டிலிருந்து அத்தனை பேரும் வந்து சேர்ந்திருந்தார்கள்.

வாகீசன் இதில் நிரம்பவும் தளர்ந்து போயிருந்தார். திரும்பத் திரும்ப அந்த ஒரே கேள்வியை பாரியிடம் கேட்டுக் கொண்டிருந்தார்.

**ராஜேஸ்குமாரின் கதை என்றால் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்காதல்லவா? அதனை மீண்டும் நிரூபிக்கும் விதமாக வாரா வாரம் அசுர வேகத்தில் நகரும் கதையிது:**

# நந்தினி 440 வோல்ட்

## திக் திக் திக் 08

"நந்தினிக்கு ஒண்ணும் ஆபத்தில்லையே...?"

"உள்ளே போன டாக்டர் இன்னமும் வெளியே வரலைப்பா... அவர் வந்த பின்னாடிதான் தெரியும்." பாரியும் அழுகை தெறிக்கும் குரலில் வாகீசனுக்குப் பதிலைச் சொல்லிக் கொண்டிருந்தான். பரிமளம் சேலைத் தலைப்பை வாயில் பொத்தி மெலிதாய் விசும்பிக் கொண்டிருக்க, சொப்னா தன் கையிலிருந்த சின்னஞ்சிறு பூப்போட்ட கர்ச்சீப்பால் கண்களை ஒற்றிக் கொண்டிருந்தாள். விமல் சுவரோரமாய்ப் போட்டிருந்த பெஞ்சில் சாய்ந்து உட்கார்ந்து கண்களை மூடியிருந்தான்.

கான்ஸ்டபிள் ஒருவர் அந்தக் கும்பலில் தலை நீட்டினார். "ஸார்! ஆக்ஸிடெண்ட்ல அடிபட்ட அந்தப் பெண்ணோட ஹஸ்பெண்ட் யாரு?"

"நான்தான்!"- பாரி சொன்னான்.

"உங்களை இன்ஸ்பெக்டர் கூப்பிடறார்..."

பாரி தொய்வாய் எழுந்து- அவரைப் பின் தொடர்ந்து போனான். வார்டின் ஓரத்தில் சின்னதாய் ஒரு மேஜையும் நாற்காலியும் போட்டு- கையில் டைரியோடு உட்கார்ந்திருந்த இன்ஸ்பெக்டர், பாரியைப் பார்த்து "வாங்க... உட்காருங்க..." என்றார்.

எதிரேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான் பாரி.

"உங்க பேரு...?"

"பாரி!"

"இந்த ஆக்ஸிடெண்டைப் பத்தி என்ன நினைக்கறீங்க...? தற்செயலா நேர்ந்ததுதானா?"

"தற்செயலா நேர்ந்ததுதான்."

"நீங்க வந்த கார் இதுக்கு முன்னாடி ஆக்ஸிடெண்ட் ஆகியிருக்கா...?"

"இல்லை..!"

"உங்க கார் டிரைவர் கிருஷ்ணனை விசாரிச்சுப் பார்த்ததுல- வழுக்குப்பாறை எஸ்டேட்டிலிருந்து கார் புறப்படும் போதே கார்ல 'ஜெர்க்ஸ்' வந்ததாகவும், பின்னாடி அதை சரிப்படுத்தினதாகவும் சொல்றாரே... உண்மையா....?"

"ஆமா..."

"கிருஷ்ணன் எவ்வளவு காலமா உங்க கிட்ட டிரைவரா இருக்கார்?"

"அஞ்சு வருஷமா."

"இந்தக் கார் விபத்தைப் பார்க்கும்போது ஒரு ஆக்ஸிடெண்ட் மாதிரி தோணினாலும் இந்த விபத்துக்குப் பின்னாடி ஏதாவது ப்ளான் இருக்கலாமேன்னு எம் மனசுக்குப் படுது. நீங்க என்ன நினைக்கிறீங்க பாரி...?"

"நான் அப்படி நினைக்கலை ஸார்.... என் வீட்டிற்குள்ளேயும் சரி, வெளியேயும் சரி, எனக்கு எதிரிகள் கிடையாது."

"திடீர்ன்னு கார்ல எப்படி அந்த ஜெர்க்ஸ் வரும்?"

அந்த சோகமான சூழ்நிலையிலும் புன்னகைத்தான் பாரி. "நீங்க நினைக்கிற மாதிரி இதில எந்த சதி வேலையும் கிடையாது இன்ஸ்பெக்டர். இது எதிர்பாராத விதமா நடந்த மோசமான விபத்து... டிரைவர் கிருஷ்ணனுக் குத் தெரியாம காரை யாரும் தொட்டுட முடியாது. இது ஆக்ஸிடெண்ட. அவ்வளவு தான்..."

அவன் பேசிக் கொண்டிருக்கும் போதே- ஐ.சி. யூனிட்டின் வெள்ளைக் கதவு 'ப்ளக்' கென்று திறந்தது. டாக்டர் குணசீலன் தன்னை விட ஜூனியரான டாக்டர் பிரதாப்போடு வெளிப்பட்டார். உடுத்தியிருந்த வெள்ளைக் கோட்டில் ஆங்காங்கே... இரத்தத் தீற்றல்கள். முகத்தில் சோர்வு தெரிந்தது.

பாரி இன்ஸ்பெக்டரிடம் ஒரு 'எக்ஸ்க்யூஸ்மீ'யைச் சொல்லிவிட்டு- வேகமாய் டாக்டரை நெருங்கினான்.

"டாக்டர்.."

குணசீலன் அவரை ஏறிட்டார்.

"நீங்கதானே அந்தப் பெண்ணோட ஹஸ்பெண்ட்...?"

"ஆமா டாக்டர்."

"உங்க ஆங்க்சைட்டி எனக்குப் புரியுது... உங்க ஒய்ஃப்போட கண்டிஷன் ரொம்பவும் க்ரிடிகல். ரேர் ப்ளட் க்ரூப். AB RH நெகடிவ். இந்த ப்ளட் க்ரூப் உங்க ஃபேமிலியில யாருக் காவது இருக்கா...?"

பாரி தலையாட்டினான்.

"நோ... டாக்டர்."

"ப்ளட் பாங்க்லயும் அந்த க்ரூப் ப்ளட் கிடையாது. மத்த ஹாஸ்பிடல்ஸுக்கும் தகவல் கொடுத்திருக்கோம்... உங்க ஒய்ஃப்போட அதிர்ஷ்டம் அந்த க்ரூப் ப்ளட் கிடைக்கணும்."

டாக்டர் குணசீலன் சொல்லிக் கொண்டே நடந்தார்.

பாரி உடைந்துபோய் நின்றான்.

குணசீலன் அயர்ச்சியாய் தன் அறைக்குள் நுழைந்து நாற்காலியில் சாய- பின்னால் வந்த டாக்டர் பிரதாப் எதிரே உட்கார்ந்தார்.



"என்ன டாக்டர், ஃபேர்தர் ஸ்டெப்ஸ்...?"

"அந்த க்ரூப் ப்ளட் கிடைக்காம நாம் என்ன ஸ்டெப்ஸ் எடுத்தாலும் ஃபெய்லியர்தான் பிரதாப். அதுவும் அந்த ப்ளட் டூ அவர்ஸ்ல கிடைக்கணும்!"

"பேதடிக்...."

சொன்ன பிரதாப், மேஜையின் மேலிருந்த அந்த ஃபைலை எடுத்து மெல்ல புரட்டினான். குணசீலன் சிகரெட் பாக்கெட்டுக்காக கோட் பார்கெட்டைத் தடவிக் கொண்டிருக்க, பிரதாப் திடீரென்று முகம் பிரகாசமாகிக் கை யைச் சொடுக்கினான்.

"டாக்டர்...!"

"என்ன பிரதாப்...?"

"வீ... காட் இட் டாக்டர்..."

"என்ன...?"

"இது இன்னிக்கு காலையில அட்மிட்டான வீரபத்ரனோட ஃபைல்தானே...?"

"எஸ்...?"

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

"அவனோட ப்ளட் குரூப்பை நீங்க எப்படி மறந்தீங்க டாக்டர்? AB-RH நெகடிவ்ன்னு அழகா டைப் பண்ணியிருக்கீங்க...?"

உதட்டில் சிகரெட்டைப் பொருத்திக் கொண்டிருந்த டாக்டர் குணசீலன் விருட்டென்று எழுந்தார். நெற்றியில் 'த்த்ட்'. டென்னு அறைந்து கொண்டார். 'சை! எப்படி மறந்தேன்...?' நாற்காலியை 'டர்ர்ர்'ரென்று பின்னுக்கு இழுத்துவிட்டு வெளியே வந்தார்.

"பிரதாப்..."

"டாக்டர்...!"

"வீரபத்ரனை மயக்கத்துக்கு உட்படுத்தாமே ப்ளட்டை எடுக்க முடியாது... ப்ளீஸ் கைண்ட்லி டேக் நெசசரி ஸ்டெப்ஸ்....'சை...! எப்படி இது ஞாபகத்துக்கு வராமல் போயிற்று...?' பிரதாப்... ஐ மஸ்ட் தாங்க் யூ... சீக்கிரமா ஏற்பாடு பண்ணுங்க..."

"டாக்டர்..."

பிரதாப் தயக்கமாய்க் கூப்பிட குணசீலன் நின்றார்.

"என்ன பிரதாப்..?"

"வீரபத்ரன் பொலிஸ் கஸ்டடியில இருக்கிற பேஷண்ட்... அவங்க பர்மிஷன் இல்லாமே.... எப்படி... ப்ளட் கலெக்ட் பண்ண முடியும்...?"

"அந்த பர்மிஷனையெல்லாம் நான் பார்த்துக்கிறேன்... பிரதாப்... ப்ளீஸ் யூ டூ... வாட் ஐ ஸே..."

"எஸ் டாக்டர்..."

"வேணும்ங்கிற அட்டெண்டர்ஸைக் கூப்பிட்டுக்குங்க... செடட்டிவ் கொடுத்து கேர்புலா ப்ளட் கலக்ட் பண்ணுங்க.. நான் ஆப்ரேஷனுக்கு ஏற்பாடு பண்றேன்."

குணசீலன் ஆப்ரேஷன் தியேட்டரை நோக்கிப் போக- பிரதாப் வீரபத்ரன் இருந்த செல்லை நோக்கிப் போனான்.

வராந்தாவில் போய்க்கொண்டே எதிர்ப்பட்ட- ஆர்டர்லிகளையும், அட்டெண்டர்களையும் சேகரித்துக் கொண்டான்.

நர்ஸுகளுக்கு இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்தபடியே வீரபத்ரன் இருந்த செல்லுக்கு முன்னால் வந்து நின்றான்.

உள்ளேயிருந்து ஆக்ரோஷமாய் வீரபத்ரனின் சீறல் கேட்டது.

"என்ன வெளியில விடுங்க... அவங்க ரெண்டு பேரையும் வெட்டித் தள்ளணும். கண்டதுண்டமா வெட்டிப் போடணும்... டேய்... நான் உங்களை விடமாட்டேன்...!"

பிரதாப் தன்னைச் சுற்றிலும் நின்றிருந்த ஆர்டர்லிகளைப் பார்த்தபடி சொன்னான்: "கதவைத் திறந்த உடனே அவன் வெளியே ஓடி வருவான்... ஒரே அமுக்கா அமுக்கி அவனை மல்லாத்தணும்... அசைய விடாமே பிடிச்சுக்கணும்... நான் இன்செக்ஷன் போட்டு ரெண்டு மூணு நிமிஷம் கழிஞ்ச பின்னாடிதான் அவனை விடணும்..."

"எஸ் டாக்டர்...." பிரதாப் கதவைத் திறந்தான்.

(தொடர்ந்து வரும்)

---

**உலகம் எங்கும் ஒடுக்கும் கரங்களுடன் கைகுலுக்குவதும் ஒடுக்குமுறையாளர்களை போற்றிப் புகழ்வதும் பொம்மைத் தலைவர்களை உருவாக்குவதுமே அமெரிக்காவின் மரபு! கியூபா புரட்சியிலும் அமெரிக்கா வாலாட்டியது. அதில் ஒரு பகுதி இது...**

# எந்தப்பாதையில் முன்னேறுவது?

"**போ**ராட்ட முறைகளைப் பற்றி எங்களது இயக்கத்துக்குள்ளேயே இரண்டு வேறுபட்ட நிலைகள் இருந்தன. மற்றப் பகுதிகளுக்கும் கெரில்லா இயக்கத்தை விரிவுபடுத்தி தொடர்ச்சியான ஆயுதப் போராட்டத்தின் மூலமாகக் கொடுங்கோலனின் இராணுவத் தளங்களை நிர்மூலமாக்குவது என்ற நிலையை சியாரா மாய்ஸ்ட்ராவிலிருந்த கெரில்லாக்கள் ஆதரித்தனர். சமவெளிகளில் போராடிக் கொண்டிருந்தவர்கள் மாறுபட்ட நிலையை ஆதரித்தனர். எல்லா நகரங்களிலும் எதிர்ப்பு இயக்கங்களைக் கட்டினால், அது கடைசியில் ஒரு பொதுப் போராட்டமாக விசுவரூபம் எடுத்து வெறுப்புக்குரிய கொடுங்கோலன் பாடிஸ்டாவின் ஆட்சியை வீழ்த்திவிடும் என்று அவர்கள் கருதினர்.

முதன் முதலாகப் பார்க்கிறபோது, எங்களது நிலையைக் காட்டிலும் இது மிகவும் புரட்சிகரமானதாகத் தோன்றும். ஆனால் யதார்த்தத்தில், பொது வேலை நிறுத்தத்திற்கான யோசனைகளை நடைமுறைப்படுத்துவது இயக்கத்தின் வீச்சுக்கு அப்பாற்பட்ட காரியமாக இருந்தது. இந்த நிலையை ஆதரித்தோர் அவ்வளவாக அரசியலில் முதிர்ச்சி பெற்றிருக்கவில்லை.

இந்த இரண்டு கருத்துக்களையும் ஆதரிப்பவர்கள் ஜூலை 26 இயக்கத்தில் சம அளவில் இருந்தனர். போராட்ட காலத்தில் இந்தச் சமபல நிலையில் ஏற்றம் இறக்கம் ஏற்பட்டுக்கொண்டே இருந்தது..."

இந்தப் பிரச்சனையைப் பற்றி, 1968 ஏப்ரல் 9ம் திகதி சாக்குவாயாகிரன் கடலில் பேசுகிறபோது பிடல் தன் கருத்தைக் கூறினார்:

"நாங்கள், சியாரா மாய்ஸ்ட்ராவிலிருந்து ஆரம்பித்திருந்த போராட்டத்தின் இயல்பின் காரணமாகவும், கெரில்லாப் படைகள் நடத்திய வீரஞ்செறிந்த போராட்டத்தின் விளைவாக இறுதி வெற்றி கிட்டியது என்பதாலும் நீண்ட காலத்திற்கு எல்லோரது கண்களும் எங்கள் மீதே பதிந்திருந்தன; மலைகளில் இயங்கிய கெரில்லா இயக்கத்தையே எல்லோரும் அங்கீகரித்தனர்; எல்லோரும் எங்களையே போற்றிப் புகழ்ந்தனர். இதனால், குறிப்பிடத்தக்க அளவுக்கு தலைமறைவுப் புரட்சி இயக்கத்தின் பாத்திரம் முக்கியத்துவம் பெறாமல் போய்விட்டது; மோசமான சூழ்நிலைகளில் போராடித் தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்த ஆயிரக்கணக்கான இளைஞர்களின் வீரம் செறிந்த பாத்திரம் மக்களது கவனத்தைக் கவராமல் போய்விட்டது.

எங்களது புரட்சிகர இயக்கத்தின் வரலாற்றில் ஆரம்பக் கட்டங்களில் எங்களது பாதை எது என்று அறிந்து கொள்ள நாங்கள் திணறியிருக்கிறோம். எல்லாப் புரட்சிகர இயக்கங்களுக்கும் குறிப்பாக புதிய வரலாற்றுச் சூழ்நிலையில் போராடும் இயக்கங்களுக்கு இது போன்ற தெளிவின்மை ஏற்படவே செய்யும். தலைமறைவுப் போராட்டமா? கெரில்லா யுத்தமா மக்களது நம்பிக்கையை அதிகரிக்கவும், புரட்சி நெருப்பைக் கொழுந்துவிட்டு எரியச் செய்யவும் கெரில்லா இயக்கம் அவசியம் என்று ஏற்றுக் கொண்ட பல புரட்சிக்காரர்கள் பொதுமக்கள் எழுச்சியின் மூலமாகத்தான் சர்வாதிகாரி வீழ்த்தப்படுவான் என்று நம்பினர் என்பதில் சந்தேகமே இல்லை.

ஆயினும் பல்வேறு கருத்துக்களும், கண்ணோட்டங்களும் நிலவும் ஒரு புரட்சிகர இயக்கத்தில்-அப்படிப் பல்வேறு கருத்துக்களும், கண்ணோட்டங்களும் நிலவுவது இயல்பானது, தர்க்க ரீதியானது என்று நாங்கள் கருதுகிறோம்- 'நான் சொல்வது தான் சரி' என்று எவராலும் நிலை நிறுத்த முடியாது என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூறவிரும்புகிறேன்.

நாங்கள், எங்கள் தரப்பில் கெரில்லா இயக்கத்தின் வெற்றிதான் என்ற கருத்து நிலையை ஏற்றுக் கொண்டிருந்தோம். ஆனால், எதிரிகளின் படைகளை வெற்றி கொள்ளும் அளவுக்குக் கெரில்லா இயக்கம் வலுப்பெறும் முன்னரேயே ஏதேனும் ஒரு நகரத்தில் பொதுமக்கள் எழுச்சி வெற்றி பெறுமானால், நாங்கள் உடனேயே அதை ஆதரிக்கத் தயாராகவும் இருந்தோம்.

ஒரு புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கில் நாம் பல்வேறு மாற்று வழிகளைச் சந்திக்க நேரும். அப்போது நாம் ஒவ்வொரு பாதையையும் பயன்படுத்திக் கொள்வதற்குத் தயாராய் இருக்க வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன்."

புரட்சியின் கடமைகளைப் பற்றியும், இலக்குகளைப் பற்றியும் சரியான கண்ணோட்டத்தோடு கெரில்லாப் படை வீரர்கள் மலைகளிலும், சமவெளிகளிலும் வீரஞ்செறிந்த போராட்டத்தை நடத்தினர். எதையும் எதிர்கொள்ளும் புரட்சிகர உணர்வு அவர்களில் வேரூன்றி வளர்ந்து வந்தது.

வெற்றிக்குப் பின்னர் பிடலின் தலைமையில் ஒரு ஐக்கியப் புரட்சிக் கட்சியை நிறுவவும் அவர்கள் போராடினர். ஜூலை 26 இயக்கத்தினர், மாணவர்கள் அமைப்புக்களுடனும், கியூபாவின் பார்டிடோ சோஷலிஸ்டா பாப்புலர் கட்சியுடனும் சேர்ந்து ஒருங்கிணைப்பு முயற்சியில் ஈடுபட்டனர். இந்த முயற்சிகளின் விளைவாக ஐக்கிய போராட்ட முன்னணி உருவாகியது.



அமெரிக்கா பாடிஸ்டாவுக்கு அளித்து வந்த நிதியுதவி, அரசியல் உதவி, இராணுவ உதவி ஆகியவற்றின் காரணமாகப் புரட்சியின் வெற்றி தாமதப்பட்டது.

அரசியல் ரீதியாகக் கொடுங்கோலன் தனிமைப்பட்டுக் கொண்டிருந்தபோதும் அமெரிக்க அதிகார வட்டாரங்கள் அவனைத் தொடர்ந்து ஊக்குவித்துக் கொண்டிருந்தன.

1958 மார்ச் மாதம் பாடிஸ்டாவுக்கு, இனி ஆயுத சப்ளை செய்யப்போவதில்லை என்று அமெரிக்கா அறிவித்தபோதும், உண்மையில், தொடர்ந்து பெட்ரோலியக் குண்டுகளையும், ஏவுகணைகளையும் சப்ளை செய்து கொண்டிருந்தது. புரட்சிக்காரர்கள் மீது குண்டுமழை பொழிந்த பாடிஸ்டாவின் விமானங்கள்ருவாண்டா நாமாவில் இருந்த அமெரிக்கா இராணுவத் தளத்தில் இறங்கி 1958ம் அண்டின் இறுதிவரை, எரி பொருள் நிரப்பிக் கொண்டன: ஆயுதங் கள் ஏற்றிக் கொண்டன. கியூபாவில் இருந்த தனது இராணுவ ஆலோசகர் களைத் திருப்பி அழைக்க அமெரிக்கா மறுத்தது.

கியூபாவில் உள்நாட்டு யுத்தம் வெடிக்குமானால், தனது இராணுவ ஆலோசகர்களை அமெரிக்கா திருப்பி அழைத்துக் கொள்ளும் என்ற ஒப்பந்தத்தை மீறி, அமெரிக்க இராணுவ ஆலோசகர்கள் பாடிஸ்டாவுக்கு வலது கரமாய் இருந்து கொடுமைகளை முடுக்கி விட்டுக் கொண்டிருந்தனர்.

வோஷிங்கடனின் உளவுத் துறை விஷமத்தனமான காரியங்களைச் செய்து கொண்டிருந்தது. அது ஆட்டுவித்தபடியெல்லாம், பாடிஸ்டாவின் பொலிசும், இராணுவமும் ஆடிக்கொண்டிருந்தன.

தனது 'ஹவானா ஏஜெண்டை'க் காப்பாற்ற முடியாது என்று கண்டு கொண்ட அமெரிக்கர்கள் பாடிஸ்டா வின் இடத்தில் பாடிஸ்டாவைப் போன்றே, தாங்கள் காலால் இட்டதை தலையால் செய்யக் கூடிய மற்றொரு பொம்மையை அமர்த்தி விடலாம் என்று நம்பிக் கொண்டிருந்தனர்.

சட்டவிதிகளின்படி, 1958 இறுதியில் புதிய ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெறும் என்று பாடிஸ்டா அறிவித்தான். அவன் தனது பிரதம மந்திரியான ரிவா அகுவேராவைத் தேர்தலில் நிறுத்தி வைத்தான். இத்தகைய 'தேர்தல்'களில் பிற்போக்காளர்களே 'வெற்றி பெறுவார்கள்' என்பதில் சந்தேகமே இல்லை.

பிடல் காஸ்ட்ரோவும், அவரது ஆதரவாளர்களும் நெளிவுசுழிவான அரசியல் உத்தியைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

சந்திரசேகர் 'சினிமா புயல்' பத்திரிகையில் வந்திருந்த அந்தக் கட்டுரையை முழுவதுமாக வாசித்தான்.

அவன் வாசித்து முடிப்பதற்காக அருகில் நின்றபடியே காத்திருந்தார் சாரி. படித்து முடித்துவிட்டு பத்திரிகையை அவரிடம் திரும்ப நீட்டினான்.

"என்ன தம்பி எதுவும் சொல்லலையே..."

"ஏதாச்சும் அக்கப்போர் பண்றதே பத்திரிகைகளுக்கு வேலையாப் போயிடுச்சி."

"அப்போ இதை நீங்க அலட்சியப் படுத்தறீங்களா?"

"வேற என்ன செய்யறது? சினிமால பாபுலரா இருந்தா, இப்படித்தான் ஏதாச்சும் புரளி கிளப்பி விட்டுக்கிட்டிருப்பாங்க சார்."

"தம்பி, தன்னோட இமேஜை பாதிக்கிற விஷயங்களையும் அந்தப்பொண்ணு உங்ககிட்ட சொல்லியிருக்கா?"

"சொல்லியிருக்கா சார். சரி, நீங்க வேஷம் போட்டுக்கிட்டு நேர்ல பார்த்துப் பேசிட்டு வந்து அவளைப்பத்தி நல்ல விதமாத்தானே உயர்வா எடுத்துச் சொன்னீங்க? இப்ப ஏன் இப்படி உங்களுக்குச் சந்தேகம்?"

"தம்பி, நான் ஒரே ஒரு தடவைதான் பார்த்தேன். பேசினேன். அதுக்குள்ள எவ்வளவு தூரம் புரிஞ்சுக்க முடியும்? இதில ஃபோட்டோ எல்லாம் போட்டு எடுத்திருக்கிறதாலதான், இருக்குமோன்னு சந்தேகம் வந்துடுச்சி. தம்பி உங்களுக்கு அந்தப் பொண்ணு எப்பவாவது லெட்டர் எழுதியிருக்குதா?"

"எத்தனையோ லெட்டர்ஸ் எழுதியிருக்கு சார்."

"அதில ஏதாவது இப்ப உங்ககிட்ட இருக்கா?"




27

"எதுக்கு கேக்கறீங்க?"

"முதல்ல இருக்கான்னு சொல்லுங்க?"

"இருக்கு"

"எடுங்க முதல்ல!"

அவரைப் புதிராகப் பார்த்துவிட்டு, சந்திரசேகர் சாவி போட்டு மேஜை டிராயரைத் திறந்து ஒரு மடக்கப்பட்ட கடிதத்தைத் தேடி எடுத்தான்.

"இதுதான் மதுமிதா எனக்கு எழுதின முதல் கடிதம். அதனால அடிக்கடி எடுத்துப் படிச்சிப் பார்த்துக்கறேன். நீங்க இதைப் படிக்கறதைப் பத்தி எனக்கு எந்த அப்ஜெக்ஷனும் இல்லை. குறும்புத்தனமா நிறைய எழுதியிருக்கா. இதெல்லாம் படிச்சு நெளியக்கூடாது."

"ராமா! ராமா! நான் இந்த லெட்டரைப் படிச்சிப் பார்க்கறதுக்காகக் கேக்கலை."

"பின்னே?"

"வெரிஃபை பண்றதுக்குத்தான் கேட்டேன்."

"என்ன வெரிஃபை செய்யறதுக்கு?"

"இந்தக் கட்டுரையில மதுமிதா தன் கைப்பட அந்த வெங்கடரெட்டிக்கு எழுதின கடிதத்தையும் போட்டிருக்காங்க, கவனிக்கலையா? டிராயர்ல லென்ஸ் இருக்கு பாருங்க. அதை எடுங்க. பெரிசு பண்ணிப் பாருங்க. கையெழுத்து ஒரே மாதிரி இருக்கான்னு பாருங்க."

"சார்! அது சும்மா வாசகர்களை நம்ப வைக்கிறதுக்காக செட்டப் லெட்டர் சார்! இப்படி சரி பார்க்கறதே மதுமிதாவை அவமானப்படுத்தறதா நினைக்கறேன் சார்."

"ரொம்ப உணர்ச்சி வசப்படாதீங்க தம்பி. அது செட்டப் லெட்டர்தான், அதுல உள்ளது மதுமிதாவோட கையெழுத்தே இல்லைன்னு ஊர்ஜிதம் செய்யறதுக்காகவாவது பார்க்கக்கூடாதா?"

"தம்பி, தப்பா நினைக்காதீங்க. நடிகைகளைப் பற்றி கிசுகிசு எழுதாத பத்திரிகையே கிடையாதுன்னு ஆயிருச்சி. ஆனா இது கல்யாண விஷயம். ஃபோட்டோ, லெட்டர்னு ஆதாரத்தோட வெளியிட்டி ருக்காங்க."

"இதையெல்லாம் நம்பச் சொல்றீங்களா?"

"ஒரு சந்தேகம் கூட ஏற்படலையா உங்களுக்கு?"

"இல்லை."

"ஏன்?"

"மதுமிதாவை நான் அவ்வளவு நம்புறேன். அவ வாழ்க்கையில நடந்த அத்தனை விஷயங்களையும் என்கிட்ட மனசு விட்டுப் பேசியிருக்கா. எதையுமே மறைச்சதில்லை. அதனாலதான் சொல்றேன்! அவ வாழ்க்கையில இதில எழுதியிருக்கிற மாதிரி ஒரு இரகசிய கல்யாணம் நடந்திருக்க வாய்ப்பே இல்லை சார்."

"லலிதா-பத்மினிக்கு சகல லக்ஷணங்களையும் கொடுத்திருக்கும் கடவுள் அவர்களுக்கு சிவந்த மேனியைக் கொடுத்திருக்கிறாரா? (கறுப்பு-வெள்ளை படங்களில் நிறம் தெரியாததால் கேட்கிறேன்)"

"கவலை வேண்டாம். அவர்கள் அசல் பசும் பொன்னிறப் பதுமைகள் போலிருக்கிறார்கள்."

– ஒரு கேள்வியும் பதிலும்– 'கலை' செப்டெம்பர் 1949 இதழில்.

"நீங்க ரொம்பத்தான் தொல்லை பண்றீங்க சாரி சார்," என்றபடி லென்ஸை எடுத்து அவரிடம் கொடுத்தான். "நீங்களே பாருங்க!"

"முதல்வரி மட்டும் பார்க்கறேன்."

புத்தகத்தை விரித்து வைத்துக்கொண்டு, அந்த முதல் கடிதத்தின் முதல் வரி மட்டும் தெரியும்படி மடக்கி வைத்துக் கொண்டு, லென்ஸைப் பிடித்து எழுத்துக்களைப் பெரிதுபடுத்தி கண்களை இடுக்கி உன்னிப்பாகப் பார்க்கத் துவங்கினார் சாரி.

புத்தகத்தில் இடம்பெற்றிருந்த அந்தக் கடிதத்தை முதலில் வரிவரியாகப் படித்தார்.

'அன்பரே,'

*உங்கள் ஆசைக் கடிதம் பார்த்து முதலில் அதிர்ச்சியும், பிறகு வியப்பும் மேலிட்டது. அதிர்ச்சி- உங்களிடமிருந்து அப்படி ஒரு கடிதம் எதிர்பார்க்காததால்! வியப்பு- என் மனதில் ஓடிக்கொண்டிருக்கும் அதே எண்ணங்களை நீங்கள் வார்த்தையாக்கியிருப்பதால்!*

*மேற்கொண்டு உங்கள் விருப்பத்தைப் பற்றி பெரியவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். என் அம்மாவிடம் பேசுங்கள்.*

தங்கள், மதுமிதா.

பிறகு சந்திரசேகர் கொடுத்த அந்த கடிதத்தில் முதல்வரியைப் படித்துப் பார்த்தார்.

*'அன்புள்ள சந்துரு, இந்தக் கடிதம் உங்களை அதிர்ச்சி அடைய வைக்கலாம்.'*

இரண்டிலும் இடம்பெற்றுள்ள வார்த்தைகள் என்னென்ன என்று பார்த்தார்.

'கடிதம்!'

'அதிர்ச்சி!'

இந்த இரண்டு வார்த்தைகளும் இரண்டிலும் இருந்தன. இப்போது இந்த இரண்டு வார்த்தைகளை மட்டும் மாறி மாறி கூர்ந்து பார்த்தார்.

"என்ன சார் இவ்வளவு நேரம் பார்க்கறீங்க? ஒரு பொலிஸ்காரன் கூட இப்படி

## பட்டுக்கோட்டை பிரபாகர்

பார்க்க மாட்டான் போலிருக்கு!"

"தம்பி. இது உங்க வாழ்க்கைப் பிரச்சனை. என்னை நீங்க வெறும் ஸ்டாஃபா மட்டும் நினைச்சி பழகிட்டு இருந்தா அலட்சியமா இருந்துடுவேன். உங்கமேல எனக்கு அக்கறை இருக்கிறதாலதான் சட்டுன்னு ஒரு முடிவுக்கு வர முடியாம தவிக்கிறேன்."

"சரி, பாத்தீங்களே என்ன ஆச்சு?"

"இதுல கடிதம், அதிர்ச்சி இந்த ரெண்டு வார்த்தைகளை மட்டும் நல்லா ஒப்பிட்டுப் பாருங்க தம்பி. எனக்கென்னவோ இது ரெண்டும் ஒரே கையெழுத்தாப்படுது."

"கொண்டாங்க நான் பார்க்கறேன்."

சந்திரசேகர் லென்ஸை அவரிடமிருந்து வாங்கிக்கொண்டு அந்த வார்த்தைகளை ஆராய்ந்து பார்த்தான்.

"ஒரே மாதிரித்தான் தெரியுது சார். ஆனா செக்லயே ஒரே மாதிரி கையெழுத்தைப் போட்டு மோசடிகள் சகஜமா நடந்திட்டிருக்கு. மதுமிதாவோட கையெழுத்து ஒன்றும் கிடைக்க முடியாத ஒண்ணு இல்லை. இந்தப் பத்திரிகை ஆபீசுக்கு வேற ஏதாவது



ஒரு சந்தர்ப்பத்தில மதுமிதா லெட்டர் எழுதியிருக்கலாம். அதிலேர்ந்து கையெழுத்தைப் பார்த்து அதே மாதிரி செட்டப் செஞ்சிருக்க்லாம்."

"அப்ப இந்த ஃபோட்டோ?"

"அதுவும் சுலபமா செட்டப் செய்யலாமே சார்..."

"எப்படித்தான் உங்களால் கொஞ்சம் கூட சந்தேகப்படாம இப்படிப் பேச முடியுதோ...!"

சிரித்தபடி நாற்காலியைப் பின்னால் தள்ளி எழுந்தான் சந்திரசேகர். "அதான் சார் நான் அவமேல வெச்சிருக்கிற அசைக்க முடியாத நம்பிக்கை. இந்தக் கட்டுரையைப் படிச்சுட்டு பாவம் அவ பதறிப் போயிருப்பா. நான் மதுமிதாவைப் பார்த்துப் பேசிட்டு வந்துடறேன்!" என்றான்.

மௌனமாகத் தலையை அசைத்தார் சாரி.

◊ ◊ ◊

தலைத் தள்ளிக்கொண்டு சந்திரசேகர் மதுமிதாவின் ஸ்பெஷல் வார்டு அறைக்குள் வந்ததும் சிந்தனையோடு நடைபழகிக் கொண்டிருந்த மதுமிதாவின் முகம் பிரகாசமாகியது.

"வாங்க சந்துரு. உங்களுக்கு ஃபோன் பண்ணியிருந்தேன்."

"தெரியும்."

"சினிமா புயல் பத்திரிகையில..."

"படிச்சேன். உனக்கு கால் எப்படி இருக்கு?"

"ஒரு அடி எடுத்து வைச்சாலே வலி உயிர்போகும். இப்ப மெதுவா இந்த மாதிரி நடக்க முடியுது சந்துரு. அஞ்சி நிமிஷத்துக்கு மேல நடந்தாத்தான் வலிக்குது."

"இப்ப நான் டாக்டரைப் பார்த்துட்டுத்தான் வர்றேன். நல்ல இம்ப்ருவ் ஆயிட்டிருக்கிறதாச் சொன்னார். அதுசரி உனக்கும் அந்தப் பத்திரிகைக்கும் ஏதாச்சும் தகராறா? ஏன் இப்படி எல்லாம் அபாண்டமா எழுதியிருக்கான்?"

அவன் இப்படிக் கேட்டதும் ஏற்பட்ட நெகிழ்ச்சியில் அவள் கண்கள் கலங்கித் ததும்பின.

"ஏய்! என்ன இது... எதுக்கு அழறே?"

"யூ ஆர் கிரேட் சந்துரு! அந்தக் கட்டுரையைப் படிச்சிட்டு நீங்க என் மேல சந்தேகப்படுவீங்களோன்னு கவலையா இருந்திச்சி."

நாற்காலியில் அமர்ந்து, "அசடு! யார் வேணாலும் சந்தேகப்படட்டும். நான் சந்தேகப்படுவேனா? நான் உன்னை பரிபூரணமா புரிஞ்சு வெச்சிருக்கேன் மது. அந்த ஃபோட்டோ செட்டப் ஃபோட்டோதானே?" என்றான்.

"ஆமாம். நான் எப்பவோ ஒரு படத்தில கல்யாண சீன்ல நடிச்ச ஸ்டில்லுல இந்த மாதிரி வேற தலையை ஒட்டி விஷமம் செஞ்சிருக்காங்க."

"யாரு அந்த வெங்கடரெட்டி?"

"தெரியலை. ஆனா இந்த சதி நாடகத்தை அந்த வெங்கடரெட்டி தானா நடத்தலை. பின்னாடி இருக்கிற சூத்திரதாரி எங்கம்மா!"

"என்ன சொல்றே?" என்றான் அதிர்ச்சியுடன்.

மதுமிதா தன் அம்மாவுடன் நடத்தின தொலைபேசி உரையாடல்களை அப்படியே சொன்னாள்.

"உங்கம்மாவைப் பத்தி நீ ஏற்கனவே சொன்னதை வெச்சி அவங்க 'தாய்' அப்படீன்ற சொல்லுக்குத் தகுதியே இல்லாதவங்கன்னு ஒரு அபிப்பிராயத்தில இருந்தேன். இப்போ அவங்க நடந்துட்டிருக்கிற கேவலமான நடவடிக்கையைப் பார்க்கறப்போ அவங்களை ஒரு மனுஷின்னு கூட சொல்ல முடியாது போலிருக்கு. மது, இதுக்கு ஒரு பதிலடி நாம கொடுக்கலாம்!" என்றான் உணர்ச்சி பூர்வமாக சந்திரசேகர்.

(தொடரும்)

---

கவியரசு கண்ணதாசனின் வாழ்க்கை
அனுபவம் நிறைந்த புத்தகம்!
அந்தப் புத்தகத்தின் சில பக்கங்களை
நன்கு அறிந்தவர்
அவரது உதவியாளராக இருந்த
இராம–கண்ணப்பன்.
அவர் எழுதியதில் இருந்து.....

## நில்–கவனி–முன்னேறு

இலக்கணம் கூறும் பத்துக் குற்றங்களில் ஒன்று மயங்க வைத்தல். அந்தக் குற்றம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் மிகவும் கவனம் செலுத்துவார் கவிஞர். அப்படி இருந்தும் அந்த மயக்கம் அவரை மீறியதும் உண்டு.

ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களில் நமக்குத் தெரிந்த வரையில் நான்கு பாடல்களில்தான் இந்த 'மயங்க வைத்தல்' குற்றம் காணப்படுகிறது. மேலும் இருக்கலாம்; ஆராய்வாளர்கள்தான் சொல்ல வேண்டும்.

*'தங்கத்திலே ஒரு குறை*
*இருந்தாலும் தரத்தினில்*
*குறைவதுண்டோ'*

–என்ற பாட்டுதான் முதன் முதலில் சர்ச்சைக்கு இலக்கானது. அடுத்து,

*'மேகம் குவிந்ததம்மா*
*மின்னல் வரப்*
*போகுதம்மா மோதும்*
*இடி முழக்கம்*
*முன்னோடி*
*வந்ததம்மா'*

–என்பது.

'மேகம் குவியும், மின்னல் மின்னும், இடி முழக்கம் இதுதான் சரி. மின்னலுக்கு முன்னால் இடி முழக்கம் என்று பாடி இருக்கிறீர்களே! இது மயக்கம்தானே?' என்ற சர்ச்சை. இதனையடுத்து,

*'சின்னச் சின்ன*
*ஊரணியாம் தேன்*
*மணக்கும்*
*சோலைகளாம்*
*ஊரணியின்*
*கரையினிலே ஓங்கி*
*நிற்கும் மாமரமாம்*
*மாமரத்துக்*
*கிளைகளிலே*
*மாடப்புறாக்*
*கூடுகளாம்!'*

'மாடத்தில் கூடு கட்டுவதால்தான் புறாவிற்கு 'மாடப்புறா' என்று பெயர் வந்தது. அது எப்படி மாமரத்தில் கூடு கட்டும்?' என்று பாடல் வெளிவந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு, சர்ச்சையைக் கிளப்பினார் மு. கருணாநிதி.

ஒரு கல்லூரி மாணவர் மு.க.வின் கேள்விக்கு, 'கதையின்படி மாடத்தில் வாழ வேண்டிய குழந்தை மண் குடிசைக்கு வந்து விட்டது; மண் குடிசையில் இருக்க வேண்டிய குழந்தை மாடத்துக்கு வந்துவிட்டது. அதைத்தான் கவிஞர் இப்படி உவமித்திருக்கிறார். இடம் நோக்கிப் பொருள் கொண்டால் தவறில்லை!' என்று பதில் எழுதினார்.

இதற்கு சில ஆண்டுகளுக்குப் பிறகு, 'பெரிய இடத்துப் பெண்' என்ற படத்தில் இடம்பெற்ற ஒரு பாட்டு.

பச்சை பசேலெனும் வயல் வெளியில் தென்றல் தழுவ நடந்துவரும் ஒரு கிராமத்துக் காதலியும், அவளது தோழியும் இயற்கை எழிலை இரசித்துப் பாடுவதாக அமைந்தது.

*'கட்டோடு குழலாட ஆட–ஆட*
*கண்ணென்ற மீனாட ஆட–ஆட*
*கொத்தோடு நகையாட ஆட–ஆட*
*கொண்டாடும் மயிலே நீ ஆடு!*

*முதிராத நெல்லாட ஆட–ஆட*
*முளைக்காத சொல்லாட ஆட–ஆட*
*உதிராத மலராட ஆட– ஆட*
*சதிராடு தமிழே நீ ஆடு!'*

–என்று அவர்கள் பாடி முடித்ததும், அந்த காதலியின் காதலன் திடீரென்று எதிர்ப் பாட்டு பாடுகிறான்:

*'தென்னை மரத்*
*தோப்பாகத் தேவாரப்*
*பாட்டாகப் புன்னை*
*மரம் பூச்சொரிய*
*சின்னவளே நீ ஆடு'*

–என்று தொடர்ந்து;

*'கண்டாங்கி முன்னாட*
*கன்னிமனம் பின்னாட*
*கண்டு கண்டு நானாட*
*செண்டாக நீயாடு!*
*பச்சரிசி பல்லாட*
*பம்பரத்து நாவாட*
*மச்சானின் மனமாட*
*வட்டமிட்டு நீ ஆடு!'*

–என்ற இந்த சரணத்தில் உள்ள மயக்கத்தை கவிஞரும் அறியவில்லை. இதனைக் கேட்டு இரசித்த பலகோடி தமிழர்களும் அறியவில்லை. 'சதிரோடு தமிழே நீ ஆடு' என்ற கவிஞரின் தமிழ்ச் சதுரைக் கேட்டு மயங்கி, மயக்கத்தை உணரவில்லை.

ஆனால் ஒரே ஒரு கல்லூரி மாணவர் மட்டும் பல ஆண்டுகளுக்குப் பின் இது குறித்து கவிஞருக்குக் கடிதம் எழுதினார்.

'பச்சரிசி பல்லாட...' என்று எழுதி இருக்கிறீர்களே, 'படத்தில் இளம் பெண்ணைத்தான் காதலியாகக் காட்டுகிறார்கள். கிழவியை அல்ல. கிழவிக்குத் தானே பல்லாடும். இளம் பெண்ணுக்கு எப்படி பல்லாடும்?' என்று கடிதம் எழுதி விளக்கம் கேட்டிருந்தார்.



அப்போதுதான் கவிஞருக்கும் அந்தத் தவறு புரிந்தது. அந்தக் கல்லூரி மாணவரை வெகுவாகப் பாராட்டி, 'நீங்கள் குறிப்பிட்டுள்ள படி 'பச்சரிசிப் பல்லாட' என்பது தவறுதான். மயக்கம் என்ற இலக்கண குற்றம்தான்,' என்று பதில் எழுதினார்.

தவறை யார் சுட்டிக் காட்டினாலும் அதைப் பெருந்தன்மையோடு ஒப்புக் கொள்வார் கவிஞர். அதற்காக வெட்கப்பட்டு ஏறகமறுக்க மாட்டார்.

அவரது கவிதைகளோ, கட்டுரைகளோ, நாவல்களோ இடம்பெறாத வெகுஜனப் பத்திரிகைகளே 1970ம் ஆண்டிற்குப் பிறகு கிடையாது எனலாம்.

தினமும் இரண்டு மூன்று பத்திரிகைகளுக்கு எழுதிக் கொண்டே இருப்பார். கதை, கட்டுரை, நாவல், அரசியல் கடிதம் என்று அஷ்டாவதானம் பண்ணுவார்.

சொல்லிக் கொண்டே இருப்பார். நான் எழுதிக்கொண்டே இருப்பேன். ஒரு வார்த்தைக்கும் அடுத்த வார்த்தைக்கும் இருக்கும் இடைவெளி இமைக்கும் நேரத்திற்கும் குறைவாக இருக்கும். புதிய புதிய உவமைகளையும், மேற்கோள்களையும் மனப்பாடம் செய்து கொண்டதைப்போல் கொட்டுவார்.

சில சமயங்களில் அபூர்வமாக எப்போதாவது எழுதிய ஒன்றை மறதியின் காரணமாக திரும்பவும் சொல்வார். நான் எழுதுவதை நிறுத்தி விடுவேன். என்ன என்பதைப்போல் திரும்பிப் பார்ப்பார். 'இதை ஏற்கனவே எழுதி இருக்கிறோம்...' என்று இழுப்பேன். 'அப்படியா? சரி விடு, எழுது...' என்று தொடர்வாரே தவிர, 'எப்ப எழுதினோம்? எதில் வந்தது? உனக்குத் தெரியுமா?' என்றெல்லாம் கேட்கவோ, கோபிக்கவோ மாட்டார். அதற்கு அவருக்கு நேரம் இருந்ததும் இல்லை.

'ஏசு காவியம்' எழுதுவதற்கு காரணமாக இருந்தவர்களைக் குறிப்பிட்டு 'குமுதம்' இதழில் ஒரு கட்டுரை எழுதினார். கட்டுரை முடிவில், 'காவியத்தை இப்படித் துவக்கினேன்...' என்று தான் காவியத்திற்கு எழுதிய பாயிரத்தை அதில் குறிப்பிட்டு இருந்தார்:

*மாசிலா வாழ்வும்*
*மாண்புறும் மதியும்*
*வரமருள் கீர்த்தியும்*
*மிக்க யேசுவின்*
*மேன்மை இவையிவை*
*என்றே எழுதுகோல்*
*மைவழி ஈண்டு*
*பேசயான் வந்தேன்;*
*பெரியவன் இல்லேன்;*
*பிழையிருந்தாலதைப்*
*பொறுத்து, ஆசையின்*
*விளைவாம் ஆக்கிய*
*நூலை அன்போடும்*
*ஏற்றருள் வீரே!*

சனிக்கிழமை வெளியான இதைப் படித்துவிட்டு திங்கட்கிழமையே கிடைக்கும்படி கடிதம் எழுதினார் ஆழ்வார்பேட்டையைச் சேர்ந்த ஒருவர்.

### இராம-கண்ணப்பன்

'காவியத்துக்கான பாயிரம் மங்கலமாக அமையவேண்டும் என்பதற்காகத்தான் முன்னோர்கள் 'உகர'த்திலேயே தொடங்கி மரபாக்கினார்கள். தாங்கள் பாயிரத்தை 'மாசிலா' என்று ஆரம்பித்து இருக்கிறீர்களே?' என்று சுட்டிக்காட்டி இருந்தார்.

தவறுதான் என்று ஒப்புக்கொண்டு பதில் எழுதினார் கவிஞர்.

'ஏசு காவியம்' அச்சுக்கு போகும் முன், பாயிரத்தை மாற்றி எழுதினார்.



படிப்பகம்

www.padippakam.com

# புதிய முரண்பாடுகள்

கமலா கந்தசாமி

கடிகாரம் பார்த்தான் ஆனந்தன்.

இரவு 11-10.

வினோதினி இன்னும் வரவில்லை.

நெஞ்சில் வேதனை பரவியது. மனத்தில் லேசாய் பயம் எட்டிப் பார்த்தது. இனம் புரியாத சோகம் கண்களில் கவிய வாசலையே வெறித்தான்.

ஒன்றன்பின் ஒன்றாய் சிகரெட்.

திடீரென்று பவர்கட். வீடு இருளில் மூழ்கியது. அவன் மனசுபோல வீடு முழுவதும் இருள்.

'காரை வேறு, தானே ஓட்டிச் சென்றிருக்கிறாள். பத்திரமாகத் திரும்பணுமே...' மனைவியின் நினைவால், மறுபடியும், பயம் சூழ்ந்தது.

கண்கள், தூக்கத்திற்குக் கெஞ்சின. கதவை தாழ் போடாமல் சாத்திவிட்டு படுக்கையில் போய் விழுந்தான்.

'வர வர வினோதினியின் போக்கு, சரியில்லை. சதா 'பார்ட்டி' 'லேடீஸ் கிளப்' அத்துடன் குடிக்கவும் ஆரம்பித்திருக்கிறாள். இன்று இதுபற்றி அவளிடம் பேசிவிட வேண்டும். 'வினோ, இது எனக்குப் பிடிக்கலே'-என்பதை உறுதியாய் சொல்லிடணும்.'

மனத்திற்குள் புலம்பிக் கொண்டான் ஆனந்தன். உடல் களைத்த போதும் மனக் குழப்பம் தூக்கத்தை விலக்கியது.

சிந்தனையைக் கலைப்பதுபோல் வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

'வரட்டும் அவளே வரட்டும்' காத்திருந்தான்.

"ஹாய் ஆனந்த்! அதற்குள்ளே தூக்கம்?" லேசாய் தள்ளாடியபடி வந்து படுக்கையில் விழுந்தாள் வினோதினி. விஸ்கி நாற்றம் வயிற்றைப் புரட்டிட முகம் சுளித்தான்.

"விஸ்கி வாசனை பிடிக்கலையா? அதுக்குத்தான் நீங்களும் லைட்டா குடிக்கணும். இந்தக் காலத்தில இப்படி இருக்கீங்களே?" தடுமாறி உளறினாள் வினோதினி.

மனதில் எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டான். திட்டினால் அழுவாள்; தாங்க மாட்டாள். பதிலுக்குத் திட்டுவாள். எதையாவதுபோட்டு உடைப்பாள்...

சென்ற வாரம்... கோபத்தில் படுக்கையில் இருந்தபடியே ரிமோட் கண்ட்ரோலைத் தூக்கி எறிந்து, டி.வி. கிளாஸை உடைத்தது நினைவிற்கு வந்ததும் மௌனமாய் கோபத்தை அடக்கிக்கொண்டு, ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டான்.

"பார்த்தியா... நீ... சிகரெட் குடிக்கிறே... அந்த நாத்தம் எனக்குப் பிடிக்கலே. நான் ஏதாவது சொல்றேனா...? என்னமோ.. இன்றைக்கு மூட் சரியில்லே... கொஞ்சம் அதிகமா குடிச்சிட்டேன்... அதுக்குப் போய்..."

"இல்லே...; வினோ.. உன் மீது எனக்கு கோபமில்லே வினோ. பட் நமக்கு ஒரு குழந்தைகூட இருக்கு... இன்னமும் நீ இப்படி நடந்துக்கறது..."



"அதுதான் குழந்தையை ஹொஸ்டலில் சேர்த்துட்டோமே...ஆனந்த்...அடுத்த குழந்தை இப்போதைக்கு இல்லே! அதுக்குப் போய் ஏன் அலட்டறீங்க? கமோன்... இளமையில் ஜாலியாய்...இல்லாமல் எப்போ இருக்கப் போறோம்...?" என்று அவன்மீது சரிய..

"நீ படு வினோ... ரெஸ்ட் எடுத்துக்க!" அவளைப் படுக்க வைத்துவிட்டு சிகரெட் பாக்கெட்- லைட்டரை மட்டும் எடுத்துக் கொண்டு வெளி வராந்தா நோக்கிச் சென்றான் ஆனந்த்.

நேற்றோ, முந்தின நாளோதான் பவுர்ணமி. இன்றும் நிலவு பிரகாசமாய் இருந்தது.

பனியில் தரை ஜிலீர் என்று இருந்தது. அதைப் பொருட்படுத்தாது சட்டை இல்லாத வெற்றுடம்புடன் படுத்தான்.

மனதின் சூட்டுக்கு அந்தக் குளிர் தெரியவில்லை; மறுபடியும் ஒரு சிகரெட் பற்ற வைத்துக்கொண்டான்.

'ச்சே!... கோபப்பட்டும்.. நயமா சொல்லியும் எந்த வழியிலேயும் வினோதினியை மாற்றவே முடியவில்லையே..?' சுற்றிச் சுற்றி அந்த எண்ணமே வலுத்தது.

"ஆனந்த்... நீ லக்கிடா... மிகப் பெரிய இலட்சாதிபதியின் ஒரே மருமகனாயிட்டே...?"

இவன் நிலை தெரியாது நண்பர்கள் அடிக்கடி பொறாமையுடன் கூறுவது நினைவிற்கு வந்து.

"இது 'லக்கா'... 'அன்லக்கா?'" கேள்வி எழுந்தது. அடுத்த நொடியே...

'முருகா... என் எதிரிக்குக்கூட இப்படி ஒரு மனைவி வாய்க்கக்கூடாதுப்பா...' என்று நினைத்தான்.

தப்பு! சொத்து... பதவி... கார்... என்று ஆசைப்பட்டது தப்பு. காலம் கடந்த சிந்தனை.

"ஆனந்த்... நேரிடையாகக் கேட்கிறேன். என் மகளை மணக்க சம்மதமா?"

வினோதினியின் அப்பா ராகவன் ஒருநாள் மாலையில் அவனை வீட்டுக்கு அழைத்து.. உட்காரச் சொல்லி கையில் விஸ்கி கிளாசுடன்.. "கொஞ்சம் விஸ்கி சாப்பிடறயா?" என்று கேட்டு விட... ஆடிப் போனான் ஆனந்த்.

'நிஜமா... இது கனவா' என்று குழம்பினான்.

'போதையில் உளறுகிறாரா?' என்று சந்தேகப்பட்டான். விஸ்கி கிளாசை காலி செய்துவிட்டு. மறுபடியும் அதில் நிரப்பிக் கொண்டே...

> "...பிரான்ஸ், அமெரிக்கா என்று ஹனிமூன் நடந்தது. எல்லாமே கிடைத்தது. ஆனால் நிம்மதி?!"

"லுக் மை போய்! எனக்கு ஒரே மகள். தாய் இல்லாதவ. செல்லமா வளர்த்துட்டேன். ஊர் உலகம் தெரியாதவ. வெகுளி. எனக்கும் வயசாகிட்டே போகுது. போன மாதம் லைட்டா ஹார்ட் அட்டாக் வந்தது. இன்னொரு தடவை வந்தால் நான் இருக்கமாட்டேன்....

ஸோ.. சீக்கிரமே வினோவிற்கு கல்யாணம் பண்ணிவச்சி... இந்த கம்பெனிகளை என் மாப்பிள்ளையிடம் ஒப்படைக்கணும்னு முடிவுக்கு வந்துட்டேன்..."

ஆனந்த் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான். அவர், கிளாசை கீழே வைத்துவிட்டு, ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு... அவனிடம் பாக்கெட்டை நீட்ட...

"நோ... தாங்க்ஸ்.." என்றான் ஆனந்தன்.

"சிகரெட் கூட குடிக்கமாட்டியா?" ராகவன் ஆச்சரியப்பட்டார்.

"சிலவேளை ஒண்ணு இரண்டு குடிப்பேன். ஆனா பெரியவங்க முன்னே குடிக்கிறதில்லே..."

ஆனந்தனின் பதிலில் நெகிழ்ந்து போன ராகவன்..

"என் வசதிக்கு நான்... நீன்னு பசங்க க்யூவில நிற்பானுகள்... ஆனால் சொத்துக்காக முன்பின் தெரியாத இடத்துல கொடுக்கிறதை விட... நீ கெட்டிக்காரன்.. நல்லவன். என்பதால் உன்னை தெரிவு பண்ணிட்டேன்... சம்மதமா...?"

ராகவன் கேட்பது நிஜம் என்று புரிந்தது. ஏதோ கனவில் பூதம் வந்து கேட்பதுபோல இருந்தது.

"யேஸ். ஸார்" என்றான்.

'முன்பின் யோசிக்காது 'யெஸ்' சொல்லியது தப்பா...?' கேள்வியுடன் கையில் சிகரெட் முடிந்து, சுட்டது. சிகரெட்டை தூக்கி எறிந்தான்.

கேள்வியை....?

தூக்கி எறிய முடியவில்லை.

♦♦♦

மிகப் பெரிய கல்யாண மண்டபத்தில் திருமணம்.

ஐந்து நட்சத்திர ஓட்டலில் பார்ட்டி...

தனியாய் காண்டஸா கிளாசிக் கார்...

டி.வி..., வீடியோ..., ஃப்ரிட்ஜ்...

பிரான்ஸ்- அமெரிக்கா என்று ஹனிமூன்... எல்லாமே நடந்தது; எல்லாமே கிடைத்தது.

ஆனால் நிம்மதி...?

பாட்டி... தாத்தாவின் எதிரே நிற்கக்கூட மாட்டாள்.

அம்மா... அப்பாவுக்கு எதிரே உட்காருவாள்.

அதற்கே பாட்டி அம்மாவைத் திட்டுவாள்.

அந்தக் காலம் மலையேறிவிட்டது.

"ஹாய் ஹனி..." என்று யாரோ ஒரு முரட்டு ஜீன்ஸ். அழுக்கு ஜிப்பா... தாடிக்காரன் நம் கண்ணுக்கு முன்னே நம் மனைவியைக் கட்டிப்பிடித்து... என்னை "யார் பேபி?" என்கிறான்.

"ஆனந்த்... மீட் மை... ஓல்டு பாய் ஃப்ரண்ட் ஹரி பிரசாத்...!" என்று அறிமுகம் செய்கிறாள் மனைவி.

'என் நிலைமை நான் சொல்லாமலே ராகவனுக்கு தெரிந்தது. அதனால்தானே அவருக்கு இரண்டாவது முறை ஹார்ட் அட்டாக் வந்தது?'

ராகவனுக்காக பரிதாபப்பட்டான் ஆனந்த்.

"பாவம், அவர் என்ன செய்வார்..?"

இந்த கண்றாவிகளை எல்லாம் பார்த்து சகிக்காமல்தானே...

"ஆனந்தா.. எனக்கு இந்த நகர வாழ்க்கை பிடிக்கலேப்பா.. கொஞ்ச நாள் கிராமத்துல இருந்துட்டு வர்றேன்!" கண்கள் கலங்க அம்மா பிரிந்து போனாள்.

'வினோதினி மாறவே மாட்டாளா...?

பணமும், படிப்பும், சுதந்திரமும் பெண்களைப் பொறுத்த அளவில் பாழாக்கி விடுவதும் உண்டு என்பதற்கு இவள் ஒரு உதாரணமோ?'

"வினோ... பெண்கள் இப்படி அடங்காமல் திரியக்கூடாது வினோ..." அம்மாகூட ஒருமுறை சொல்லிப் பார்த்தாள்.

அற்ப ஜந்துவைப் பார்ப்பதுபோல அம்மாவை அலட்சியமாய் பார்த்துவிட்டு-

"பெண்கள் பைலட்டா பிளேன் ஓட்ட.. ராக்கெட்ல விண்வெளிப் பயணம்போக... பிரதமர், ஜனாதிபதின்னு நாட்டை ஆள்ற காலத்துல இது என்ன பத்தாம் பசலிப் பேச்சு?"

கோபத்தில் கத்த ஆரம்பித்தாள் வினோதினி.

"உங்கம்மா பதினேழாம் நூற்றாண்டுல இருந்தா- நீங்க கற்காலத்திலேயே இன்னும் இருக்கீங்க...."

வினோதினியின் குற்றச்சாட்டுக்கு மௌனமானான். அதன்பிறகு அவள் பேசுகின்ற போதெல்லாம் மௌனமானான்.

"ஆனந்த்... ரியலி யூ ஆர் வெரி லக்கி..." கார்.. பங்களா... வினோதினியின் அழகு பார்த்து நண்பர்கள் விழர்சிக்கும் போதும்கூட மௌனமானான்.

பனியில் உடல் நனைந்தது. குளிர ஆரம்பித்தது. திரும்ப எழுந்து கட்டிலுக்கு வந்தான்.

அலங்கோலமாய் ஆடைகள் நெகிழ படுத்திருந்தாள் வினோதினி. ஆடைகளைச் சரிசெய்து போர்வையை மேலே விரித்து போர்த்துவிட்டு மின் விசிறியைக் குறைத்தான்.

படுக்கையில் விழுந்தான். உறக்கம் வராதுபோல் தோன்றியது...

புதிய முரண்பாடுகள் முள்ளாய்க் குத்திட, 'பாவம் வினோ!' என்று மனசில் சொல்லிக்கொண்டான். ◘

---

# விற்க வந்தவள்

ரிஷபன்

அழைப்பு மணி ஒலித்தது. புவனா தான் திரும்பி வந்து விட்டாள் என்ற நினைப்புடன் கூவினேன்.

"கதவு திறந்துதான் இருக்கு."

சொன்ன பிறகுதான் உறைத்தது. அவளுக்குத் தெரியாதா? கதவு உட்புறம் பூட்டப் படவில்லை என்று. பின் வேறு யாராக இருக்கும்.

கதவு திறந்து அந்த சேல்ஸ் கேர்ள் புலப்பட்டாள். கையில் பெரிய பை.

"வீட்டுல வேற யாரும் இல்லீங்களா?"

"என்ன விஷயம்?"

அவளுக்கு அரை மனது. என்னிடம் பேசலாமா, வேண்டாமா என்று. காலை மணி பத்துக்கு உடம்பு முழுவதும் போர்த்திக் கொண்டு சோபாவில் சரிந்து இருந்த கோலம், அவளுக்கு வினோதமாய் இருந்திருக்க வேண்டும்.

ஏதோ சொன்னாள். புரியவில்லை.

"என்ன?" என்றேன் உரக்க.

தொலைக் காட்சியில் ஏதோ பாடல் காட்சி.



ஓசையைக் குறைத்தால்தான் அவள் பேச்சு கேட்கும்.

பைக்குள்ளிருந்து ஏதோ மஞ்சள் நிற பொட்டலத்தைக் காட்டினாள். சோப் பவுடரா... விளம்பரத்திற்கு வந்திருக்கிறாளா?

"வேணாம்" என்றேன்.

"லேடீஸ் யாரும் இல்லீங்களா?"

அவள் முகத்தில் ஏமாற்றம் பளிச்சிட்டது. இன்று காலை முதல் அலைச்சலாக இருந்திருக்கும்-எதுவும் விற்பனை ஆகாமல்.

எனக்குள் ஒரு பரிதாப உணர்வு. பாவம் வீடு வீடாய் படியேறி இறங்கி...

"உள்ளே வாங்க!" என்றேன் உரக்க.

"என்ன..?"

"உள்ளே வாங்க. டி.வி.யை ஆஃப் பண்ணிருங்க."

ஸ்விட்சை அணைத்து விட்டாள். இடத்தை விட்டு நகராமல் இருந்த என்னை சற்றே படபடப்புடன் பார்த்தாள்.

"ம். இப்ப சொல்லுங்க...." என்றேன் புன்முறுவலுடன்.

"வீட்டுல வேற யாரும்..."

"இப்ப வந்துருவா..." என்றேன்.

"இப்பதான் மார்க்கெட் பண்றோம். கடையைவிட அஞ்சு ரூபா குறைச்சலா தர்றோம். ஒரு கிலோ பவுடரோட இந்த பிளாஸ்டிக் மக் இலவசம். இரண்டு கிலோவா வாங்கினா இந்த சோப் ஃப்ரீ..."

டீபாய்மீது அடுக்கி வைத்தாள்.

நாங்கள் வழக்கமாய் வாங்குகிற 'பிராண்ட்' வேற. இந்த பவுடர் பார்க்கும் போதே அவ்வளவாக ஈர்க்கவில்லை.

"என்ன விலை?"

சொன்னாள்.

புவனாவை ஏன் இன்னும் காணோம். இவளை வேறு அனாவசியமாய் உள்ளே வரவழைத்து... என்னுள் யோசனை ஓடியது...

"இரண்டு கிலோ தரட்டுமா?" என்றாள்.

சாயம் போன பாலியஸ்டர் புடைவை. கழுத்தில் ஏதோ பிளாஸ்டிக் மணி மாலை. வெற்றுக் கைகள்தான் என் கவனத்தை ஈர்த்தது. அடி மனதில் மீண்டும் பரிதாப 'சுரீர்'.

"ஒரு கிலோ பாக்கெட் போதும்!" என்றேன்.

மற்றவற்றை எடுத்துப் பையில் திணித்துக்கொண்டாள். என் பார்வை உறுத்தியிருக்க வேண்டும்.

"அஞ்சு நிமிஷம் இருக்க முடியுமா... அவ வந்துருவா?" என்றேன்.

ஒருவித தவிப்புடன் இருந்தாள்.

ஹால் சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள்.

"இன்னும் ரெண்டு தெரு போகணும்." என்றாள் முனகலாக.

சட்டென்று யோசனை பளிச்சிட்டது.

"அதோ... அங்கே சாவிமாட்டியிருக்கு பாரு.... அந்த பீரோவைத் திற..." என்றேன்.

சற்று உள்ளடங்கிய பீரோ. சுவர் மூலை. நகர வழியில்லை. அவளுக்குள் ஏதோ திகில் மணி அடித்திருக்க வேண்டும். என்னைப் பயத்துடன் பார்த்தாள்.

பார்வையில் இன்னும் கனிவு கூட்டிக் கொண்டேன்.

"திறந்து மேலாக ஒரு டப்பாவில் பணம் இருக்கு... எடுத்துக்க...." என்றேன் தணிவாக.

தீர்மானித்து விட்டாள். 'நான் அவளை ஏதோ செய்யப்போகிறேன்' என்று

"பரவாயில்லே... நானே இன்னொரு தடவை வரேன்..."

அவசரமாய் எனக்காக வைத்த ஒரு கிலோ பாக்கெட்டை எடுத்துப் பைக்குள் திணிக்கப் போனாள்.

"ஏன்...?" என்றேன் திகைப்புடன்.

"நான் போவணும்."

நகர முயன்றபோது வாசற் கதவு காற்றில் நகர்ந்து மூடிக்கொண்டது.

மிரட்சியுடன் திரும்பி மூடிக்கொண்ட கதவைப் பார்த்தாள்.

"ரெண்டு கிலோ பாக்கெட் எடுத்துக்கறேன்.. பீரோவைத் திறந்து பணம் எடுத்துக்க....." என்றேன் படபடப்பாய்.

அவளுக்கு லேசாய் கண் கலங்கி விட்டது.

பிளாஸ்டிக் மக்கை பையில் திணித்தபடி கதவை நோக்கி நடக்க சட்டென்று நான் எழுந்தேன்.

அவள் கிரீச்சிட்ட அதே நேரம் கதவு திறந்து புவனா உள்ளே வந்தாள்.

"என்னங்க... என்ன ஆச்சு...?"

விற்பனைப் பெண் ஆசுவாசம் பெற்று புவனாவை நெருங்கிச் சொன்னாள்.

"இவரு... என்னை... வந்து..."

திரும்பி என்னைச் சுட்டிய அவள் பார்வையில் ஆயிரம் வோல்ட் அதிர்ச்சி.

இரண்டு மாதங்களுக்கு முன் தொழிற்சாலை விபத்தில் என் இருகைகளையும் முழங்கை வரை இழந்த நான் போர்வையை உதறி நின்றிருந்தேன். ●

---

# முடிவு

தேவி தமிழ்ச்செல்வன்

அனுசூயா குலுங்கி வந்தாள். வயது 20. அழகு மயில். வலை வீசியிருக்கிறார்கள் மாப்பிள்ளைக்கு. இன்னும் சிக்கவில்லை.

"அனு இரேன்..."

"என்னம்மா?" எரிச்சல் பட்டாள்.

"இந்தாடியம்மா... இந்த ஃபோட்டோவில இருக்கிறவரை உனக்குப் பிடிச்சிருக்கான்னு பார்த்துச் சொல்லேன்..."

ஃபோட்டோவைப் பார்த்தவள் அதிர்ந்தாள். நாற்பதுக்கு மேல் தாராளம். முன் நெற்றி பாலைவனம்! பஞ்சு நிறம் ஆரம்பம். இதில் வேற இளமைக் கண்ணாடி...

"எனக்குப் பிடிக்கலைம்மா..."

"என்னடி....இப்படி சொல்லிட்ட? பிரபல கோன் ஐஸ்கிரீம் கம்பெனிக்கு



சொந்தக்காரர்..."

முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"சொத்து மட்டும் கோடி ரூபாயைத் தாண்டும்..."

'சொத்து யாருக்கு வேணும்?' மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

'எனக்கு அப்பா இருந்திருந்தா... இப்படிச் செய்திருப்பாரா?' எண்ணியவள், பதில் சொல்லாமல் கொம்பியூட்டர் கிளாஸிற்குப் புறப்பட்டாள்-கனத்த மனதுடன்.

மாலையில் வந்ததும், அம்மா அழுது கொண்டே இருந்தாள்.

"என்னம்மா...? இப்படியே உட்கார்ந்திருக்கிற?"

"பின்ன... என்னடி நீயும் இனிமேல் கல்யாணமாகி புருஷன் வீட்டுக்குப் போயிடுவ... நான் தனிமையில எத்தனை நாளைக்குத்தான் வெந்து சாகிறது?"

"அம்மா..."

"அந்த ஐஸ்கிரீம் முதலாளி மனைவி இழந்தவரு... கிளப்லதான் எனக்குப் பழக்கம். உனக்குப் பிடிச்சா... நான் அவரை கல்யாணம் பண்ணிக்கிறேன்னு அவர் கிட்ட சொல்லியிருந்தேன்..."

"எனக்குப் பிடிச்சிருக்கும்மா..."

அம்மா... ஆயிரம் வோல்ட் மகிழ்ச்சியில் சிரித்தாள். ●

---

# ஒரு கொலை

வி.தமிழழகன்

கோபிகாவை கொலை செய்யப் போகிறேன்! இது இரவே எடுத்த முடிவு! விடிய விடிய யோசித்துப் பார்த்து... மிகவும் எச்சரிக்கையான ஒரு வழியாக கண்டு பிடித்தேன்.

விஷம், துப்பாக்கி, கத்தி இதெல்லாம் எப்படியும் காட்டிக் கொடுத்துவிடும்.

அதனால்தான் கிரைண்டரை தேர்ந்தெடுத்தேன். தினமும் அதை அவள் உபயோகப்படுத்துவது வழக்கம்.

எனவே, கிரைண்டரின் சுவிட்சைத் தட்டும் போது, கரண்ட் அடித்து, கோபிகா இறந்து விடுவது போல ஏற்பாடு செய்து விடலாம்.

இப்படிக் கொலை செய்வதால், யாரும் கண்டு பிடிக்க முடியாது.

கோபிகாவை கொலை செய்யும் எண்ணம் மனதில் வந்த.. எனக்குள் துடிப்பு அதிகரித்தது.

தனிமையை எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

அப்பா எப்பொழுதோ வெளியே புறப்பட்டு விட்டார்.

அம்மாவும், ஊரில். தங்கை தையல் கிளாசுக்கு புறப்பட்டு, இதோ... தெரு முனை திரும்பி, மறைந்து விட்டாள்.

எனக்குள் பரபரப்பு-

கோபிகாவை கொன்றுவிட இதைவிட ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது.

பலமுறை அவளைக் கொல்ல முயற்சித்தும், முடியவில்லை. யாராவது ஒருவர்



திடீரென வந்து... குறுக்கிட்டு... தடைப்பட்டு விட்டது.

இனியும் தாமதித்தால், நஷ்டம் எனக்குத்தான். கேட்டை சாத்திப் பூட்டினேன்.

உள்ளே வந்து கதவைத் தாழிட்டேன். எனது அறைக்குள் நுழைந்தேன்.

உட்கார்ந்து எழுத ஆரம்பித்தேன். 'கோபிகாவை கொலை செய்து' பாதியில் நின்ற கதையை முடித்தேன்.

பலமுறை முடிக்க முயற்சித்து, முடியாமலிருந்து... இப்பொழுது முடித்த திருப்தியில் நிம்மதியாய் உறையிலிட்டு பத்திரிகையின் முகவரி எழுதினேன். ◘



படிப்பகம்

# இலக்கிய நயம்

# தருவது ரசிகன்

# நால்வகை ஆயுதம்

குலோத்துங்கன் தன்
காதலியிடம்
வினா அடுக்கினான்!

"வீரம் என்றால்
என்ன?"

"நெஞ்சில் உரம்
நிமிர்ந்த குணம்!"

"மானம் என்றால்
என்ன?"

"இகழ்ச்சி பொறுக்காது
எழுச்சி கொள்ளுதல்!"

"துரோகம் என்றால்
என்ன?"

"தாயைத் துகிலுரியும்போதும்
தனக்கு மட்டும்
பட்டுக் கோவணம்
எதிர்பார்த்து கை நீட்டுதல்!"

"வாள் என்பது
என்ன?"

"சுழற்றத் தெரிந்தவன்
கையில் ஆயுதம்!
வீசத் தெரியாதவன்
கையில் வெறும் இரும்பு!"

"பலம் என்றால்
என்ன?"

"சிலரே ஆனாலும்
மனதால் ஒருவராய்
எழுதல்!"

"போர் என்றால்
என்ன?"

"எமக்கும் அவசியம்
எதிரிக்கும் அவசியம்!"

"அது எப்படி
ஒரே நியாயம்
இருவருக்கும் பொருந்தும்?"

"எம்மை
தலை குனியச் செய்ய
எதிரிக்கு அவசியம்!
எங்கள்
தலை நிமிர்ந்திருக்க
எமக்கும் அவசியம்!"

குலோத்துங்கன்
தன் காதலியை
கட்டிக்கொண்டு கூத்தாடினான்!

கலிங்க மன்னன்மீது
படையெடுக்க முன்னர்
தன் முடிவை சரிபார்க்க
காதலியுடன் கருத்தாடினான்!

"பாண்டிய மன்னன்
கலிங்கனுடன் சேர்ந்து
காட்டிக் கொடுக்கிறான்!



சேர மன்னனோ
சோர்ந்துபோய் கிடக்கிறான்!

சோழன் மட்டும்தான்
தோள் தட்டி நிற்கிறான்.
மார் நிமிர்த்திக் காட்டி
தொடை தட்டி எழுகிறான்!

சோழனை ஒழித்துவிட்டால்
கலிங்கம் வீங்கும்!
பாண்டியனிடமும், சேரனிடம்
கப்பம் வாங்கும்!"

கலிங்க நாட்டு மன்னனின்
கடைசிக்கட்ட திட்டத்தை
முன்னறிந்து கூறினாள்
சோழனின் காதலி.

"சபாஷ்! கண்ணே
சரியாக கணிப்பிட்டாய்!"

"பெண்கள் என்பதால்
பேதைகள் என நினையாதீர்!"

"மேதைகள்
ஆண்களிலும் இருக்கலாம்,
பெண்களிலும் இருக்கலாம்.
பேதைகளும் அப்படியே
அறிவேன் நான்!"

"பெண்களை மட்டும்
ஏன் போரிடத் தடுக்கிறீர்கள்?"

"இப்போது அவசியமில்லை
காலம் வரும்
அப்போது பார்க்கலாம்!"

"அது
எக்காலம் மன்னா?"

"எதிரிகள்
சற்று அதிகமாக
எக்காளமிடும் காலமாகவும்
இருக்கலாம்!"

"இப்போது நெற்றித்
திலகமிட்டு அனுப்புவது
மட்டும்தான் பணியா?"

"கோபப்படாதே கண்ணே
மாற்றங்கள் என்பது
படிப்படியாக நடந்தேறும்!"

"நாம் அதற்காக
பாடுபட வேண்டாமா?"

"முயற்சி இல்லாமல்
வெற்றி இல்லை!
உடைபடாமல்
எந்தவொரு தடையும்
விலகுவதும் இல்லை!"

"புரிகிறது அத்தான்
போய் வாருங்கள்"

"ஒருவேளை நான்
திரும்பி வராவிட்டால்?"

"விரும்பி நான்
களம் புகுவேன்!"

"கொடுக்கவேண்டியதை
கொடுத்துவிடு கண்ணே!"

"வேல் எதிர் வரினும்
விழி தாழ்த்தாத வீரர்
வெற்றி உமதே!"

"புகழாரம் வேண்டாம்
முத்தாரம் வேண்டும்!"

"புகழாராம் நாமாக தருவது
முத்தாரம் நீங்களாக
எடுத்து அணிவது!"

இழுத்து அணைத்தான்
இதழ்களை வதைத்தான்!
தடுத்து நிறுத்தாமல்
எடுத்துக் கொடுத்தாள்!

இதழ் வெளுக்க
இதழ் முழுவதும் சுவைத்தான்!
இடை நோக
இரு கரத்தால் வதைத்தான்!

"மரண அம்புகள்
இனித் துச்சம் கண்ணே,
உன் மலரம்புகள்
மார்பை துளைத்த பின்னர்!"

சொன்ன சோழ மன்னன்
காற்றின் வேகமாய்
களம் நோக்கி விரைந்தான்!

களத்தில்
பகை வீழ்ந்தது!
வெற்றிக் கனி
கரம் சேர்ந்தது!

கலிங்கத்துப் பரணி
படைக்கவைத்து
நாடு திரும்பிய சோழனை
புலவர் விசாரித்தார்:

"தோல்வியில்லாத
படை உனதே!
வீழ்ச்சியில்லாத
படை உனதே!
இதன் இரகசியம்
என்ன மன்னா?"

"நால்வகை ஆயுதங்கள்
நம் வசம் இருக்கையில்
நம் கையில் வெற்றி
வசப்படாமல் போகுமோ?"

"அது என்ன மன்னா
நால்வகை ஆயுதம்?"

"வீரம், மானம்,
வியத்தகு ஒழுக்கம்,
முன்னோர் வழி நடத்தல்,
தலைவனின் நம்பிக்கை பெறுதல்
அவைதான் நான்கும்!"

சோழ மன்னன் சொன்ன
நால்வகை ஆயுதம்
திருக்குறளிலும் உண்டு.
"மறமானம் மாண்ட வழிச்செலவு–தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு"

அதிகாரம் 77. குறள்: 760

---

ஸ்போர்ட்ஸ்

## டயானா கிரிக்கெட்



இளவரசி டயானா ஞாபகார்த்தமாக இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறவிருக்கும் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்கு இந்திய அணியின் முன்னாள் கப்டன் சச்சின் டெண்டுல்கருக்கும் சௌரவ் கங்குலிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜூன் 18ம் திகதி இடம்பெறவுள்ள இப்போட்டியில் உலகின் சிறந்த கிரிக்கெட் அணிகளிலிருந்து தெரிவு செய்யப்படும் சில ஆட்டக்காரர்கள் மெர்லிபோண் கிரிக்கெட் கிளப் அணியுடன் மோதவிருக்கின்றனர்.

இப்போட்டியின் மூலம் பெறப்படும் வருவாய் இளவரசி டயானா நினைவு நிதியத்திற்கு வழங்கப்படும்.

இந்திய அணி வீரர்களுக்கான அழைப்பு இந்திய கிரிக்கெட் சபை மூலம் அனுப்பப்பட்டு டெண்டுல்கர் மற்றும் கங்குலி ஆகியோரின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.

கங்குலி 1996ம் ஆண்டு லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியில் சதம் அடித்தவர். இவர் இதுவரை எந்த உலக அணியிலும் சேர்ந்து விளையாடியதில்லை. எனவே இது அவருக்கு ஒரு அரியசந்தர்ப்பமாகும்.

## கிரிக்கெட் ஆசியக் கோப்பை

ஆறாவது ஆசியக் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டிகள் 1999 மார்ச் மாதம் பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் டாக்காவில் இடம்பெற்ற ஆசிய கிரிக்கெட் சபைக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஏற்கனவே ஜனவரி மாதத்தில் போட்டி நடைபெறுவதாக இருந்தது. உலகக் கோப்பைக்கான போட்டிகளுக்கு நெருக்கமாக இத் திகதிகள் வருவதனால் இப்போட்டிக்கான காலமாற்றம் அவசியமெனக் கருதப்படுகிறது. எனினும் இதற்கான திகதிகள் அறிவிக்கப்படவில்லை.

ஆசியக்கோப்பைப் போட்டிகளின் முன்னோடிப் போட்டிகள் இவ்வாண்டு நவம்பரில் நேபாளத்தில் நடைபெறவுள்ளன. இப் போட்டிகளில் வெற்றி பெறும் அணி ஆசியக் கோப்பைப் போட்டிகளில் பங்குபற்றும்.

## கச்சிதமான 100 கேட்ச்

இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி பெங்களூரில் அண்மையில் நடைபெற்றது. இப்போட்டி யில் இந்திய அணியின் கப்டன் முகமட் அஸாருதீன் 100 வது கேட்ச்சைப் பிடித்தார். இதன்மூலம் டெஸ்ட் போட்டிகளில் 100 கேட்ச்களைப் பிடித்த 13வது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். அத்துடன் 100 கேட்ச்களைப் பிடித்த 2வது இந்திய வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். அஸாருக்கு முன் இந்திய அணி சார்பாக இந்திய அணியின் முன்னாள் கப்டன் சுனில் கவாஸ்கர் 108 கேட்ச்களைப் பிடித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் 100க்கும் மேற்பட்ட கேட்ச்களைப் பிடித்துள்ளவர்கள் 13 வீரர்கள்தான் (விக்கெட் கீப்பர்கள் நீங்கலாக). அந்த 13 வீரர்கள் பற்றிய விபரங்கள் வருமாறு:

| வீரர் | அணி | டெஸ்ட்கள் | கேட்ச்கள் |
|---|---|---|---|
| 1. அலன் போர்டர் | அவுஸ்திரேலியா | 156 | 156 |
| 2. மார்க் டெய்லர் | அவுஸ்திரேலியா | 96 | 144 |
| 3. கிரேக் சப்பல் | அவுஸ்திரேலியா | 87 | 122 |
| 4. விவியன் றிச்சார்ட்ஸ் | மேற்கிந்தியத் தீவு | 121 | 122 |
| 5. இயன் பொத்தம் | இங்கிலாந்து | 102 | 120 |
| 6. கொலின் கௌட்ரி | இங்கிலாந்து | 114 | 120 |
| 7. பொப் சிம்ப்ஸன் | அவுஸ்திரேலியா | 62 | 110 |
| 8. வொலி ஹமண்ட் | இங்கிலாந்து | 85 | 110 |
| 9. சேர். கேரி சோபர்ஸ் | மேற்கிந்தியத்தீவு | 93 | 109 |
| 10. சுனில் கவாஸ்கர் | இந்தியா | 125 | 108 |
| 11. இயன் சப்பல் | அவுஸ்திரேலியா | 75 | 105 |
| 12. கிரஹாம் கூச் | இங்கிலாந்து | 118 | 103 |
| 13. முகமட் அஸாருதீன் | இந்தியா | 91 | 101 |

---

# சிந்தியா பதில்கள்

★ சிந்தியா! அமெரிக்கப் பிரதிநிதியின் இலங்கை விஜயம் ஏன்?

ச. ஸ்ரீராம், கொழும்பு-06.

'ஆதரவு தலைவி', 'யாழில் காணாமல் போனோர் விடயத்தில் தக்க நடவடிக்கை எடுத்துள்ள தலைவி' என்றெல்லாம் கிலோ கிலோவாக ஐஸ்வைத்தாரே! ஏன்? இலங்கை அரசை முன்பைவிட இறுக்கமாக அரவணைத்து வைத்திருக்கும் ஆர்வத்தில்தான்! அப்படியானால்தான் இந்தியாவை இங்கிருந்து மோப்பம் பிடிக்கலாம்.

✉ ✍

★ இந்து ஆலயங்கள் யாவும் துரிதகதியில் புனரமைக்கப்படும் போல இருக்கிறதே?

க. ரஞ்சித்குமார், மன்னார்.

பார்த்தீர்களா? அப்படித்தான் நினைக்க வைத்துவிட்டன இந்த தமிழ்க் கட்சிகள். சில கோயில்களுக்கு மட்டும் நிதி ஒதுக்கிவிட்டு தமிழ்க் கட்சிகள் மூலம் விளம்பரம் தேடப்பட்டுவிட்டது! நாட்டில் மொத்தம் 1479 இந்து ஆலயங்கள் புனரமைக்கப்படவேண்டி உள்ளதாக இந்து மாமன்றம் புள்ளி விபரம் கூறுகிறது. "புனரமைக்கலாம்" என்று கொடுத்த வாக்குறுதியும் காற்றில் பறந்துள்ளதாம்.

✉ ✍

★ பிரிட்டன் அரசு புலிகளை தடை செய்யுமா?

கா. ரட்ணராஜா, மட்டக்களப்பு.

குறித்துவையுங்கள்! இன்றைய பிரிட்டன் ஆளும் கட்சி அப்படிச் செய்வதற்கான சந்தர்ப்பமே இல்லை. கோரிக்கைவிட்ட கதிர்காமர் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு திரும்பியிருக்கிறார்.

✉ ✍

★ சமயோசித புத்தி என்றால் என்ன?

எம். ஷகீலா, கல்முனை.

இரண்டு வியாபாரிகள் பஸ்சில் பயணம் செய்தனர். அருகருகே அமர்ந்து பேசிக் கொண்டு வந்தனர். இருவரும் நண்பர்கள். ஒருவருக்கொருவர் கடன் கொடுத்தும் வாங்குவார்கள்.

பஸ்சில் திடீர் பரபரப்பு. முகமூடிக் கொள்ளைக்காரர்கள் பயங்கர ஆயுதங்களுடன் ஏறினார்கள்.

ஒவ்வொரு பயணியிடமும் இருந்த பொருட்களையும், பணத்தையும் கொள்ளையிட்டனர்.

வியாபார நண்பர்கள் இருந்த இருக்கைகளின் பக்கமாக அவர்கள் வந்த போது, ஒரு நண்பன் தன்பையில் இருந்த பத்தாயிரம் ரூபாயை எடுத்து அருகிலிருந்த நண்பனிடம் நீட்டினான்.

"இந்தா, நான் உனக்குத் தரவேண்டிய பத்தாயிரம் ரூபாய். பணத்தை தந்துவிட்டேன். கடன் தீர்ந்தது"! என்று நண்பனது பையில் திணித்துவிட்டான்.

✉ ✍

★ ஜெயலலிதா தொடர்ந்தும் நிபந்தனைகள் விதித்து வருகிறாரே?

ஆர். கமலேஷ், கொழும்பு-08.

தெரியாமலா சொன்னார்கள்: "சேராத இடம் தனிலே சேர வேண்டாம்!"

✉ ✍

★ தபால் ஊழியர் வேலை நிறுத்தம் நீண்டநாள் தொடரும் அளவுக்கு அரசு ஏன் மந்தமாக இருக்கிறது?

மு. குகதாசன், கொழும்பு-11.

பேச்சுமட்டும்தான்; செயல் கிடையாது!

✉ ✍

★ இலங்கை கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவிடம் கோட்டைவிட்டுள்ளதே?

எஸ். ஆர். ரஊப், புத்தளம்.

அபாரமான பந்துவீச்சு ஒரு காரணம்! அந்தத் தொடர் முழுக்க அரவிந்தாவின் துடுப்பாட்டம் சோபிக்காததும் மற்றொரு காரணம்.

✉ ✍

★ ஓட்ட வீராங்கனை சுசந்திகா விவகாரம் பற்றி என்ன நினைக்கிறீர்?

பி. உமாபதி, கொழும்பு-06.

பணிய மறுத்ததால் கனியவைக்கும் முயற்சியோ- என்ற சந்தேகமும் வரத்தான் செய்கிறது. உண்மை தெரியும்வரை சுசந்திகாவுக்கு துணை நிற்க பெண்கள் அமைப்புக்கள்கூட முன்வராததுதான் சோகம்!



'சாக்ஷி 420' பட்த்தில் கமல்–தபு

✉ ✍

★ சிந்தியா! இளைஞர் பேரவையை மீண்டும் அமைக்க தமிழர் விடுதலைக் கூட்டணியினர் முயன்றனராமே? காரணம் யாது?

ஆ. வீரசிங்கம், திருமலை.

அறுபதிலும் ஆசை வரும்!

✉ ✍

★ உங்களுக்கு மத நம்பிக்கை உண்டா?

வி. ஜெகநாதன், நீர்கொழும்பு.

மனிதரில் நம்பிக்கை உண்டு!

✉ ✍

★ எனக்கு அடிக்கடி கனவு வருகிறது: என்ன செய்யலாம்?

செல்வி அ. பானுமதி, யாழ்ப்பாணம்.

நல்ல கனவா, கெட்ட கனவா? ஒரு கதை கேளுங்கள்:

இரண்டுபேர் சந்தித்தார்கள். ஒருத்தர் கூறினார்: "நீங்கள் நேற்று என் கனவில் வந்து என்னிடம் ஐநூறு ரூபா கடன் வாங்கினீர்கள்?"

உடனே மற்றவர் சொன்னார்:

"அப்படியா, அப்படியானால் அதைக் கண்டிப்பாக நான் திருப்பிக்கொடுப்பேன். அதுவும் வட்டியோடு திருப்பிக் கொடுப்பேன். நீங்கள் தயவுபண்ணி மறுக்காமல் வாங்கிக்கொள்ள வேண்டும்!"

மற்றவருக்கு மகா சந்தோஷம். மிக ஆர்வமாக: "எப்போது கொடுக்கப்போகிறீர்கள்?" என்று கேட்டார்.

அவர் சொன்னார்:

"மறுபடியும் நான் உங்கள் கனவில் வரும்போது!"

✉ ✍

★ யாழில் காணாமல் போனோர் விவகாரம் என்ன ஆனது?

சா. கதிரேசன்; யாழ்ப்பாணம்.

அப்படியொரு அநியாயம் நடந்தது என்ற நினைப்பே காணாமல்போய்க் கொண்டிருக்கிறது! கண்துடைப்பு விசாரணைக் கமிஷன்கூட வைக்கப்படவில்லை. ஈ.பி.டி.பி.க்கு வாக்குறுதி கொடுத்து வெற்றிகரமான நாலுமாதம்! கூட்டணிக்கும் அதே வாக்குறுதி கொடுத்து வெற்றிகரமான இரண்டுமாதம்! அம்மையாரின் விசாரணைக் கமிஷன் வாக்குறுதிக்கே வெள்ளி விழா கொண்டாடலாம் போலிருக்கிறது!

✉ ✍

★ தமிழ்க் கட்சிகள் ஒன்றுபடப் போவதாக கூறப்படுகிறதே?

எம். ஜீவேந்திரன், கொழும்பு-05.

வேறு ஜோக் கிடைக்கவில்லையா? இவர்கள் ஒன்றுபடுவானேன்? எல்லாக் கட்சிகளையும் கலைத்து விட்டு ஒரே கட்சியாகலாமே?! இனி மேல் உங்களைச் சந்திக்கும் தமிழ்க் கட்சிக்காரர்களிடம் கேளுங்கள்–"உங்களுக்குள் என்னய்யா கொள்கை முரண்பாடு?"

✉ ✍

★ கூட்டணியின் பாராளுமன்ற விவாதம் என்னாச்சு?

வே. சற்குணநாதன், வவுனியா.

குறுகிய நேரம்தான் கொடுக்கப்பட்டது. அது ஒன்றே போதும் அரச தரப்பின் அக்கறையை அளந்துபார்க்க! கூட்டணிக்கு இது போதும். முழங்கியாச்சு! அமைச்சர் பெரு மக்களும் பதிலளித்தனர் என்று பத்திரிகைகளிலும் வந்தாச்சு! 'இதுதான் அரசியல்' என்று உள்ளூர தங்கள் சாணக்கியத்தை நினைத்துப் பூரித்திருப்பர்! 'பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது' என்ற கதைதான்! தமிழ் அரசியல் கட்சிகளுக்கு விளையாட்டு, தமிழ் மக்களுக்கு மானம் போகுது!

✉ ✍

★ கமலுக்கு இவ்வருடமாவது 'ஒஸ்கார் விருது' கிடைக்குமா?

சி. ரவி, கொழும்பு-11.

கிடையவே கிடையாது. ஏனெனில் ஒஸ்கார் விருது என்பது ஹொலிவுட் நடிகர்களுக்கு மட்டுமே வழங்கப்படுவது! ஆனால் வெளிநாட்டுப் படங்களுக்கு என்று சிறப்பு விருது ஒன்று அங்கு வழங்கப்படுவதுண்டு. அதுகூட ஆங்கில மொழிப் படங்களுக்கே அநேகமாக வழங்கப்படும்.

✉ ✍



'சாக்ஷி 420' படத்தில் கமல்–ஜொனி வோக்கர்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 6

# எகிப்தில் ஏற்பட்ட பஞ்சம்

இராஜகுமாரன்

எகிப்து நாட்ட திபனான பார்வோன் கண்ட கனவைக் கேட்டதும் யோசேப்பு தனதிரு கண்களையும் மூடிய வண்ணம் ஆண்டவரைத் துதித்தார். மீண்டும் கண்களைத் திறந்து பார்வோனிடம் அவர் கண்ட இரண்டாவது கனவைப் பற்றிக் கூறுமாறு கேட்டார்.

தான் கண்ட இரண்டாவது கனவுபற்றி பார்வோன் கூறுலானார்:

"நைல் நதிக்கரையிலுள்ள வயலொன்றில் ஒரு தாளிலிருந்து செழிப்பான ஏழு கதிர்கள் தோன்றின. அத்தாளின் அருகேயிருந்த மற்றுமொரு தாளிலிருந்து காய்ந்து பதராகிப் போன ஏழு கதிர்கள் எழுந்து, ஏற்கனவே தோன்றியிருந்த செழிப்பான கதிர்களை விழுங்கிவிட்டன. இவ்விரு கனவுகளையும் கண்டபின் எனக்குத் தூக்கமே வரவில்லை. ஒரே கவலையாக இருக்கிறது. இங்குள்ள அறிஞர்கள் எவராலும் இக்கனவுகளுக்குரிய சரியான விளக்கத்தினைக் கூறமுடியவில்லை. உம்மால் சரியான விளக்கம் தரமுடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. விளக்கம் தர முடியுமா?"

மன்னர் பார்வோன் இக்கனவுகளைப் பற்றி யோசேப்பிடன் தெரிவிக் கும்போது மன்னருடைய தடு மாற்றம் தெரிந்தது. யோசேப்பு, "மன்னவரே! ஆண்டவருடைய ஆணைப்படி நடக்கவேண்டியவை நடந்தே ஆகவேண்டும். ஆண்டவர் அருளினால் இக்கனவுகளுக்கான உண்மையான பலனை என் உள்ளுணர்வால் உணர்ந்து கொண்டேன்.

மன்னராகிய தாங்கள் இந்நாட்டு மக்களை எக்குறையுமில்லாமல் காக்க வேண்டிய கடமைப்பாடுடையவர். இதனால் ஆண்டவரே தங்களுக்கு முன்னெச்சரிக்கையாக இக்கனவுக ளைத் தோற்றுவித்திருக்கிறார். இக்கனவுகளின் பலனைக் கூறுகிறேன் கேளுங்கள்.

தாங்கள் முதலில் கண்ட சிறப்பான மாடுகள் ஏழும், வளம் மிக்க செழிப்பான ஏழு ஆண்டுகளைக் குறிக்கும். அதன் பின் தோன்றிய மெலிந்த அருவருப்பான மாடுகள் ஏழும்- செழிப்பான ஏழு ஆண்டுகளின் பின்னர் தொடர்ந்து வரப் போகும் வறுமையும் பிணியும் மிஞ்சிய ஏழு ஆண்டுகளைக் குறிக்கின்றன. எனவே இனி மேல் வரப்போகும் ஏழு ஆண்டுகள் எகிப்து நாட்டில் மிகச் சிறப்பான விளைச்சல் கண்டு பன்மடங்கு தானியங்கள் பொலியும். அதன் பின்வரப்போகும் ஏழு ஆண்டுகளில் சகல வளங்களும் மறைந்து போகும். விளைச்சல் எதுவும் இருக்காது. மக்கள் பசியாலும் வறுமைப் பிணியாலும் பெரும் துன்பங்களை அனுபவிக்க நேரிடும்.

## ஆண்டவரின் எச்சரிக்கை

தங்களுடைய இரண்டாவது கனவும் இதே கருத்தைத்தான் கூறுகின்றது. செழிப்பான கதிர்கள் ஏழும், நாட்டின் வளம் அதிகரிக்கும் ஏழு ஆண்டுகளைக் காட்டுகின்றன. பதரான ஏழு கதிர்களும் தொடர்ந்து வரப்போகும் விளைச்சலற்ற பஞ்சம் மிஞ்சும் ஆண்டுகளைக் குறிப்பிடுகின்றன. ஆகவே ஆண்டவர், இந்நாட்டுக்கு இனிமேல் வரும் பதினான்கு ஆண்டுகளில் நடக்கவிருக்கும் இன்ப துன்பங்களைக் கனவுகள் மூலம் எடுத்துக்காட்டி எச்சரித்திருக்கிறார்!"

பார்வோன் மன்னரிடம் யோசேப்பு இவ்வாறு கூறிய விளக்கத்தைக் கேட்டு பார்வோன் மன்னர் மட்டுமல்ல, அவையிலிருந்த மந்திரிப்பிரதானிகளும் அறிஞர் பெருமக்களும் திகைப்படைந்தனர். யோசேப்பு ஆண்டவரின் பேரருளுக்குப் பாத்திரமானவரே என்று வியந்து பாராட்டினர்.

பார்வோன் மன்னரின் முகத்தில் ஒரு புறம் மகிழ்ச்சியும் மறுபுறம் விபரிக்க முடியாத வேதனையும் மாறி மாறிப் பிரதிபலித்தன.

தன்னை வாட்டிய கனவின் பலனை அறிந்ததிலும் செழிப்பான காலம் வரப்போகிறது என்பதிலும் அவர் மகிழ்ச்சியடைந்தார். ஆனால் அந்த ஏழு ஆண்டுகளைத் தொடர்ந்து வரப்போகும் வறுமை மிஞ்சிய கொடுமையான காலத்தை எண்ணியபோது மன்னர் கலக்கமடைந்தார். தனது அரியாசனத்திலிருந்து எழுந்த மன்னர் யோசேப்பு இருந்த ஆசனத்தின் அருகில் வந்தார். மன்னர் எழுந்து வருவதைக் கண்ட அவையோர் அனைவரும் எழுந்து நின்றதைப் போல யோசேப்பும் எழுந்து கொண்டார். யோசேப்பின் புஜங்களைத் தன் இரு கைகளாலும் பற்றிய பார்வோன், "இளைஞரே! உண்மையில் ஆண்டவருடைய அருளுக்குப் பாத்திரமானவரே நீங்கள் என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. செழிப்பான எழு வருடங்கள் கழிந்த பின்னர் வரப்போகும் பஞ்சம், பசி, பிணியிலிருந்து எனது நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதற்கான வழி முறைகளையும் தாங்கள் நிச்சயம் அறிந்திருப்பீர்கள். அதற்கான மார்க்கங்களையும் கூறுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்!" என்று கேட்டார்.

நாட்டை ஆளும் மன்னன் எத்தகைய வணங்காமுடியாக இருந்தாலும் தன் குடிமக்களுக்குத் துன்பம் நேரிடுவதைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டான். எத்தகைய மார்க்கத்தைக் கடைப்பிடித்தாவது மக்களைப் பாதுகாக்கவே மன்னன் பாடுபடுவான்.



பர்வோன் மன்னனும் தன் குடிமக்களைத் தாக்க வரப்போகும் துன்பச் சூழலிலிருந்து பாதுகாப்புத் தேட யோசேப்பு ஒருவரே சிறந்த மார்க்கத்தைக் கூறவல்லவர் என்பதை உணர்ந்துகொண்டார். ஆகவேதான் வேறு எவருக்கும் கொடுக்காத மரியாதையை யோசேப்புக்குக் கொடுத்தார். அரியணையை விட்டுக் கீழிறங்கி வந்து யோசேப்பின் தோள்களைத் தொட்டார்.

ஆண்டவர் அருளால்தான் அத்தனையும் நடக்கின்றன என்று திடமாக நம்பிய யோசேப்பு, ஆண்டவருக்கு மனதார நன்றி தெரிவித்து கண்களை மூடித் துதித்தார். பின்னர் சொன்னார்:

"மன்னவரே! எகிப்து நாட்டு மக்களுக்கு ஏற்படப்போகும் நன்மையையும் அதனைத் தொடர்ந்து வரவிருக்கும் தீமையையும் கனவுகள் மூலம் ஆண்டவர் தங்களுக்கு உணர்த்தியிருக்கிறார். வரவிருக்கும் துன்பம் பற்றி முன்கூட்டியே தாங்கள் உணர்ந்து கொண்டமையினால் அதற்கான பரிகாரம் தேடவும் தங்களால் முடியும்.

செழிப்பான ஏழு வருடங்கள் நல்ல விளைச்சலை நாடு காணும் என்பதில் ஐயமில்லை. இக்காலத்தில் நாடெங்கணும் தானியங்களைப் பெற்று அவற்றை உரிய முறையில் பாதுகாக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கினை அரசாங்கமே கொள்முதல் செய்து சேமித்து வைத்துக் கொண்டால், தொடர்ந்து வரப்போகும் விளைச்சலற்ற காலத்தில் பயன்படுத்துவதற்குப் போதுமான உணவுப் பொருட்கள் மக்களுக்குக் கிடைக்கும். ஆகவே மதி நுட்பமும், தீர்க்கமான அறிவாற்றலும் கொண்ட ஒருவரை உணவுத் தானியங்களைச் சேகரிக்கும் பணிக்காக நியமிக்க உடனடியாக ஏற்பாடு செய்யுங்கள்!" என்று கூறினார்.

## பொருத்தமான அதிகாரி

யோசேப்பின் கூற்றை அவையிலிருந்த அனைவரும் ஒரே முகமாக வரவேற்றனர். இதனை அடுத்து அவையோரை நோக்கி மன்னர் இவ்வாறு கூறினார்:

"அவையோரே! இவ்விளைஞர் யோசேப்பு கூறிய கருத்துக்கள் உங்கள் அனைவருக்கும் சரியெனவே பட்டிருக்கும் என்பதனை யான் அறிவேன். யோசேப்பு இறையருள் பெற்றவர் என்பதனால்தான் இத்தனை உண்மைகளையும் தெரிவித்தார். இன்றுள்ள நிலையில் தானியங்களைச் சேகரித்து- சேமித்து வைத்து, விளைச்சலற்ற காலத்தில் கட்டுப்பாடாக அச்சேமிப்பைப் பயன்படுத்துவதற்கேற்ற வேறொருவரைத் தேடிக் கண்டுபிடிப்பது முடியாத காரியம். எம் நாட்டு மக்களின் நலனைக் காப்பதற்காகவே இந்த இளைஞரை ஆண்டவர் எம்மிடம் இத்தருணத்தில் அனுப்பி வைத்திருக்கிறார். ஆகவே, தானியங்களைச் சேர்க்கவும் அவற்றைத் தேவையான காலத்தில் தேவைக்கேற்றபடி மக்களுக்குப் பங்கிடவும் பொருத்தமான அதிகாரியாக உங்கள் முன்னிலையில் யோசேப்பை நியமிக்கிறேன்!" என்று கூறினார். தன்னுடைய் முத்திரை மோதிரத்தையும் யோசேப்பின் கையில் அணிவித்தார். பட்டாலான ஆடைகளையும் அணிவித்து தங்கத்தாலான கழுத்தணியையும் அணிவித்தார்.

மன்னன் பார்வோன், யோசேப்பை எகிப்து நாடு முழுவதுக்குமான பொறுப்புக்களைக் கவனிக்கும் ஆளுனராகப் பிரகடனப்படுத்தினார். 'சபாநாத்து பனேகா' என்று புதிய பெயரையும் சூட்டினார். அரசவையிலுள்ள அனைவரும் எதுவித மறுப்பும் தெரிவிக்காமல், யோசேப்புக்கு அளிக்கப்பட்ட கௌரவத்தை ஒரே குரலில் ஆமோதித்தனர். அவருக்குத் தன்னுடைய இரதங்களில் ஒன்றைக் கொடுத்து நாடு முழுவதும் சென்று பார்வையிட்டு, உணவுப் பொருட்களைச் சேகரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து திரும்புமாறு கூறினார்.

யோசேப்பு எல்லா இடங்களையும் சுற்றிப் பார்வையிட்டு தானியங்களைச் சேகரிப்பதற்கான களஞ்சியங்களை நிறுவி, அவற்றை நிர்வகிப்பதற்கான அதிகாரிகளையும் நியமித்தார்.

## கனவு பலித்தது

பார்வோன் கண்ட கனவின் பிரகாரம் நல்ல மழை பொழிந்தது. தொடர்ந்து ஏழு வருடங்கள் எகிப்து பெருவிளைச்சலைக் கண்டது. மன்னவரும் மக்களும், யோசேப்பின் கூற்றுப் பொய்க்கவில்லை என்பதனையும் கண்டனர். கனவின் பலன்போல் செழிப்பான ஏழு வருடங்கள் உருண்டோடின. இதற்குள் நாடெங்கும் தானியக் களஞ்சியங்கள்- எதிர்பார்த்ததைவிட மிக உபரியான தானியங்களைச் சேகரித்து வைத்துவிட்டன.

குறிப்பிட்ட ஏழு வருடங்கள் முடிவடைந்ததும் வானம் பொய்த்தது. நைல் நதியும் வற்றி வரண்டது. எங்கும் கொடும் வரட்சி தாண்டவமாடியது. வயல் வெளியெல்லாம் காய்ந்து நிலம் பாளம் பாளமாக வெடித்துக் காணப்பட்டது.

எகிப்து மட்டுமல்லாமல் அதனைச் சூழ்ந்துள்ள ஏனைய பலநாடுகளிலும் பஞ்சம் தலைவிரித்தாடியது. எகிப்தைத் தவிர ஏனைய நாடுகளில் உணவு கிடைக்காமல் மக்கள் பெருமளவில் மடிந்தனர். எகிப்து மக்கள் உணவுத் தானியங்களை அமோகமாகச் சேகரித்து வைத்தமையினால் எதுவித கவலையுமின்றி மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். யோசேப்பு தனது ஆற்றலின் துணைகொண்டு, சேமித்து வைக்கப்பட்ட தானியங்களின் அளவைக் கணக்கிட்டு, மக்களின் தேவைக்கு அதிகமாக மீதப்படும் தானியத்தை, பசியினால் வாடும்- அயல் நாடுகளிலிருந்து வருவோருக்கும் கொடுக்கலாம் என்று மன்னர் பார்வோனின் ஒப்புதலையும் பெற்று அதன்படி அறிவித்தார். இதனைத் தொடர்ந்து அயலிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தானியத்தை வந்து வாங்கிச் சென்றனர்.

கானான் தேசத்திலிருந்தும் பலர் தானியம் கொள்முதல் செய்ய வந்திருந்தனர். அவ்வாறு வேற்று நாட்டவர்கள் தானியம் வாங்க வரும்போது நேரடியாகவே யோசேப்பு விசாரித்து விட்டே தானியம் வழங்க அனுமதிப்பார். அன்று கானான் நாட்டிலிருந்து வந்தவர்கள் பலர் யோசேப்பின் முன்வந்து தாழ்ந்து பணிந்தனர். அவர்களில் சிலரைக் கண்டதும் யோசேப்பு தனது முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டார். அவ்வாறு திரும்பியவரின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகியது. இருக்கையை விட்டு எழுந்து ஒருபுறம் சென்று கண்களைத் துடைத்துக்கொண்டு திரும்பியதும் அக்கூட்டத்திலிருந்து பத்துப்பேரைச் சுட்டிக்காட்டி, "இவர்கள் உண்மையில் தானியம் வாங்க வந்தவர்களல்ல; வேவு பார்க்க வந்தவர்கள். இவர்களை கைது செய்யுங்கள். நான் பிறகு விசாரிக்கிறேன்!" என்றார். (தொடர்ந்து வரும்)

### திருமறை ④ விடை:

தபால் விநியோகம் சீராக இல்லாமையினால் திருமறை 4 விடைகள் வந்து சேரவில்லை. ஆகவே சரியான விடையையும் விடையளித்து ப் பரிசுபெறு வோர் விபரத்தையும் பின்னர் அறியத்தருகிறோம்.

ஆ-ர்

**திருமறை 06** வினா:- யாக்கோபின் பிள்ளைகள் எத்தனைபேர்?

மே. 02க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 06 —தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# மதவாதமும் மரவாதமும்

வணக்கங்க!, நான் சந்தனமரக் கடத்தல் மன்னன் வீரப்பன் பேசுறேனுங்க. எலக்ஷன் வோட்டுக் கலக்ஷன் எண்ணு தலைவர்மாருங்க ரொம்ப பிஸியா இருந்தாங்க. ஜனங்களும் வோட்டுப் போட்டுக்கிட்டு, மத்தியிலே கூட்டு வருமா, பொரியல் வருமா எண்ணு பார்த்துக்கிட்டிருந்தாங்க. அதனால என்னைச் சுத்தமா மறந்து போயிருந்தாங்க.

நானும் பார்த்துக்கிட்டே இருந்தேங்க, நம்ம பெயரைக்கூட மறந்துடுவாங்களோ எண்ணு நினைச்சேங்க.

அரசியல்வாதியா இருந்தா அப்பப்ப பெயர் வாறமாதிரி பார்த்துக்கலாம். பிரச்சனைகள் இல்லையென்றாலும், பிரச்சனைகளை கிளறிவிட்டே ஆதாயம் தேடி, தங்கள் பெயரையும் பத்திரிகையில வர்ற மாதிரிப் பார்த்துப்பாங்க. அதுதான் அரசியல் வாதிங்க.

இன்னொரு விஷயமுங்க, நம்ம பக்கத்து நாட்டிலே, சிலோனில் இருக்கிற தமிழ் அரசியல்வாதிகளும் நம்ம அரசியல் வாதிகளை தூக்கிச் சாப்பிடுற லெவலுக்கு கெட்டுப் போய்க்கிட்டிருக்காங்களாமே.

என்ன ஆனாலும் சரிதான், கவர்மெண்டிலே பிடிச்சு தொங்கிக்கிட்டே இருப்போம். சலுகையிலே தங்கிகிட்டே இருப்போம். அப்பப்போ காரசாரமா அறிக்கை கொடுத்து ஜனங்க காதிலே பூச்சுற்றிக்கிட்டே இருப்போம் எண்ணு சொல்லாமல் சொல்லுறாங்களாமே. உண்மையாங்க?

முன்னாடி துப்பாக்கி தூக்கினவங்க கூட இப்போ கவர்மெண்டுக்காக காவடி தூக்குறாங்களாமே! அப்போ முன்னாடி இவங்க மனசிலே தில்லோட துப்பாக்கி தூக்கியிருக்க மாட்டாங்க. சும்மா ஒரு 'ஷோ'க் காட்டுறதுக்காக தூக்கியிருப்பாங்கப்பா.

'தில்லோட தூக்கியிருந்தாக்க, இப்போ அந்த தில்லோட பாதியாவது மனசிலே இருக்கணுமில்லே? இருந்தா இப்படி தொங்கிக் கொண்டிருப்பாங்களா? துணிஞ்சு எதிர்த்து நிற்பாங்களா இல்லையா? என்ன நான் சொல்லுறது?'

இத்தோட சிலோன் விவகாரத்தை நிறுத்திட்டு, நம்ம ஊர் சமாச்சாரத்துக்கு தாவுறேங்க.

நம்ம கலைஞர் இருக்கிறாரே அவரும் என்னை மறந்துட்டாருங்க. "அடே... வீரப்பா! எலக்ஷன் முடியட்டும், அதுவரை கம்முன்னு இருடா" எண்ணு சொல்லியிருந்தா எனக்கு எம்புட்டுச் சந்தோசமா இருந்திருக்கும்?

மதவாதிகள் ஒழிக, மதவாதிகள் ஒழிக எண்ணு பேசிக்கொண்டிருந்தாரு.

அந்த அம்மா போயி அந்த வாஜ்பேயி கூட சேர்ந்துட்டாங்க. கடைசியிலே ஜெயிச்சுட்டாங்க.

இப்போ என்னாச்சு, மதவாதிங்க ஆட்சிக்கு வந்துட்டாங்க. அதான் இந்த மரவாதி மக்கள் முன்னாடி காட்சிக்கு வரலாம் எண்ணு நினைக்கிறேங்க.

ஐயா! கலைஞரு! மதவாதி எண்ணு சொல்லிப்புட்டு, அவரு பிரதமரானதும் கமகமக்கிற சந்தன மாலையை தூக்கிட்டு போயி வாஜ்பேயி இருபதாண்டு நண்பர் எண்ணு போட்டிங்க பாருங்க ஒரு போடு, சந்தன மரத்தில கோடாரியாலகூட அப்படி நான் போட்டதில்லங்க.

ஐயா! மதவாதிங்ககூட கைகுலுக்குறீங்க, இந்த மரவாதிக்கு கைகொடுக்க கூடாதுங்களா?

என்னங்க, மரவாதி எண்ணு சொல்றது புரியல்லேங்களா?

மதத்தை வைத்து இலாபம் தேடினா மதவாதமுங்க!

மரத்தை வைத்து இலாபம் தேடுறது. மரவாதமுங்க! நான் மரவாதிங்க! என்ன சரியுங்களா?

நம்ம பெயரையும், படத்தையும் பத்திரிகையில பார்த்து ரொம்ப நாளாச்சுங்க. அதுதான் மறுபடி ஆஜராகப் போறேங்க.

அதனாலே உங்களுக்கும் இலாபம் இருக்குதுங்க. அந்தம்மாவைப் பற்றித்தான் டெய்லி செய்தி வந்துக்கிட்டே இருக்கு. உங்களுக்கும் அவங்க பேரை பத்திரிகையில பார்த்துப் பார்த்து வயிறு எரிஞ்சிருக்கும். அதனாலே மறுபடி என் பெயர் அடிபடுற மாதிரி நியூஸ் கொடுக்கலாங்க. ஜனங்க வீரப்பன் வர்றானாம், வீரப்பன் வர்றானாம் எண்ணு பேசத் தொடங்கினா, ஜெயலலிதா டில்லி போறாராம், ஜெயலிதா திரும்பி வர்றாராம் எண்ணு பேசிக்கிட்டிருக்க மாட்டாங்க.

உங்களுக்கும் இலாபம். எனக்கும் இலாபம். அரசியல் என்றாலே ஒரு வியாபாரம் மாதிரித்தானுங்களே.

இறுதியாக ஒரு பாட்டோட என் பேச்சை 'கட்' பண்ணிக்கிறேங்க.

மயக்கமா கலக்கமா?
மனதிலே குழப்பமா?
பதவியில் நடுக்கமா?

தேர்தல் என்றால் தோல்வியும்
இருக்கும்
செல்வி வென்றால் கோபமும் இருக்கும்
வந்த தோல்வி எதுவென்றாலும்
வாடி நின்றால் ஓடுவதில்லை!
எதையும் தாங்கும் இதயம் இருந்தால்
இறுதிவரைக்கும் பதவி இருக்கும்!




# இளவல் வீரப்பன்

**வீரப்பன் சரணடைந்தால் கலைஞர் கருணாநிதி எப்படி உரையாற்றுவார்?**



என் இனிய இளவல் வீரப்பன், என் இரு ஆண்டுகால நண்பர். அவர் சந்தன மரத்தை வெட்டியிருக்கலாம். ஆனால் சுந்தர தமிழை முட்டியதில்லை.

வெட்டிய மரத்தை விற்றது குற்றம் என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன், ஆனால் வெட்ட வைத்தது யார் குற்றம்? முன்னாள் இருந்த ஆட்சியினர் செய்த குற்றம்!

ஆனாலும் என் இளவல் வீரப்பன் இதயத்தில் ஈரம் இல்லாதவரல்ல! இனப் பற்றைவிட்டு தூரமானவரல்ல. அதனால் காட்டிலே உள்ள மரங்களை முற்றாக அழிக்காமல் முற்றிய மரங்களாக விட்டு வைத்தார் என்பதனையும் நான் இங்கே தெரிவிக்கவும், எண்ணிப் பார்க்கவும் கடமைப்பட்டுள்ளேன்.

வீரப்பன் அரசியலுக்கு வருவாரா என்று கேட்கிறார்கள். ஏன் வரக்கூடாது என்று கேட்கிறேன்.

மரத்தைச் சுற்றியும் முட்டியும் டூயட் பாடியவர்கள் முதலமைச்சர்களாக வர முடியுமானால், மரத்தை வெட்டித் திரிந்த இளவல் வீரப்பன் ஏன் அரசியலுக்கு வந்து தீரப்பனாக முடியாது?"

(கரகோசம்)

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)





அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

3 செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


# எடையோ எடை






ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

5 செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


அமெரிக்க ஒஹையோ மாநிலத்தில், கனடாவைச் சேர்ந்த அன்னா பேட்ஸ்- 1879 ஜனவரி 19ம் திகதி ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தார். இதன் எடை 10.8 கிலோவாக இருந்தது. ஆனால் பிறந்து 11 மணி நேரத்தில் இக் குழந்தை இறந்துவிட்டது.

இத்தாலியைச் சேர்ந்த அவெர்சாவிலுள்ள கார்மெலினா ஃபெடெல் என்ற மாது, 1955 செப்டம்பரில் 10.2 கிலோ எடையுள்ள ஒரு மகனை ஈன்றெடுத்தாள். இக்'குழந்தை' இன்று 43 வயதுடைய ஆண்மகனாக- சுகதேகியாக வாழ்ந்து வருகிறார்.

அந்த சாதனைகளை முறியடித்து இப்போது உலக சாதனைக் குழந்தையாக இருப்பது இந்த இங்கிலாந்துக் குழந்தைதான். என்ன, நினைத்த போதெல்லாம் தூக்கிக் கொஞ்ச முடியாது. கொஞ்சம் பலத்தை சேர்த்துக்கொண்டுதான் தூக்கிக் கொள்ள வேண்டி இருக்கும்.

என்றாலும் பெற்ற குழந்தை பொலிவாக இருந்தால் பெற்றோருக்கும், உற்றாருக்கும் பூரிப்புத்தான்.

↑ உலகிலேயே அதிக எடையுடன் பிறந்த (இந் நூற்றாண்டில்) குழந்தை இங்கிலாந்து- கம்பிரியா என்ற இடத்தைச் சேர்ந்த அன்ட்று- நிக்கோலா கர் தம்பதியினருக்குப் பிறந்தது.

இதன் எடை 7கிலோ (15 இறாத்தல் 8 அவுன்ஸ்) இத்தம்பதியினருக்கு இது எட்டாவது குழந்தை. 1992ல் பிறந்த இக்குழந்தையின் பெயர் கை வார்விக் கர் என்பதாகும். இதே குழந்தை பிறந்த அதே நாளில் பிறந்த மற்றொரு குழந்தை எடை கூடிய குழந்தைக்கு அருகிலேயே காணப்படுகிறது. அளவு வித்தியாசம் புரிகிறதல்லவா.

## சிறிசு



↑ ஒரு சாதாரண நிலக்கடலையின் மேல் இருப்பது ஒரு ஹெலிக்கொப்டர். மனிதர்கள் பயணம் செய்யக் கூடிய, அல்லது குண்டைத் தலையில் போடக்கூடிய ஹெலியல்ல!

இது ஒரு மாதிரி வடிவம் (மொடல்) மட்டுமே. 24 மில்லிமீட்டர் நீளமும் 8 மில்லிமீட்டர் உயரமும் கொண்ட இந்த ஹெலி- ஜேர்மனி மெய்ன்ஸ் என்ற இடத்திலுள்ள மைக்ரோ டெக்னிக் நிறுவனத்தில் வடிவமைக்கப்பட்டது.

இந்த ஹெலியை 130 மில்லிமீட்டர் உயரம்வரை தானியங்கி தொழில் நுட்பத்தின் மூலம் பறக்க வைக்கலாம். உலக சாதனைக்காக உருவாக்கப்பட்டது.

உலகிலேயே மிக மிக சிறிய கடுகுக் ஹெலி இதுதான்.

பெரிய ஹெலி தயாரிப்பதைவிட, இந்தச் சிறிய ஹெலியை தயாரிக்கத்தான் மகா நுணுக்கமான திறமை வேண்டும். அதனால்தான் உலக சாதனை!

## எப்போதும் விளையாட்டு



↑ ஜப்பானில் தேனிலவைக் களிப்பிக்க விரும்பும் புதுத் தம்பதிகள் இப்போதெல்லாம் தேடி ஓடும் இடம் ஜப்பானின் கியூஷு தீவிலுள்ள மியாஸாக்கி என்ற இடத்தைத்தான்.

இது ஒரு கடற்கரை சார்ந்த பிரதேசமாக இருந்தபோதிலும், பயணிகள் இயற்கையான கடற்கரையை நாடுவதில்லை. கடற்கரையிலிருந்து வெகு தூரத்துக்கு அப்பால் ஒரு செயற்கைக் கடற்கரையை அமைத்திருக்கிறார்கள்.

சாதாரண கடற்கரையில் இயற்கையாகக் காணப்படும் அத்தனை அம்சங்களையும் இங்கு செயற்கையாக அமைத்து- இயற்கைக்கே சவால் விடுகின்றனர்.

இந்தச் செயற்கைக் கடற்கரை 459 அடி நீளமுடையது. இந்த அமைப்பின் மொத்தப் பரப்பு -985 அடி நீளமும் 328 அடி அகலமும் கொண்டது.

விடுதிகள், உணவுச் சாலைகள் கேளிக்கைக் கூடங்கள் மற்றும் பொழுது போக்குச் சாதனங்கள் அத்தனையும் இங்கு உள்ளன.

ஒரே நேரத்தில் பல்லாயிரம் தம்பதிகள் இங்கு ஒன்றிணைந்து களிப்படைகின்றனர்.

எப்போதும் களியாட்ட விளையாட்டுக் களமாக இந்த செயற்கை கடற்கரை காட்சியளிக்கிறது. இயற்கை சலித்துவிட்டதால் செயற்கைக்கு அங்கு மவுசு. எப்போதும் மாற்றத்தை நாடுவது மனித இயல்பு.

உலகிலேயே மிகப் பெரிய, மிக வசதியான செயற்கைக் கடற்கரை இதுதான். உலக சாதனையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## மவுசு



↑ இப்போதெல்லாம் நடிகைகளைவிட விளம்பர மொடல் அழகிகளுக்குத்தான் மவுசு. அழகு விஷயத்தில் நடிகைகளுக்கும், மொடல் அழகிகளுக்கும் இடையே போட்டி இருக்கிறது.

திரைப்பட நடிகைகள் மேக்-அப் மூலம்தான் மெருகூட்டப்படுகிறார்கள். மேக்-அப் இல்லையானால் அவர்களை அடையாளமே தெரியாது. ஆனால் மொடல் அழகிகள் இயற்கையாகவே அழகிகள் என்கிறார் மும்பாயின் மொடல் அழகி பத்மா ஷேசாத்திரி.

படத்தில் இருப்பவரும் மொடல் அழகிதான். "கோடி ரூபாய் கொட்டிக் கொடுத்தாலும் சினிமா உலகப் பக்கம் செல்ல மாட்டேன். அங்கு என் சிறகுகளை வெட்டிப் போட்டு விடுவார்கள்" என்கிறார்.

'மொடல்' உலகிலும் செக்ஸ் மீறல்கள் இருக்கின்றன. ஆனால் சினிமா உலகம் மாதிரிக் கிடையாது. சினிமா உலகில் ஒரு பெண் முன்னுக்கு வர முன் நிபந்தனையாக செக்ஸ் ரீதியான அனுசரித்தல் இருக்கிறது. அத்தகைய கட்டாயப்படுத்தல்கள் இங்கே இல்லை என்கிறார் பத்மா ஷேசாத்திரி.

## பிறந்தநாள் வாழ்த்து




### அகில்சன்

நாரந்தனையைச் சேர்ந்த அருள்நேசன்-ஜூலியற் (கலா) தம்பதியினரின் செல்வப் புதல்வன் அகில்சன் இத்தாலியில் உள்ள பலெர்மோவில் 18.04.98ல் தமது இரண்டாவது பிறந்த நாளை விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், டோமினிக் (கொழும்பு), எட்வேட் (இத்தாலி), செபதேவன் (ஜெர்மன்), அன்ரன் கில்வேட் (இத்தாலி), அன்பு தொட்டப்பா, தொட்டம்மா, கர்ணா, வதனி (இத்தாலி) மற்றும் பெரியம்மாமார், மாமிமார், மாமாமார், சித்திமார் யாவரும் இயேசுவின் அருளால் பல கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: பீ.டோமினிக், ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13.

## வீசும் கை

→ இதுவரை ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஸ்ரீநாத் 177 விக்கெட்டுக்களைக் கொய்திருக்கிறார். 134 போட்டிகளில் விளையாடியுள்ளார். துடுப்பாட்டத்தில் 525 ஓட்டங்கள். அதிக ஓட்டம் 53. 18 கேட்ச் பிடித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் 32இல் விளையாடி 100க்கும் அதிகமான விக்கெட்டுக்களை கொய்திருக்கிறார். சிறப்பான பந்து வீச்சு 6/21. 5 விக்கெட்டுக்களுக்கு மேல் இரு தடவை சாய்த்துள்ளார். துடுப்பாட்டத்தில் மூன்று அரைச்சதம் அடித்திருக்கிறார்.



சமீபத்தில் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்த அவுஸ்திரேலிய அணியை டெஸ்ட் தொடரில் தோல்வி அடைய வைத்ததில் ஸ்ரீநாத், அனில் கும்ப்ளே, வெங்கடபதி ராஜூ ஆகிய மூவர் கூட்டணிக்கு முக்கிய பங்கு இருக்கிறது.

முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஜாம் ஜாம் என்று வெற்றிக்கொடி நாட்டிய இந்திய அணி, மூன்றாவது போட்டியில் தோல்வி கண்டது. மூன்றாவது டெஸ்ட்டில் ஸ்ரீநாத் இல்லாததும் தோல்விக்கு ஒரு காரணம் என்று கூறப்பட்டதில் தவறில்லை.

ஒரு நாள் போட்டி, டெஸ்ட் போட்டி இரண்டுக்கும் அணியின் தூண்களில் ஒருவரான ஸ்ரீநாத் மறுபடி முட்டுவலியால் பாதிக்கப்பட்டிருக்கிறார். ... வருவார் என்று இந்திய அணியும், ... ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.